உ

திருச்சிற்றம்பலம்

திருவருட்பிரகாச வள்ளலார்

# திருவருட்பா விரிவுரை

## திருவருள் முறையீடு (முற்பகுதி)

ஒன்பதாம் புத்தகம்

2004

விரிவுரை ஆசிரியர் :

செந்தமிழ்ச்செல்வர், சைவ சமய சிரோமணி, பேராசிரியர்,

வித்துவான் பாலூர் கண்ணப்ப முதலியார், எம்.ஏ., பி.ஓ.எல்.,

தமிழ்த்துறைத் தலைவர், புதுக் கல்லூரி,

சென்னை-14.

வெளியிடுவோர் :

வடார்க்காடு மாவட்ட சமரச சுத்த சன்மார்க்க

சத்திய சங்கம் (பதிவு 52/1966)

வி. கே. விநாயக முதலியார் கல்யாண மண்டபம்

வேலூர், வடார்க்காடு மாவட்டம்

[illegible] : 5

1968 ஏப்ரல்

உரிமையுடையது

விலை ரூ. 1-50

அச்சிட்டோர் :

ரத்னம் கிளை அச்சகம்

65, திருப்பள்ளி தெரு

சென்னை. 1

உ

அருட்பெருஞ்சோதி ! தனிப்பெருங்கருணை !!

# பதிப்புரை

இறையருள் தூண்டுதலால் திரு அருட்பா முழுமைக்கும் 72 பகுதிகளில் விரிவுரை காண முயன்றோம். அதன் பயனாக இதுவரையில் 8 விரிவுரை நூற்கள் வெளிவந்துள்ளன. இப்போது வருவது 9-ஆவது விரிவுரை நூல்.

இது திருவருள் முறையீடு எனும் பகுதி. இது மொத்தம் 232 கட்டளைக் கலித்துறையால் ஆயது. நூல் அளவு கருதி இதனை இரு பகுதிகளாக அச்சிடுகிறோம். இது முற் பகுதி.

இறைவனின் பெருமையையும், உயிர்களின் சிறுமையையும் உணர்ந்து சிறுமை நீங்கி அழியாப் பெரு நலம் வேண்டுவது இதன் உள்ளுறை.

"நெக்கு நெக்கு நினைபவர் நெஞ்சுளே
புக்கு நிற்கும்பொன் னார்சடைப் புண்ணியன்"

"காத லாகிக் கசிந்துகண் ணீர்மல்கி
ஓது வார்தமை நன்னெறிக் குய்ப்பது"

"கற்றாவின் மனம்போலக் கசிந்துருக வேண்டுவனே"

"அழுதால் உன்னைப் பெறலாமே"

என்பன ஆன்றோர் அருள் மொழிகள்.

வள்ளலாரும் பிறிதோரிடத்தில்,

"நினைந்துநினைந் துணர்ந்துணர்ந்து
நெகிழ்ந்துநெகிழ்ந் தன்பே
நிறைந்துநிறைந் தூற்றெழுங்கண்
ணீர்அதனால் உடம்பு

நினைந்துநினைந் தருள்அமுதே
நல்நிதியே ஞான
நடத்தரசே என்னுரிமை
நாயகனே என்று
வனைந்துவனைந் தேத்துதும்நாம்
வம்மின்உல கியலீர்!''

என்று அழைக்கிறார்.

இந் நூலை ஓதி உணர்வார்க்கு இறையருள் கிட்டும் என்பது எமது துணிபு.

இச் சிறந்த பகுதிக்கு விரிவுரை எழுதி உதவியவர் பேராசிரியர், வித்துவான், பாலூர். கண்ணப்ப முதலியார் M.A., B.O.L., அவர்கள். (தமிழ்த்துறைத் தலைவர், புதுக் கல்லூரி, சென்னை) அவர்களுக்கு எம் உளம்கனிந்த நன்றி உரித்தாகுக. இவ் விரிவுரையின் சிறப்பை நூலுள் பரக்கக் காணலாம்.

எம் வேண்டுகோளுக்கிணங்கிப் பல வேலைகளுக் கிடையில் அணிந்துரை வழங்கிய சென்னை உயர் நீதிமன்ற நீதிபதி, செந்நெறிச் செல்வர் இர. சதாசிவம், M.L., அவர்களுக்கும், நாங்கள் கடமைப்பட்டுள்ளோம். மற்றும் இதை அழகுறக் குறித்த காலத்தில் அச்சிட்டு உதவிய ரத்னம் கிளை அச்சகத்தாருக்கும் எம் நன்றியைத் தெரிவித்துக் கொள்ளுகிறோம்.

ஆன்ம நேயர்கள் எமது முன் 8 வெளியீடுகளை வாங்கி எங்களை ஊக்குவித்தது போலவே, இதையும் வாங்கி எங்களை ஊக்குவித்துப் பெருநலம் பெறுமாறு விழைகின்றோம்.

வாழி வள்ளலார் திருவடிகள்.

ஊ. வ. தட்சணாமூர்த்தி,
தலைவர்,
வடார்க்காடு மாவட்ட சமரச சுத்த
சன்மார்க்க சத்திய சங்கம், வேலூர்.

வேலூர்,
27—4—68

திருச்சிற்றம்பலம்

# உரை ஆசிரியர் முன்னுரை

அறிவால் சிவனே என்னும் பெருமைக்குரிய மாணிக்க வாசகர் "சொல்லிய பாட்டின் பொருள் உணர்ந்து சொல்லுவார்" என்று கட்டளை பிறப்பித்திருப்பதை ஊன்றி உணர்கிற போது, அருளாளர்களின் திருப்பாடல்களின் பொருளை உணர்தல் இன்றியமையாதது என்பது நன்கு புலனாகிறது. இந்தக் காரணம் பற்றியே தோத்திர நூல்களுக்கும், சாத்திர நூல்களுக்கும்,—ஏன் இலக்கண இலக்கிய நூல்களுக்கும்— உரைகள் எழுதப் பட்டுள்ளன; எழுதவும் படுகின்றன. இந்த முறைக்கேற்ப வட ஆர்க்காடு மாவட்டத்தைச் சார்ந்த வேலூர் சமரச சுத்த சன்மார்க்க சத்திய சங்கத்தினர் திருவருட்பா முழுமைக்கும் உரை எழுதி வெளியிட வேண்டும் என்று ஒரு திட்டம் வகுத்தனர். இத் திட்டம் நிறைவேறச் சென்னை, குகத்திரு இரசபதி அடிகளாரை அணுகித் தம் கருத்தைச் சங்கத்தார் அறிவிக்க, அடிகளாரும் உளம் உவந்து உரை எழுத ஒவ்வித் திருவடிப் புகழ்ச்சி, விண்ணப்பக் கலிவெண்பா, நெஞ்சறிவுறுத்தல், சிவநேச வெண்பா ஆகிய இந்நான்கு நூல்களுக்கும் முற்றிலும் உரை எழுதி முடித்து, ஐந்தாவதாக மகாதேவ மாலைக்கும் உரை எழுதத் தொடங்கி எண்பத்தைந்தாவது பாடல்கள் வரையிலும் உரை எழுதி ஏனைய பாடல்களுக்கும் விரிவுரை வரைந்து முடிப்பதற்கு முன்பு, கூத்தப் பெருமானின் குஞ்சித்த சேவடியில் இன்புறும் நிலையை எய்தினர்.

இந்த நிலையில், வேலூர் சமரச சுத்த சன்மார்க்க சத்திய சங்கத்தின் தலைவர் திருக்குறள் நம்பி, திரு. ஊ. வ. தட்சணாமூர்த்தி முதலியார் அவர்கள், குகத்திரு. இரசபதி அடிகளார் எழுதாது விட்ட பதினைந்து பாடல்களுக்கு (எண்பத்தாறு முதல் நூறாவது பாடல்கள் வரை) அடியேனை உரை எழுதுமாறு அன்புடன் வேண்டினர். இஃது இறைவன் திருவருள் சம்மதம் போலும் என்று எண்ணி அவ் வேண்டுகோட்கு இணங்கி மகாதேவ மாலையில் ஈற்றில் உள்ள பதினைந்து பாடல்களுக்குத் திருவருள் துணைகொண்டு உரை எழுதி முடித்தனன்.

பிறகு சங்கத்தின் தலைவர் திரு. ஊ. வ. தட்சணாமூர்த்தி முதலியார் அவர்கள், தொடர்ந்து திருவருள் முறையீட்டிற்கும்,

வடிவுடைமாணிக்க மாலைக்கும் உரை எழுத வேண்டினர். அவ் வேண்டுகோளையும் ஏற்றுத் திருவருள் முறையீட்டிற்கும் உரை எழுதத் தொடங்கினன். திரு. முதலியார் அவர்கள் திருவருள் முறையீட்டில் உள்ள இருநூற்று முப்பத்திரண்டு பாடல்கட்குரிய உரையினை ஏறக்குறைய பத்துப் பாரத்தில், அதாவது நூற்று அறுபது பக்கத்தில் முடிக்குமாறு கூறினர். ஆனல் பற்பல பாடல்களுக்கு இன்றியமையாத விளக்கங்களை எழுத வேண்டி இருந்தமையின், அவர் விரும்பியபடி பத்துப் பாரத்தில் உரை முற்றுப் பெறுதற்கு இயலாமல் போயிற்று. ஆகவே இந்த முதல் பகுதி 119 பாடல்களுக்குரிய உரையினைமட்டும் கொண்டு வெளிவருகிறது. எஞ்சியுள்ள பாடல்களுக்குரிய உரை விளக்கம், அடுத்த பகுதியில் நிறைவுறும்.

என்னல் எழுதப்பட்டு வெளிவரும் இந்த உரை, ஒவ்வொரு செய்யுளும் பொழிப்புரையும், அருஞ்சொல் விளக்கமும், இலக்கணக் குறிப்பும், விசேட உரையும் கொண்டு திகழ்கிறது என்பதைப் பணிவன்புடன் தெரிவித்துக் கொள்கின்றேன்.

இவ்வாண்டு ஜூன் மாதம் முதற்கொண்டு கல்லூரியினின்று விலகி, ஓய்வு பெறும் நிலையுற்றுள்ள என்னை, யான் வழிபடும் முழுமுதற் பரம்பொருளாம் அம்மை அப்பர் திருவருள் சுரந்து, வேலூர் சமரச சுத்த சன்மார்க்க சத்திய சங்கத்தார் வழி, அரிய பெரிய அருள் நூலாம் திருவருட்பாவிற்கு உரை எழுதப் பணித்தமைக்கு அப்பெருமானரின் பொன்னர் திருவடிகளை வந்தித்து வாழ்த்தி வணங்குகின்றேன். இச் சங்கத்தாருக்கும் என் நன்றி அறிதலான வணக்கத்தை அறிவித்துக் கொள்ளுகின்றேன். அருட்பெருஞ்சோதியின் மலர் அடிகளை மறவாத ஆன்மநேய ஒருமைப்பாட்டை அவாவும் அன்பர்கள், ஷை சங்கத்தார் வெளியிடும் உரை நூல்களை வாங்கி அவர்களுடைய அரும் பெருந்தொண்டிற்கு ஆக்கமும், ஊக்கமும் அளிக்க வேண்டிக்கொள்கின்றேன்.

43, விஜயவிக்னேசுவரர்
கோவில் தெரு,
சூளை, சென்னை-7.
27—4—68.

இங்ஙனம்,

பாலூர்-கண்ணப்ப முதலியார்.

சென்னை உயர் நீதிமன்ற நீதிபதி
திரு. இர. சதாசிவம்,

சென்னை,
15—4—1968

# சிறப்புரை

வடார்க்காடு மாவட்ட சமரச சுத்த சன்மார்க்க சத்திய சங்கம், அருட் பிரகாச வள்ளலார் இராமலிங்க சுவாமிகள் புகட்டியருளிய சன்மார்க்கப் பெரு நெறியை நமது நாட்டில் பரவச் செய்யவென ஆற்றும் பணிகள் பல. அப்பணிகளில் மிகவும் போற்றத்தக்கது வள்ளலார் இயற்றியருளிய திருவருட்பா முழுவதற்கும் தெளிவுரையினைத் தக்க பெரியாரைக் கொண்டு நூல் வடிவில் 72 பகுதிகளாக ஒவ்வொரு திங்களும் வெளியிட வேண்டுமென்ற பெரும் நோக்கமே ஆகும்.

"எண்ணிய நான் எண்ணியவாறு எனக்கருளும் தெய்வம்" என்னும் பொன்னுரை திருவருட்பாவினைத் தம் உள்ளத்தில் நிறுத்தி, இனித் தமக்குப் பிறவியில்லை என்ற முழு நம்பிக்கையுடன் திரு. ரசபதியவர்கள் திருவருட்பா விரிவுரை எழுதத் முனைந்தாரென்பது, திருவருட்பாவின் முதல் திருமுறையில் முதல் பகுதியாகிய "திருவடிப்புகழ்ச்சி" எனும் முதல் புத்தகத்திற்கு அவர் எழுதியுள்ள முன்னுரையிலிருந்தே புலப்படும். நான் அந்த முதல் புத்தகத்திற்குச் சிறப்புரை எழுதினேன். அது 1967ஆம் ஆண்டு தைப்பூசத் திருநாளில் வெளியிடப்பட்டது. திருவருட்பாவின் முதல் திருமுறையில் முதல் ஐந்து பகுதிகளாகிய திருவடிப் புகழ்ச்சி, விண்ணப்பக் கலிவெண்பா, நெஞ்சறிவுறுத்தல், சிவநேச வெண்பா, மகாதேவ மாலை ஆகிய இவை, எட்டு விரிவுரை நூல்களாக வெளிவந்துள்ளன. "திருவருண் முறையீடு" ஒன்பதாவது புத்தகமாகப் பேராசிரியர் பாலூர் கண்ணப்ப முதலியார் அவர்கள் விரிவுரையுடன் வெளியிடப்படுமென்றும், அதற்கு நான் முகவுரை எழுதவேண்டும் என்றும் நான் எதிர்பார்க்க வில்லை. இதற்குக் காரணம், திரு. ரசபதி அவர்கள் தமக்கு மறு பிறவி இல்லையென்று எண்ணியதற்கேற்ப, வடலூரில் சென்ற தைப்பூச விழாவில் கலந்துகொண்டு வீடு திரும்பியதும் பரிபூரண நிலை எய்தியதே யாகும்.

பேராசிரியர் பாலூர் கண்ணப்ப முதலியார் பல நூல்கள் இயற்றியும், சொற்பொழிவுகளாற்றியும், தமிழுக்கும் சமயத்திற்கும் பாராட்டுதற்குரிய முறையில் தொண்டாற்றி வருகிறார். எளிதில் புரிந்துகொள்ள முடியாத திருமூலர் திருமந்திரத்தில் 365 செய்யுட்களுக்கு, படிப்பவர்கள் எளிதில் அறிந்துகொள்ளும் வகையில் பொருள் எழுதியிருக்கிறார். எந்த ஆசிரியர் தம் மாணவர்கள் புரிந்துகொள்ளும்படி பாடல்களைப் போதிக்கின்றாரோ, அந்த ஆசிரியரே தம் பணியைச் சரிவரவும், வெற்றிகரமாகவும் செய்பவர் என்னும் கருத்தைப் பேராசிரியர் பாலூர் கண்ணப்ப முதலியார் கடைப்பிடிப்பவர் என்பது திருவருட்பா முதல் திருமுறை ஆறும் பகுதியான "திருவருண் முறையீடு" என்னும் பாகத்திற்கு அவர் எழுதியுள்ள ஒன்பதாம் விரிவுரை நூலின் வாயிலாக விளங்கும். பொழிப்புரையையும், விசேட உரையையும் மட்டும் கொடுப்பதோடன்றி, அருஞ்சொற்களையும், இலக்கணக் குறிப்புகளையும் உரையாசிரியர் விளக்கியிருப்பது ஒரு சிறப்பான மாறுதலாகும்.

திரு. இராமலிங்க சுவாமிகளின் அருளுரைகள் பலவும், அவர் வாழ்க்கை வரலாற்றின் சில பகுதிகளும், கடவுள் வழிபாட்டு முறையும், திருவருள் முறையீட்டில் காணப்பெறுகின்றன. திருவருட்பாவின் ஏனைய 64 பாகங்களும் வடார்க்காடு சமரச சுத்த சன்மார்க்க சங்கத்தின் திட்டப்படி பேராசிரியர் பாலூர் கண்ணப்ப முதலியார் அவர்கள் உதவியுடன் இனிதே நிறைவேற வேண்டுமென்று இறைவன் திருவருளை இறைஞ்சுகிறேன்.

"நான்செய்த புண்ணியம் யாதோ சிவாய நமஎனவே
ஊன்செய்த நாவைக்கொண் டோதப்பெற் றேன்எனை
ஒப்பவர் ஆர்."

இர. சதாசிவம்.

உ

திருச்சிற்றம்பலம்

# திருவருள் முறையீடு

## தோற்றுவாய்

திருவருட்பாவின் முதல் திருமுறையில் ஆறுவதாகத் திகழும் பகுதியே திருவருள் முறையீடாகும். முறையீடாவது குறைகளை அன்பும் அருளும் காட்டுவாரிடத்தில் கூறிக் கொள்வது. இந்த முறையீடு, வள்ளலார் சிவபெருமானிடத்தில் தம் குறைகளைக் கூறி முறையிட்டுக் கொள்ளும் முறையில் அமைந்துள்ளது.

இறைவனுடைய திருவருளைப் பெற வேண்டி முறையிட்டுக் கொள்வதனால் இது திருவருள் முறையீடு என்று பெயர் சூட்டப்பட்டது.

திருவருள் என்பது இறைவனையும் குறிக்கும் தொடர் ஆகும். ஆகவே, கடவுள் முன் நம் குறைகளைச் சொல்லி முறையிடுவது என்று இத்தொடர்க்குப் பொருள் கூறினும் கூறலாம்.

திரு என்பது முத்தித் திருவையும் குறிக்கும். ஆதலின், அந்த முத்தித் திருவாகிய அருளைப்பெற முறையிட்ட முறையீடு என்று இத்தொடரை விளக்கினும் விளக்கலாம்.

திரு இறைவியையும், அருள் இறைவனையும் குறிப்பதாகக் கொண்டு, அவ்விருவரையும் நோக்கிக் குறைகளைக் கூறி முறையிட்ட முறையீடு என்று பொருள் காண்பதற்கும் இத்தொடர் இடம் கொடுக்கும்.

இன்னோரன்ன பொருள் பொலிவுடைய இந்தத் திருவருள் முறையீட்டுப் பகுதியில் இருநூற்று முப்பத்திரண்டு பாடல்கள் உள்ளன. இப் பாடல்கள் யாவும் கட்டளைக் கலித்துறை என்னும் யாப்பால் அமைந்தவை.

கட்டளைக் கலித்துறைப் பாட்டு, நான்கு அடிகளைக் கொண்டு, ஒவ்வோர் அடியும் ஐந்து ஐந்து சீர்களைப் பெற்று, ஈற்றடியின் ஈற்றுச்சீர் மட்டும் ஏகாரத்தால் முடியும்.

இந்த அளவிலும் இந்தப் பாட்டின் இலக்கணம் அமைவதன்று. ஒவ்வோர் அடியின் ஈற்றுச்சீர் விளங்காய்ச் சீராக இருக்கவேண்டும். இத்துடன் இன்றி ஒவ்வோர் அடியிலும் இயற்சீர் வெண்தளையும் வெண்சீர் வெண்தளையும் பொருந்தி வர வேண்டும்.

இன்னோரன்ன இலக்கணங்களைப் பொருந்தப் பெற்று வருவதே கட்டளைக் கலித்துறையாகும். கட்டளைக் கலித்துறைக் குரிய இலக்கணத்துடன் அமைந்த பாடலின் ஒவ்வோர் அடியின் முதல் சீர் நேர் அசையில் தொடங்கினால், ஒவ்வோர் அடியிலும் பதினாறு எழுத்துகளும், நிரை அசையில் தொடங்கினால் பதினேழு எழுத்துகளும் அமைந்திருக்கும். எழுத்துகளை எண்ணும் போது, தலையில் புள்ளி பெற்ற மெய் எழுத்துகளை நீக்கி எண்ணுதல் வேண்டும்.

அடிஅடி தோறும் ஐஞ்சீர் ஆகி
முதல்சீர் நான்கும் வெண்தளை பிழையாக்
கடையொரு சீரும் விளங்காய் ஆகி
நேர்பதி னாறே நிரைபதி னேழ்என்று
ஓதினர் கலித்துறை ஓர்அடிக் கெழுத்தே.

என்னும் நூற்பாவை இங்குக் கருதுக.

இந்த இலக்கண விதிக்குச் சிறிதும் தவறாத நிலையில் திருவருள் முறையீட்டில் அமைந்த கட்டளைக் கலித்துறைப் பாக்கள் அமைந்திருப்பதை உற்று நோக்கவும்.

வெண்சீர் வெண்தளை, இயற்சீர் வெண்டளை நேர் அசை நிரை அசை ஆகிய இவற்றின் விளக்கங்களைத் தெளிவுறக் காண விரும்பின் யாப்பிலக்கண நூலில் காண்க.

திருச்சிற்றம்பலம்

## நூல்

திருச்சிற்றம்பலம்

**அருள்அர சேஅருள் குன்றேமன் றாடும் அருள்இறையே**
**அருள்அமு தேஅருள் பேறே நிறைந்த அருள்கடலே**
**அருள்அணி யேஅருள் கண்ணேவிண் ஓங்கும் அருள்ஒளியே**
**அருள்அற மேஅருள் பண்பேமுக் கண்கொள் அருள்சிவமே!**

(பொழிப்புரை) "அருள் நிறைந்த அரசே! அருளுடைய குன்றே! சிதம்பரப் பொற் சபையில் திருக்கூத்துப் புரிகின்ற அருள்நிறைந்த இறைவனே! அருள் வாய்ந்த தேவாமுதமே! அருள்புரியவே விளங்கும் எங்கள் பாக்கியமே! அருளே நிறைந்த கடலே! அருளை அணிகலமாக உடையவனே! அருள் நிறைந்த கண்ணே! சிதாகாசத்தில் விளங்கும் அருள் பெருஞ் சோதியே! அருளாகிய அறக் கடவுளே! அருள்குண முடையவனே! மூன்று கண்களைக் கொண்ட சிவபரம் பொருளே!" (என்பது.)

(அருஞ்சொல்) மன்று - சிதம்பரத்தில் உள்ள பொன் அம்பலம். பேறு - பாக்கியம். அணி - ஆபரணம். விண் - ஆகாயம். சிவம் - என்றும் மங்களப் பொருளாய் உள்ள பரம்பொருள்.

(விசேட உரை) இப்பகுதி திருவருள் முறையீடு என்னும் பெயர்க்கு ஏற்ப, முதல் பாடலில் அருள் என்னும் சொல் பன் முறை அமைந்திருத்தலைக் காணவும். இதில் சிவபெரு மானை அரசே, குன்றே, இறையே, அமுதே, பேறே, கடலே, அணியே, கண்ணே, ஒளியே, அறமே, பண்பே, சிவமே எனப் பன்னிரண்டு சொற்களால் விளித்துள்ள அருமை மிக மிக உற்றுநோக்குதற்குரியதாகும். அதாவது, இறைவன் பிரம்ம ரந்திரத்திற்கு மேல் பன்னிரண்டு தானங்களுக்கு அப்பால் விளங்குவன் என்பதாம். இந்த உண்மையினைக் குமர குருபர

சுவாமிகளும் "துவாதசாந்தப் பெருவெளியில் துரியம் கடந்த பரநாத, மூலத்தலத்து முளைத்த முழுமுதலே" என்றனர். இறைவன் இந்தத் தானத்தில் இறைவியுடனும் திகழ்வான் என்னும் உண்மையினையும் குமர குருபரர் "இருவரும் உற்றிடு துவாதசாந்தத்தொரு பெருவெளி" என்று கூறியுள்ளதையும் உணரவும். இத்தத் தானத்தில் இறைவனை வணங்க வேண்டும் என்னும் குறிப்பைப் பரஞ்சோதியாரும்,

தென்தமிழ் ஆல வாய்த்தனிப்
பதியைச் சென்னிமேல் பன்னிரண் டும்பர்
ஒன்றவைத் திமையா அம்கயல் கண்ணி
உடன்உறை ஒருவனை நினைந்தான்.

என்று அறிவித்துள்ளனர். இந்த அரிய குறிப்புகளை உள்ளடக்கியே இப்பாடலில் இறைவனைப் பன்னிரண்டு சொற்களால் விளித்தார் என்க. துவாதசாந்தத் தலத்து விளங்கும் பொருள், சிவமே அன்றி வேறன்று என்னும் கருத்தை வற்புறத்தவே செய்யுளின் ஈற்றில் சிவம் என்னும் சொல்லை அமைத்தே பாடலை முடித்துள்ளனர். சிவமெனும் சொல் சிவபெருமானைத் தவிர்த்து வேறு எத்தேவர்க்கும் பொருந்தாது. இது குறித்தே அப்பர், "சிவன் எனும் நாமம் தனக்கே உரிய செம்மேனி அம்மான்" என்று அறுதியிட்டு உறுதிப் படுத்தினர்.

அருள் என்னும் சொல்லை அரசே, குன்றே முதலான சொற்களுக்கு அடைமொழியாகக் கொள்ளாமல் அரசே, அருள், குன்றே அருள் என்று கொண்டு, அருள் என்பதற்கு அருள்வாயாக என்று பொருள் காணினும் காணலாம். மன்று என்பதற்கு உலகமாகிய அரங்கு என்று பொருள் கூறினும் பொருத்தமே.

சிவன் அன்றி அருள் இல்லை என்னும் உண்மை,

'அருள்அல்ல தில்லை அரன்அவன் அன்றி
அருள்இல்லை' என்றும்,

" அருளால் அமுதப் பெருங்கடல் ஆட்டி
அருளால் அடிபுனைந் தார்வமும் தந்திட்
டருளான ஆனந்தத் தாரமு தூட்டி
அருளால் என்னந்தி அகம்புகுந் தானே "

என்றும் திருமந்திரம் கூறுதல் காண்க. (1)

**துனியால் உளம்தளர்ந் தந்தோ துரும்பில் சுழல்கின்றேன்
இனியா கினும்இரங் காதோநின் சித்தம்எந் தாய்இதென்ன
அனியாய மோஎன் அளவில்நின் பால்தண் அருள்இலையோ
சனியாம்என் வல்வினைப் போதனை யோஎன்கொல் சாற்றுவதே?**

(பொ - ரை.) "என் தந்தையே! உன் அருள் கிடைக்குமோ? கிடைக்காதோ? என்னும் அச்சத்தால், ஐயோ! நான் மனம் தளர்ந்து காற்றில் அகப்பட்ட துரும்புபோல் சுழல்கின்றேன். உன் மனம் இனியாகிலும் என்மீது இரக்கம் காட்டாதோ? நீ இன்னமும் இரக்கம் காட்டாதது அனியாயமாக இருக்கிறதே. என் அளவில் உன்னிடம் நல் அருள் இல்லை போலும்! உனக்கு ஒருவேளை சனிபோன்ற என் தீவினை உன்னிடம் வந்து எனக்கு அருள் செய்ய வேண்டா என்று போதிக்கின்றதோ? என்ன என்று சொல்வது? ஒன்றும் புரியவில்லையே." (எ - து).

(அ - சொ ) எந்தாய் - என் தந்தையே. துனி - அச்சம். தண் அருள் - நற் கருணை. சாற்றுவது - சொல்வது. என் கொல் - என்ன? நின்பால் - உன்னிடம்.

(இலக்கணக் குறிப்பு) என் தந்தாய், என்பது எந்தாய் என்றானது; மரூஉ வழக்கு. நின்பால் என்பதில் உள்ள பால், ஏழாம் வேற்றுமை உருபு. என்கொல் என்பதில் உள்ள கொல், அசைச் சொல். வினாப் பொருளைத் தரும் இடைச் சொல் என்று கூறுவாரும் உளர். என் என்பதே வினாவாதலின், கொல் வெறும் அசைச் சொல்லே ஆகும். (2)

**என்னே முறைஉண் டெனில்கேள்வி உண்டென்பர் என்அளவில்**
**இன்னே சிறிதும் இல்லையேநின் பால்இதற் கென்செய்குவேன்**
**மன்னேமுக் கண்ணுடை மாமணி யேஇடை வைப்பரிதாம்**
**பொன்னேமின் நேர்சடைத் தன்னேர் இலாப்பரி பூரணனே!**

(பொ - ரை.) "மின்னலுக்கு ஒப்பான ஒளியுடைய சடை அமைந்த ஒப்புயர்வற்ற முழுப் பொருளாம் இறைவனே! அரசே! மூன்று கண்களை யுடைய உயர்ந்த மாணிக்கமே! பொன்னே! உலகில் யாரேனும் முறையிட்டால், அம்முறையைக் கேட்டு அருள்பவர் உளர் என்று உலகர் கூறுவர். என்னைப் பொருத்த மட்டில், என் முறையீட்டை நீ கேட்பதற்குச் சிறிதும் உன்னிடம் மனம் இல்லை போலும்! என்ன ஆச்சரியம் இது! நீ இங்ஙனம் என்னைப் பற்றிப் பராமுகமாய் இருந்தால், நான் என்ன செய்வேன்? என்றால் ஒன்றும் செய்ய இயலாது அன்றோ!" (எ - து).

(அ - சொ.) முறை - முறையீடு. இன்னே - இப்போது. மா - உயர்ந்த. வைப்பு - வைத்தல். நேர் - ஒப்பு. பரிபூரணம் - முழுமை.

(வி - ரை.) பொன்னாபரணத்தைச் சிற்சில வேளைகளில் கழற்றி வைப்பதும் உண்டு. ஆனால், இறைவனாகிய பொன்னை நம்மினின்று பிரித்துவைக்க முடியாது. இது குறித்தே ஈண்டு, "இடைவைப்பரிதாம் பொன்னே" எனப்பட்டது.(3)

**தண்டாத சஞ்சலம் கொண்டேன் நிலையைஇத் தாரணியில்**
**கண்டார் இரங்குவர் கேட்டார் உருகுவர் கங்கைதிங்கள்**
**துண்டார் மலர்ச்சடை எந்தாய் இரங்கிலை தூய்மைஇலா**
**அண்டார் பிழையும் பொறுப்போய் இதுநின் அருட்கழகே.**

(பொ-ரை.) "கங்கை ஆற்றையும், பிறைச் சந்திரனையும், மலர்களையும் கொண்ட சடைமுடியுடைய என் தந்தையே!

மனத் தூய்மை இல்லாத தேவர்களின் தவறுகளைப் பொறுப் பவனே! ஒழியாத துன்பம் கொண்டுள்ள என் நிலையை இவ்வுலகில் உள்ள மக்கள் கண்டால், இரக்கம் கொள்வர். என் துயரைக் கேட்டவர்களும் மனம் உருகுவர். ஆனால், நீ சிறிதும் என்னைக் குறித்து மன இரக்கம் கொள்ளவில்லையே, இவ்வாறு நீ இருப்பது உன் பெருந்தன்மைக்கு அழகாகுமா?" (எ – து.)

(அ - சொ.) தண்டாத - நீங்காத. தாரணி - உலகம். (ஈண்டு உலக மக்கள்) திங்கள் துண்டு - பிறைச் சந்திரன். தூய்மை சுத்தம். அண்டார் - தேவர். ஆர் - பொருந்திய.

(இ - கு.) அண்டர் என்பது எதுகை நோக்கி அண் டார் என்றாயது நீட்டல் விகாரம். அழகே என்பதன் ஏகாரம் வினா.

(வி - ரை.) அண்டார் என்பதற்கு நெருங்காதவர் என்று பொருள் கூறினும் பொருந்தும். கங்கை உலகை அழிக்கும் வேகத்தோடு வந்தபோது, அதனைச் சிவபெருமான் தன் சடையில் ஏற்று அதன் வேகத்தை அடக்கினார். தட்சன் சாபத்தால் சந்திரன் தன் பதினாறு கலைகளையும் இழக்கும் நிலையில், பதினைந்து கலைகளும் இழந்து ஒரு கலையுடன் சென்று சிவபெருமானை அடைய, அவர் அவனைத் தம் சடையில் அவ்வொரு கலையையும் அவன் இழக்காதபடி காத்தார். இந்த இரு வரலாற்றுக் குறிப்பே கங்கை திங்கள் துண்டு ஆர் மலர்ச்சடை என்னும் தொடரில் அமைந்துளது. (4)

**பொய்யாம் உலக நடைநின்று சஞ்சலம் பொங்கமுக்கண்**
**ஐயாஎன் உள்ளம் அழல்ஆர் மெழுகொத் தழிகின்றதால்**
**பையார் அரவம் மதிச்சடை யாய்செம் பவளநிறச்**
**செய்யாய் எனக்கருள் செய்யாய் எனில்என் செய்குவனே?**

(பொ - ரை.) "முக்கண் படைத்த முதல்வா! படமுடைய பாம்பைச் சந்திரனுடன் சடையில் வைத்துள்ள இறைவனே! சிவந்த பவளத்தைப் போன்ற செந்நிறம் படைத்த திருமேனி யுடையவனே! பொய்யும் பித்தலாட்டமும் நிறைந்த உலகில் அகப்பட்டுக்கொண்டு, அதனால் துயரம் மிக, என் மனம் தீயில்பட்ட மெழுகு போல உருகி அழிகின்றது. இந்த நிலையில் நீ எனக்கு அருள் செய்யவில்லை என்றால், நான் என்ன செய்வேன்?" (எ - து.)

(அ - சொ.) பை - படம். அரவம் - பாம்பு. மதி - சந்திரன். முன்னுள்ள செய்யாய் - என்பதற்குச் செந்நிறமுடையோய் என்பது பொருள். அடுத்துள்ள செய்யாய் என்பதற்குச் செய்யவில்லை என்பது பொருள்.

(இ - கு.) அழிகின்றது + ஆல் எனப் பிரித்து ஆல் என்பதை அசைச் சொல்லாகக் கொள்க. ஏகாரம் ஈற்றசை.

(வி - ரை.) சந்திரனும் பாம்பும் ஒன்றுக்கொன்று பகையுடையன. (அதாவது இராகு கேதுவாகிய பாம்புகள் சந்திரனைக் கிரக காலங்களில் பற்றிச் சந்திரனின் ஒளியைக் குறைக்கின்றன என்பதாம்) "அத்தகைய பொருள்களையும் ஒன்று படுத்தி வைத்துள்ளனையே" என்று கூறி இறைவனது அருள் ஆற்றலை வியந்தவாரும்.

சிவபெருமான் தாருகா வனத்து இருடிகள் ஏவிய பாம்பை ஏற்று அஃவற்றைத் தன் உடம்பில் அணிந்துகொண்டான் என்பது புராண கதை. நஞ்சுடைய பாம்பை ஏற்றருளியது போல என்னையும் ஏற்றருளக் கூடாதா என்பது நமது ஐயாவின் வேண்டுகோள். (5)

**விடம்மிலை ஏர்மணி கண்டாநின் சைவ விரதம்செய்யத்**
**திடம்இலை யேஉன் செறிவிலை யேஎன்றன் சித்தத்துநின்**
**நடம்இலை யேஉன்தன் நண்பிலை யேஉனை நாடுதற்கோர்**
**இடம்இலை யேஇதை எண்ணிலை யேசற் றிரங்கிலையே !**

(பொ - ரை.) "திருப்பாற்கடலில் தோன்றிய விடத்தை உண்டு, அதனைக் கழுத்தில் தங்கவைத்த அழகிய நீலகண்ட மூர்த்தியே! உன் அருளைப் பெறுதற்குத் துணையாக இருக்கும் சிவராத்திரி விரதம், சோமவார விரதம் முதலான சைவ நோன்புகளை மேற்கொள்ள எனக்கு உடல் வன்மை இல்லையே. என் மனத்தில் நிறைவு என்பதும் இல்லையே. என் மனத்தில் நீ செய்யும் ஆனந்த நடனக் காட்சி தரிசனம் ஆகவில்லையே. உன்னிடம் எனக்கு விருப்பம் ஏற்பட வில்லையே. உன்னை அணுகி ஈடேறுவதற்கு எனக்கு வழிவகை தெரியவில்லையே. இவ்வாறான என் இரக்கமான நிலையினைப்பற்றி நீ சற்றேனும் என்மேல் இரக்கங்கொள்ள வில்லையே. இது முறையோ?" (எ - து.)

(அ - சொ.) மிலை - தங்கவைத்த. ஏர் - அழகு. மணி - நீலமணி. கண்டம் - கழுத்து. செறிவு - நிறைவு. நடம் - நடனம். நட்பு - சிநேகம், விருப்பம்.

(இ - கு.) ஏகாரங்கள் அசைகள்.

(வி - ரை.) தேவர்களும் அசுரர்களும் வாசுகி என்னும் பாம்பைக் கயிறாகவும், மைந்நாக மலையை மத்தாகவும் கொண்டு திருப்பாற்கடலைக் கடைந்தபோது, பாம்பு விடத்தைக் கக்கியது. அதனைக்கண்ட பிரமன், திருமால்,முதலான தேவர்களும், அசுரர்களும் அஞ்சி ஓடியபோது.சிவபெருமான் அந்த விடத்தை உண்டு தேவர்களைக் காத்தனர். "கொடிய விடத்தை உண்டு தேவர்களைக் காத்த இறைவா! என்னையும் ஏற்றுக் காக்கக்கூடாதா?" என்பது நம் ஐயாவின் வேண்டுகோள்" (6)

விண்ணுடை யாய்வெள்ளி வெற்புடை யாய்மதி மேவுசடைக்
கண்ணுடை யாய்நெற்றிக் கண்ணுடை யாய்அருள் கண்ணுண்டயாய்
பண்ணுடை யாய்திசைப் பட்டுடை யாய்இடப் பாலில்அருள்
பெண்ணுடை யாய்வந்திப் பிட்டுடை யாய்என் பெருஞ்செல்வமே!

(பொ - ரை.) "ஆகாயத்தை இடமாக உடையவனே! வெள்ளி மலையினை இடமாகக்கொண்டவனே! சந்திரனைச் சடையில் சூடியவனே! நெற்றியில் கண்ணைப் பெற்றவனே! அருள் பார்வை யுடையவனே! இசைவடிவாய் இருப்பவனே! திசைகளையே பட்டாடையாக உடுத்தியவனே! இடப்பக்கத்தில் அருளே வடிவாயுள்ள பார்வதி தேவியை உடையவனே! வந்திக் கிழவியின் பிட்டை வாங்கி உண்டவனே! என் செல்வமே!" (எ து.)

(அ - சொ.) விண் - ஆகாயம். வெற்பு - மலை. பண் - இசை. இடப்பால் - இடப்பக்கம்.

(இ - கு.) சடைக்கண், இடப்பால் என்பவற்றுள் உள்ள கண்பால் இரண்டும் ஏழாம் வேற்றுமை உருபுகள்.

(வி - ரை.) இறைவன் பரவெளியில் விளங்குதலின் விண்ணுடையாய் எனப்பட்டான். இறைவன் இசை வடிவினன். சுந்தரரும் "ஏழிசையாய், இசைப்பயனாய்" என்று கூறியதையும் காண்க. இறைவனுக்கு ஆடை திசைகளே. இது குறித்தே அவன் திகம்பரன் என்றும் கூறப்படுவான். திக்கு + அம்பரம், அம்பரம் ஆவது ஆடை. இறைவியின் திருமேனி ஏனைய உலகப் பெண்களைப் போலவோ, தெய்வமங்கையரைப் போலவோ எலும்பு, தோல் முதலியவற்றால் ஆனது அன்று. அவளுக்கு அருளே திருமேனியாக அமைந்துளது. "அருளது சக்தியாகும்" என்பது சிவஞான சித்தியார். ஆகவே, 'அருள் பெண்' என்று இங்கு உணர்த்தப்பட்டது.

மதுரை வைகை யாற்றில் வெள்ளம் பொங்கியது. அதனால் கரைகள் உடைப்பெடுத்தன. கரைகளை அடைக்க மதுரை மக்கள் ஈடுபட்டனர். இந்த நிலையில் அவ்வூரில் இருந்த வந்தி என்னும் தொண்டு கிழவி தன் பங்கை அடைப்பதற்கு ஆளை அனுப்ப இயலாமல் திகைத்தாள். அவளுக்கு உற்றார் உறவினர் இல்லை. அவள் பிட்டு விற்று வாழ்ந்தவள். இந்நிலையில் மதுரைச் சொக்கலிங்கப் பெருமான் வந்தியின் பொருட்டுக் கூலியாளாக வந்து வந்திக்கிழவி கொடுத்த பிட்டையே கூலியாகக் கொண்டு கரையினை அடைக்க முற்பட்டனர். இந்த வரலாறே "வந்திப் பிட்டுடையார்" என்னும் தொடரில் அமைந்துளது. இதன் முழு வரலாற்றைத் திருவிளையாடல் புராணத்தில் பிட்டுக்கு மண் சுமந்த படலத்தில் காண்க. இவ்வளவு எளிமையுடைய இறைவர், என் பொருட்டும் இரக்கம் காட்டக்கூடாதா? என்பது நமது வள்ளலாரின் வேண்டுகோள். இப்பாட்டு முழுமையும் இறைவனை விளித்த அமைப்பில் அமைந்துள்ளது. (7)

**விடையுடை யாய்மறை மேல்உடை யாய்நதி மேவியசெஞ்**
**சடையுடை யாய்கொன்றைத் தாருடை யாய்கரந் தாங்குமழுப்**
**படையுடை யாய்அருள் பண்புடை யாய்பெண் பரவையின்பால்**
**நடையுடை யாய்அருள் நாடுடை யாய்பதம் நல்குகவே.**

(பொ - ரை.) "இடப வாகனத்தையுடையவனே! வேதத்தின் உச்சியில் விளங்குபவனே! கங்கை ஆறு பொருந்திய சடையுடையவனே! கொன்றை மாலையை அணிந்தவனே! கையில் மழு என்னும் ஆயுதத்தைத் தாங்கியவனே! அருள் குணம் கொண்டவனே! பரவை நாச்சியாரின் ஊடலைத் தீர்க்க அவ்வம்மையார் மாளிகைக்கு இருமுறை நடந்தவனே! அருளாகிய சிவலோகத்தை யுடையவனே! உன் திருவடிப் பேற்றை எனக்கு அருள்வாயாக." (எ - று.)

(அ - சொ.) விடை - இடபம். மறை - வேதம். தார் மாலை. படை - ஆயுதம். நாடு - சிவலோகம். பதம் திருவடி. நல்குக - தந்தருள்க.

(இ - கு.) பரவையின்பால், பால் ஏழன் உருபு. பாதம் என்பது பதம் எனக் குறுகியது குறுக்கல் விகாரம். நல்குக வியங்கோள் வினைமுற்று, ஏகாரம் ஈற்றசை.

(வி - வுரை.) வேதாந்தத்தின் உச்சியே ஈங்கு "மறை மேல்" எனப்பட்டது. அதாவது உபநிடதம் கொன்றை இறைவனுக்கு அடையாள மாலை.

சுந்தரர் பரவை நாச்சியாரை மணந்திருந்தும், திருவொற்றியூரில் இருந்த சங்கிலி நாச்சியாரையும் மணந்து கொண்டனர். இதனை அறிந்த பரவை நாச்சியார், சுந்தரரைத் தம் மாளிகையில் ஏற்க மறுத்துவிட்டனர். இதனால் மனம் உடைந்த சுந்தரர், திருவாரூர்த் தியாகேசனிடம் முறையிட இறைவர், சுந்தரர்பொருட்டு இருமுறை பரவை நாச்சியார் மாளிகைக்குச் சென்று அவ்வம்மையார் சுந்தரரிடம் கொண்ட பிணக்கை நீக்கிச் சுந்தரரை வரவேற்க ஏற்பாடுகளைச் செய்தார். இந்த வரலாறே "பெண் பரவையின்பால் நடையுடையாய்" என்னும் தொடரில் அமைந்துள்ளது. இவ்வரலாற்றின் விரிவைப் பெரிய புராணத்தில் காண்க. "இவ்வாறு பிணக்கம் கொண்டவர்களை இணக்கம் செய்து வைக்கின்ற நீ என்னையும் உன்னோடு இணக்கம் செய்துகொள்ளக் கூடாதா?" என்பதே நம் ஐயாவின் முறையீடு. (8)

**கீள்உடை யாய்பிறைக் கீற்றுடை யாய்எம் கிளைத்தலைமேல்**
**தாள்உடை யாய்செஞ் சடைஉடை யாய்என் தனைஉடையாய்**
**வாள்உடை யாய்மலை மான்உடை யாய்கலை மான்உடையாய்**
**ஆள்உடை யாய்மன்றுள் ஆட்டுடை யாய்என்னை ஆண்டருளே.**

(பொ - ரை.) "கீழ் உடை அணிந்தவனே! பிறைச் சந்திரனைச் சடையில் சூடியவனே! எங்கள் உறவினர்களாகிய அப்பர் சுந்தரர் ஆகிய இருவர்களின் சென்னி மீது திருவடிகளைச் சூட்டியவனே! செந்நிற முடியினை யுடையவனே! என்னைஅடிமையாகக் கொண்டவனே! ஞானவாளைக் கையில் கொண்டவனே! மலையரசன் பெற்ற மான்போலும் கண்களையுடைய பார்வதியை மனைவியாக உடையவனே! கலைமானைக் கையில் பிடித்தவனே! என்னை அடிமை ஆளாகக் கொண்டவனே! நடன சபையில் நடனம் செய்பவனே! என்னை ஆட்கொண்டருள்வாயாக." (எ - து.)

(அ - சொ.) கீள் உடை - கௌபீனம். கிளை - உறவு. மலைமான் - பார்வதி, கலைமான் - கொம்புகளையுடைய மான். மன்று - நடன சபை. ஆட்டு - நடனம்.

(இ - கு.) மலைமான் என்பதில் உள்ள மான் உவமை ஆகுபெயர்.

(வி - ரை.) அப்பர் பெருமான் தம் முடிமீது சிவபெருமான் திருமுடியைச் சூட்டவேண்டும் என்று திருச்சத்தி முற்றம் என்ற தலத்தில் வேண்டிக் கொண்டார். அந்த வேண்டுகோளைத் திருநல்லூர்த் தலத்தில் இறைவர் நிறைவேற்றினர்.

சுந்தரர் திருவதிகைக்குச் சென்றபோது, சித்தவடம் என்னும் மடத்தில் இரவு படுத்துக்கொண்டிருந்தார். சிவபெருமானும் அங்கு வந்து படுத்துக் கொண்டு, சுந்தரர் தலையில் தம் பாதம் படும் வகையில் தம் காலை நீட்டிப் படுத்து உறங்குவார் போலப் படுத்துக்கொண்டிருந்தார். இந்த நிகழ்ச்சிகளே "எங்கிளைத் தலைமேல் தாளுடையாய்" என்னும் வரியில் அடங்கியுளது. மேலே கூறிய வரலாறுகளைப் பெரிய புராணத்தில் விளக்கமாக அறியவும்.

இறைவர் திருக்கரத்தில் ஞானவாள் உண்டு. இந்தக் குறிப்பு "ஞானவாள் ஏந்தும் ஐயர்" என்று திருவாசகம் கூறுவதனால் தெரியவருகிறது. இறைவனது கீழ் உடை ஞானக் கலையே ஆகும். இந்த உண்மை,

"மன்னுகலை துன்னுபொருள் மறைநான்கே வான்சரடாத்
தன்னையே கோவணமாச் சாத்தினன்"

எனும் திருவாசகத்தால் அறிய வருகிறது.

தட்சன் மகளாய்த் தோன்றிய பார்வதி, தாட்சாயணி என்னும் பெயரைத் தாங்கினாள். அப்பெயர் தனக்கு வேண்டா என்று கருதிப் பின் மலையரசன் மகளாய்த் தோன்றிப் பார்வதி என்னும் பெயரைப் பெற்றாள். பிறகு அவளை மணந்தனர் இறைவர். இதுவே ஈண்டு "மலைமான் உடையாய்" என்னும் தொடரில் அமைந்துள்ள வரலாறு.

தருகாவனத்து முனிவர்கள் இறைவன் மீது ஏவிய மானை இறைவர் தம் கையில் கொண்டு விளங்கினர். இந்தக் குறிப்பே "கலைமானுடையாய்" என்னும் தொடரில் பொருந்தியுளது. இவ்விரு வரலாறுகளைக் கந்த புராணத்தில் விளக்கமாகக் காண்க. (9)

நான்படும் பாடு சிவனே உலகர் நவிலும்பஞ்சு
தான்படு மோசொல்லத் தான்படு மோஎண்ணத் தான்படுமோ
கான்படு கண்ணியில் மான்படு மாறு கலங்கிநின்றேன்
ஏன்படு கின்றனை என்றிரங் காய்என்னில் என்செய்வனே?

(பொ - ரை.) "சிவபெருமானே! நான் படும் துன்பம் உலகத்தார் சொல்லும் பஞ்சு படும் பாட்டைப் போன்றது என்றுகூடச் சொல்ல முடியாது. அப் பஞ்சுபடும் பாட்டை விட நான் படும்பாடு மிகவும் துன்பமானது. நான்படும் துயரை என் வாயால் கூறவும் முடியாது. மனத்தால் நினைக்க

வும் இயலாது. ஆகவே, நான் காட்டில் பரப்பப்பட்ட வலையில் அகப்பட்ட மானைப் போலக் கலங்குகின்றேன். "நீ ஏன் இப்படித் துயர் உறுகின்றாய்" என்று நீ கேட்டு என்னிடம் இரக்கம் காட்டவில்லை என்றால், நான் என்ன செய்ய முடியும்?" (எ-து.)

(அ - சொ.) பாடு - துயரம். நவிலும் - கூறும். கான் - காடு. கண்ணி - வலை.

(இ - கு.) ஓகாரங்கள் எதிர்மறைப் பொருளில் வந்துள்ளன.

(வி - ரை.) பஞ்சு,காற்று எந்தத் திசை நோக்கி வீசுகிறதோ, அந்தத் திசை எல்லாம் சென்றுகொண்டிருக்கும். அதுகுறித்தே உலகர் 'பஞ்சுபட்டபாடு' என்று, ஒருவர் படும் பலவித துயரைப்பற்றிக் கூறுவர். இதை நினைவூட்டும் முறையில்தான் 'பஞ்சுதான் படுமோ' என்னும் வினா ஈண்டு எழுந்துளது. (10)

பொய்யோ அடிமை உரைத்தல்எந் தாய்என்உள் போந்திருந்தாய்
ஐயோநின் உள்ளத் தறிந்ததன் றோஎன் அவலம்எல்லாம்
கையோட வல்லவர் ஓர்பதின் ஆயிரம் கற்பம்நின்று
மெய்யோ டெழுதினும் தான்அடங் காது வியப்புடைத்தே

(பொ-ரை.) "என் தந்தையே!" ஐயோ, அடிமையாகிய நான் துயரத்தால் வருந்துகின்றேன் என்று உன்னிடம் முறையிட்டுக் கொள்வது பொய்யா? நீ என் உள்ளத்தில் வந்து பொருந்தி இருக்கின்றாய் அல்லவோ? ஆகவே, என் துன்பத்தை உன் உள்ளம் அறிந்ததுதானே? எனக்கு இருக்கிற துன்பங்கள் எல்லாம் கையினால் விரைவாக எழுதக் கூடியவர்கள் பத்தாயிரம் பேர்களும் ஓர் ஊழிக்காலம் வரையில் ஒரே

மூச்சாக இருந்துகொண்டு உண்மையாக எழுதினாலும் எழுத்தில் அடங்காத வியப்பைத் தருவன ஆகும்.'' (எ-து.)

(அ - சொ.) போந்து - வந்து. அவலம் - துயரம். கற்பம் - ஓர் ஊழிக்காலம்.

(இ - கு.) ஏகாரம் ஈற்றசை.

(வி - ரை.) கற்பம் என்பது பல்லாயிரம் ஆண்டுகள் கொண்ட ஒரு காலம்; பதினாயிரம் கற்பம் என்பது உயர்வு நவிற்சியாகும். துன்பத்தின் மிகுதியை உணர்த்தவே பல்லாயிர கற்பம் கூறப்பட்டன. (11)

தேன்சொல்லும் வாய்உமை பங்கநின் தன்னைத் தெரிந்தெடுத்தோர்
தான்சொல்லும் குற்றம் குணம்ஆகக் கொள்ளும் தயாளுஎன்றே
நான்சொல்வ தென்னைபொன் நாண்சொல்லும் வாணிதன்
[நாண்சொல்லும்அவ்
வான்சொல்லும் எம்மலை மான்சொல்லும் கைம்மலை மான்சொல்லுமே.

(பொ - ரை.) "தேன்போலும் இனிமையான மொழிகளைப் பேசும் பார்வதி தேவியை இடப்பக்கத்தே கொண்டு விளங்கும் இறைவா! உன் பெருமையினை உணர்ந்து, உன்னையே முழுமுதற் கடவுள் என்று கொண்டவர்கள் சொல்லும் குற்றங்களைக் குணமாகக் கொள்ளும் கருணை வடிவினன் என்று நான் சொல்ல வேண்டியது இல்லை. உனது கருணையின் பெருக்கை, இலக்குமியின் கழுத்திலும், சரசுவதியின் கழுத்திலும், தேவமாதர்களின் கழுத்திலும் உள்ள மங்கள நாணாகிய தாலிக்கயிறுகள் சொல்லிவிடுமே. எங்கள் மலைமாதாகிய பார்வதி தேவியும் சொல்லுவாளே. இந்திரனது வெள்ளை யானையும் சொல்லுமே'' (எ - து.)

(அ - சொ.) உமை - பார்வதி. பாகா - இடப் பாகத்தைத் தந்த இறைவனே. பொன் - இலக்குமி. நாண் தாலிக்கயிறு. வாணி - சரசுவதி. வான் - தேவலோகத்தில் உள்ள மாதர்கள். கைம்மலை மான் - வெள்ளையானை.

(இ - கு.) தயாளு—முற்றியலுகரம். வான்—இடஆகு பெயர். கைம்மலை மான் என்பதில் உள்ள ன் சாரியை. ஏகாரம் ஈற்றசை.

(வி - ரை.) பிருங்கி மகரிஷி இறைவனை மட்டும் சுற்றி வணங்கி வந்தனர். இறைவியைச் சுற்றிவந்து வணங்குவதில்லை இதனால் பார்வதி தேவியார் திருக்கேதாரம் சென்று இருபத்தோர் நாள் நோன்பு இருந்து இறைவரது இடப்பக்கத்தில் தான் இருப்பதற்கு வரம் வேண்டிப் பெற்றாள். இதனால்தான் இறைவர் உமைபாகர் ஆயினர். பார்வதி மேற்கொண்ட நோன்பே இதுபோது கேதார கௌரி நோன்பு என்று கூறப்படுகிறது.

தேவர்கள் அமுதம் வேண்டித் திருப்பால் கடலைக் கடையச் சென்றனர். அங்ஙனம் சென்றபோது, சிவபெருமானின் திருவருளை வேண்டாது சென்றனர். அப்படிச் சென்றது குற்றம் தானே! அந்தக் குற்றத்தால் திருப்பாற் கடலில் விடம் தோன்றியது. அதைக்கண்டு தேவர்கள் ஓடினர். அந்த நிலையில் சிவபெருமான் தேவர்கள் தம்மைப் பணிந்து திருவருள் பெறாது சென்றது குற்றம் என்று தெரிந்தும், அக் குற்றத்தையும் குணமாகக் கொண்டு விடத்தைத் தாம் உண்டு தேவர்கள் விடத்தால் இறவாதபடி திருவருள் புரிந்தனர். விஷ்ணு, பிரம்மா முதலான தேவர்கள் இறந்திருந்தால் இலக்குமி, சரசுவதி முதலான தேவ மாதர்கள் தாலியை அறுத்திருக்க வேண்டிய நிலைமை ஏற்பட்டிருக்கும். இறைவரது தயாளக் குணத்தால் விடத்தை உண்டதனால்

தேவர்களும் இறந்திலர். இலக்குமி, சரசுவதி முதலான தேவ மாதர்களும் தாலியை அறுத்திலர். இந்த உண்மையினைக் குமர குருபரரும்,

"நம்பா நினக்கோலம் முறையோ எனக்கால
நஞ்சுண்டு பித்துண்டு நாம்தேவர் என்பார்
தம்பாவை யர்க்கன்று காதோலை பாலித்த
தயவாளர்" என்றும்,

"மாயிரு ஞாலத்து மன்உயிர்கள் கண்களிப்ப
மன்றுள் ஆடும்
நாயகன் கண்டம் கறுத்தன்றே பொன்உலகை
நல்கிற் றம்மா
நாயகன் கண்டம் கருதேல்அந் நாட்டமரர்
சேயிழை மாதர்க்குச் செங்கைகளும் கொங்கைளும்
சிவக்கும் போலும்" என்றும்

பாடி விளக்கியுள்ளனர்.

இந்தக் கருத்துகளை உளம்கொண்டே நம் ஐயா" குற்றம் குணமாக் கொள்ளும் தயாளு என்றே, நான் சொல்வதென்னை, பொன்நாண் சொல்லும், வாணிதன் நாண்சொல்லும், வான் சொல்லும்" என்றனர்.

பரமேசுவரன் பார்வதிக்கு வேதப்பொருளை உணர்த்தலானான். அப்படி உணர்த்தும்போது, அதனை விருப்பம் இல்லாதவள் போலக் கேட்டனள் பார்வதி இவ்வாறு அசட்டையாக வேதப் பொருளைக் கேட்டது பெருந்தவறு. இதனைச் சிவபெருமான், பார்வதியைச் செம்படவர் குலத்தில் போய்ப் பிறக்குமாறு கட்டளை பிறப்பித்து விட்டனர். பார்வதிதேவி அச்சங்கொண்டு, "இறைவ! உங்களை எப்படிப் பிரிந்து வாழ்வேன்" என்று வேண்டினாள். இறைவன் இரக்கம் கொண்டு, அவள் செய்த குற்றத்தையும் குணமாகக் கொண்டு, "நீ

செம்படவன் மகளாய்த் தோன்றி மணப்பருவம் உற்றபோது உன்னை வந்து மணந்து கொள்வோம்" என்று கூறினான். கூறிய வண்ணமே இறைவன் வலைஞனாய்ச் சென்று உமையை மணந்தான். இந்த வரலாற்றை மேலும் விரிவாக அறிய அவாவுவோர் திருவிளையாடற் புராணத்தில் வலை வீசின படலத்தில் காணலாம். இந்த வரலாற்றுக் குறிப்பே, "மலைமான் சொல்லும்" என்னும் தொடரில் அமைந்துளது.

துருவாச முனிவர் சிவபெருமானை மலரால் வழிபட்டு அம் மலரில் ஒன்றைக் கையில் கொண்டு புறப்பட்டனர். அவர் புறப்பட்டு வருகையில், இந்திரன் வெள்ளையானையின் மீது வந்துகொண்டிருந்தான். அவனைக் கண்டதும் அவ னிடம் இறைவனைப் பூசை செய்து கொணர்ந்த மலரை அவன் கையில் கொடுத்தார். இந்திரன் அதனைத் தன் தலையில் சூடிக் கொள்ளாமல் வெள்ளை யானையின் தலையில் வைத்தான். அவ்யானை அம்மலரைத் துதிக்கையால் எடுத் துக் கால்கீழ் இட்டு மிதித்தது. அதனைக்கண்ட துருவாச முனிவர் வெள்ளை யானையைக் காட்டானையாக உழலும்படி சபித்துவிட்டார். அச் சாபத்தைப் பெற்ற வெள்ளை யானை காட்டானையாக மாறிப் பலவாறு உழன்று கடைசியில் மதுரையை அடைந்தது. மதுரைப் பொற்றாமரைக் குளத்தில் மூழ்கிச் சொக்கலிங்கப் பெருமானைப் பூசித்தது.பின் இறைவர் யானையின் சாபத்தை நீக்கித் திருவருள் புரிந்தார். இந்த வரலாற்றை மேலும் விளக்கமாகக் காண விரும்புபவர் திருவிளையாடற் புராணத்துள் வெள்ளையானை சாபம் தீர்த்த படலத்தில் காணவும். இந்த நிகழ்ச்சியே "கைம்மலைமான் சொல்லும்" என்னும் தொடரில் அமைந்துளது.

இங்ஙனம் எல்லாம் தயவு காட்டிய இறைவர் தமக்கும் தயவு செய்வார் என்னும் கருத்தில் வள்ளலார் வேண்டினார் என்க. (12)

**வென்றே முதலையும் மூர்க்கரும் கொண்டது மீனவிடார்**
**என்றே உரைப்பர்இங் கென்போன்ற மூடர்மற் றில்லைநின்பேர்**
**நன்றே உரைத்துநின் றன்றே விடுத்தனன் நாண்இல்என்மட்**
**டின்றேஅக் கட்டுரை இன்றேஎன் சொல்வ திறையவனே !**

(பொ - ரை.) "இறைவனே! உலகத்தோர் வெற்றி கண்ட பிறகுதான் முதலையும், மூர்க்கரும் தாம் பிடித்ததை விடுவர். அதுவரையில் தாம் பிடித்தவற்றை மீண்டுபோக விடமாட்டார் என்பர். நான் பெருமூடன். என்போன்ற மூடர் உலகில் இருக்கமாட்டார்கள். மூடனாகிய நான் உன் பேரை நன்குகூறி அதனைப் பற்றி இருந்தேன். நான் உன் திருப்பெயரைக் கூறியதனால் ஏற்படும் பயனைப் பெறுதற்கு முன்பே உன் பேரைப் பற்றிநின்ற பற்றினை விட்டுவிட்டேன். ஆகவே, நாணம் சிறிதும் இல்லாத என்மட்டில் மூர்க்கனும் முதலையும் கொண்டது விடா என்னும் உலகப் பழமொழி இல்லாமல் போய்விட்டது போலும்! நான் என்ன சொல்வேன்?" (எ - து.)

(அ - சொ.) கட்டுரை - பொருள் நிறைந்தமொழி.

(இ - கு.) மற்று, அசைச்சொல்.

(வி - ரை.) மாணிக்கவாசக சுவாமிகள் முதலையும் மூர்க்கரும் கொண்டது விடா என்பதற்குப் பதிலாகக் "கொடிறும் பேதையும் கொண்டது விடா" என்பர். கொடிறு-குறடு.

**கைக்கின்ற காயும் இனிப்பாம் விடமும் கனஅமுதாம்**
**பொய்க்கின்ற கானலும் நீராம்வன் பாவமும் புண்ணியமாம்**
**வைக்கின்ற ஒடும்சேம் பொன்ஆம்என் கெட்ட மனதுநின்சீர்**
**துய்க்கின்ற நல்ல மனதாவ தில்லைஎன் சொல்லுவனே ?**

(பொ - ரை.) "இறையவனே! கசப்பாக இருக்கும் காய் கூடச் சில சமயத்தில் இனிப்பாக இருக்கும். விடம்கூடப்

பெருமைக்குரியதேரத் அமுதமாகும். நீர்போலத் தோற்றத் தைக் காட்டும் கானலும் உண்மையான நீராக மாறிவிடும். கொடிய பாவமும் புண்ணியமாய்மாறிவிடும். ஓர் இடத்தில் வைக்கின்ற மண் ஓடும் பொன்னோடாக மாறிவிடும். ஆனால், என் தீய மனம் உன் புகழை எண்ணி அனுபவிக்கின்ற நல்ல மனமாக மாறவில்லையே. (இது நான் செய்த தீவினைதானே!) இதற்கு நான் என்ன செய்வது என்பது தெரியவில்லையே." (எ-து).

(அ - சொ.) கனம் - பெருமை. கானல் - பேய்த்தேர். சீர் - புகழ். துய்க்கின்ற - அனுபவிக்கின்ற.

(இ - கு.) ஆம் என்பது ஆகும் என்பதன் தொகுத்தல் விகாரம்.

(வி - ரை.) கோடை காலத்தில் நல்ல வெயில் வேளை யில் நம் முன்னே நீர் அலைபோன்ற தோற்றம் காணப்படும். ஆனால், அது நீர் அன்று. அதுவே ஈண்டுக் கானல் எனப் பட்டது. இதனைப் பொய்த்தேர் என்று ஆன்றோர் கூறுவர். இந்த ஆட்சியை,

"பூத்தாரும் பொய்கைப் புனல்இதுவே எனக்கருதிப்
பேய்த்தேர் முகக்குறுகும் பேதைகுணம்"

எனும் திருவாசகத்தில் காணலாம். (14)

**வீணே பொழுது கழிக்கின்ற நான்உன் விரைமலர்த்தாள்**
**காணேன்கண் டாரையும் காண்கின்றி லேன்சற்றும் காணற்கன்பும்**
**பூணேன் தவமும் புரியேன் அறமும் புகல்கின்றிலேன்**
**நாணேன் விலங்கிழி ஆணே எனும்கடை நாயினனே.**

(பொ - ரை.) "இறைவனே! காலத்தைப் பயனின்றிக் கழிக்கின்ற நான், உன்னுடைய மணம் பொருந்திய தாமரை

மலர்போன்ற திருவடிகளைக் காணவில்லை. உன் திருவடிகளைக் கண்டவர்களையும் இப்போது கண்டிலேன். அப்படி உன் திருவடிகளைக் காணவும், கண்டவர்களைப் பார்க்கவும் சிறிதும் அன்புகொண்டிலேன்; காண்பதற்குத் தவமும் செய்யவில்லை. நான் புண்ணியத்தைச் செய்யாமல் போயினும், புண்ணியம் என்னும் சொல்லைக்கூடச் சொல்லிப்பழகவில்லை. இப்படி எல்லாம் பயன் சிறிதும் இல்லாமல் இருக்கின்றேனே என்பதைப் பற்றிச் சிறிதும் வெட்கப்படவில்லை. ஆகவே, நான் மிருகங்களிலும் தாழ்ந்த ஆண் என்று கூறத்தக்க நாய் ஆவேன்.'' (எ - து.)

(அ - சொ.) விரை - வாசனை. பூணேன் - மேற்கொள்ளேன். புகன்றிலேன் - சொல்லினேன் அல்லேன்.

(இ - கு.) ஏகாரம் ஈற்றசை.

(வி - ரை.) மலர் என்பது தாமரையாகும். "பூ எனப் படுவது பொறி (இலக்குமி) வாழ் பூவே'' எனும் வரி நால்வர் நான்மணி மாலையில் வருவதைக் காண்க நாய்க்கு நன்றி மறவாமை என்னும் குணம் உண்டு. எனக்கு அதுகூட இல்லையே என்ற காரணத்தால்தான் "கடை நாயேன்" என்றனர். (15)

நானோர் எளிமை அடிமைஅன் றோநல்லன் அல்லன்என்று
தானோநின் அன்பர் தகாதென்பர் ஈதென்று தான்நினைந்தோ
ஏனோநின் உள்ளம் இரங்கிலை இன்னும் இரங்கிலையேல்
கானோடு வேன்கொல் கடல்விழு வேன்கொல் முக்கண்ணவனே!

(பொ - ரை.) "மூன்று கண்களையுடைய இறைவனே! நான் இரக்கப்படத்தக்க ஓர் அடிமை அல்லனோ? நான் நல்லவன் அல்லன் என்று கருதித்தான் உன் மெய் அன்பர்கள் என்னை நீ ஏற்று அருள்புரிவது தகாது என்பர். இவ்வாறு

அவர்கள் கூறியதை எண்ணியோ? அல்லது, வேறு எந்தக் காரணத்தாலோ? உன் உள்ளம் என்மீது இரக்கம் காட்டவில்லை. இவ்வளவு நான் முறையிட்டும், நீ இரக்கம் கொள்ளவில்லை என்றால், காட்டிற்கு ஓடி விடுவேன். கடலில் வீழ்ந்து விடுவேன்.'' (எ - து.)

(அ - சொ.) கான் - காடு.

(இ-கு.) இது என்பது ஈது என்றாயது நீட்டல் விகாரம். கொல், அசைச் சொல்.

(வி - ரை.) தாம் தாம் எண்ணிய எண்ணங்கள் முற்றுப் பெறாதவர்கள் தற்கொலை புரிந்து கொள்வர். இந்தக் கருத்தில்தான் ''கான் ஓடுவேன்; கடல் விழுவேன்'' என்று கூறப்பட்டன. (16)

மின்போலும் செஞ்சடை வித்தக னேஒளி மேவியசெம்
பொன்போலும் மேனிஎம் புண்ணிய னேஎனைப் போற்றிப்பெற்ற
தன்போலும் தாய்தந்தை ஆயிரம் பேர்இருந் தாலும்அந்தோ
நின்போலும் அன்புடை யார்எனக் கார்இந்த நீள்நிலத்தே?

(பொ - ரை.) ''மின்னலைப் போல் விளங்கும் சிவந்த சடைமுடியுடைய பேரறிவு படைத்த இறைவனே! ஒளி பொருந்திய நல்ல பொன் போலும் திருஉடல் பெற்ற எங்கள் அறக்கடவுளே! ஐயோ! என்னைப் பாதுகாத்துப் பெற்ற தாய் தந்தையர் பல்லாயிரக் கணக்கானவர் இருந்தாலும், இந்தப் பரந்த உலகில் உன்னைப் போலும் அன்புடையார் எனக்கு வேறு யார் உளர்? ஒருவரும் இலர்.'' (எ - து.)

(அ - சொ.) வித்தகன் - பேரறிஞன்.

(இ - கு.) எனை, என்னை என்பதன் தொகுத்தல் விகாரம். தன், போலும் என்பன அசைச் சொற்கள்.

(வி - ரை.) இறைவன் திருமேனியைச் சுந்தரர், "பொன்னார் மேனியன்" என்று கூறியதை நினைவு கூர்க. பிறவிதோறும் தாய் தந்தையர் உளர் ஆதலின், "தாய் தந்தையர் ஆயிரம்பேர்" எனப்பட்டது.

"அன்னை எத்தனை எத்தனை அன்னையோ
அப்பன் எத்தனை எத்தனை அப்பனோ
முன்னை எத்தனை எத்தனை சென்மமோ"

எனும் பட்டினத்தார் கூறியதை ஈண்டு நினைவு கொள்க.

உலகத் தாய் தந்தையர் இறந்தபோது தீமூட்டிச் செல்வர். இதுதான் உண்மை என்பதைத் திருநாவுக்கரசரும்,

"எத்தாயர் எத்தந்தை எச்சுற்றத்தார்
எம்மாடு சும்மாடாம் ஏவர் நல்லார்
செத்தால்வந் துதவுவார் ஒருவர் இல்லை
சிறுவிறகால் தீமூட்டிச் செல்லா நிற்பர்"

என்று அறிவுறுத்தினர். இறைவன் ஒருவன்தான் உண்மைத் தந்தை தாய் ஆவான். ஆபத்துக் காலத்திலும், அன்பு காட்டுபவன். சண்டேசுரருக்கு இறைவர் தம்மை தந்தை என்று கூறியதையும், செட்டியார் மரபைச் சார்ந்த ஒரு பெண் கரு உயிர்க்கும் நிலையில் இறைவர் தாயாக வந்து துணை புரிந்ததையும் இங்கு நம் நினைவிற்குக் கொண்டு வரலாம். இவற்றை உட்கொண்டே நம் ஐயா, "தாய் தந்தை ஆயிரம்பேர் இருந்தாலும், அந்தோ நின்போலும் அன்புடையார் எனக்கு ஆர்" என்று கூறுவாராயினர். (17)

**அன்பால்என் தன்னை இங்காள் உடையாய்இவ் அடியவனேன்**
**நின்பால்என் துன்பம் நெறிப்பால் அகற்றென்று நின்றதல்லால்**
**துன்பால் இடரைப் பிறர்பால் அடுத்தோன்று சொன்னதுண்டோ**
**என்பால் இரங்கிலை என்பால் கடல்பிள்ளைக் கீந்தவனே !**

(பொ - ரை.) "பால் வேண்டி அழுத புலிக்கால் முனிவரின் பிள்ளையாகிய உபமன்யுக்குத் திருப்பாற்கடலையே பருகத் தந்த கருணாமூர்த்தியே! அன்பினால் என்னை அடிமை கொண்ட தலைவனே! அடிமையாகிய நான் நின்னிடம் வந்து, நான் சென்றுகொண்டிருக்கும் தீய நெறியிலிருந்து விலக்கு என்று கேட்டது அல்லாமல், என் துன்பத்தைப் பிறர் எவரிடத்தேனும் சென்று முறையிட்டதுண்டோ? அப்படி இருக்க என்னிடம் ஏன் உனக்கு இரக்கம் தோன்றவில்லை." (எ - து.)

(அ - சொ.) நெறி - வழி.

(இ - கு.) நின்பால், என்பால், என்பவற்றுள்ள பால், ஏழன் உருபு. துன்பு + ஆல், அன்பு + ஆல் எனப் பிரித்து ஆல் என்பதை மூன்றும் வேற்றுமை உருபாகக் கொள்க.

(வி - ரை.) உபமன்யு, வியாக்கிரபாத முனிவரின் திருக்குமாரர். இவர் இளமையில் பால் வேண்டி அழுதபோது, சிவபெருமான் திருமால் பள்ளிகொள்ளும் திருப்பாற் கடலையே பருகத் தந்தனர். இந்த உண்மையினை ஒன்பதாம் திருமுறையில் வரும் திருப்பல்லாண்டு, "பாலுக்குப் பாலகன் வேண்டி அழுதிடப் பாற்கடல் ஈந்தபிரான்" என்று போற்றிப் புகழ்கிறது.

கைலைமலை வெண்ணிறமாக இருப்பதற்குரிய காரணம் இன்ன என்பதைக் கூறவந்த சிவப்பிரகாசர், உபமன்யு பாற்கடலை உண்டதை நினைவில்கொண்டு, 'உபமன்யு போவ

வேறு எந்தக் குழந்தை அழுதாலும் சிவபெருமான் நம்மைக் கொடுத்துவிடுவார். அப்போது நம்மீது பள்ளிகொள்ளும் திருமாலும் மறுத்துக் கூறமாட்டார். ஆகவே, சிவபெருமா னுக்கே இருப்பிடமாக இருந்துவிட்டால், சிவபெருமான் நம்மை எவர்க்கும் கொடுக்கமாட்டார் என்று கருதித் திருப்பாற் கடலே வெள்ளி மலையாக வந்துளது என்று கூறி யுள்ளார். இவ்வாறு அவர் கூறிய பாடல் பிரபுலிங்கலீலையில்,

"கண்பிசைந் தொருசேய் இன்னும் கலுழினும் தனைக்
கொடுப்பன்
மண்பிசைந் துண்ட மாயன் மறுத்திட வலியன் அல்லன்
நண்பிசைந் திறைவ னுக்கே நாம்இடம் ஆவம் என்று
பண்பிசைந் தலைதி ரண்ட பரிசில்நின் றிடும்அக் குன்று"

என்று காணப்படுகிறது.

கிருட்டினன் சிவபூசை செய்ய உபமன்யு முனிவரிடமே திருவடி தீட்சை பெற்றுளன். இந்த உண்மையினைச் சேக்கிழார்,

"யாத வன்துவ ரைக்கிறை ஆகிய
மாத வன்முடி மேல்அடி வைத்தவன்"

என்று குறிப்பிடுவதால் உணர்க. (18)

என்போல் மனிதரை ஏன்அடுப் பேன்எனக் கேப்பில்வைப்பாம்
பொன்போல் விளங்கும் புரிசடை யான்தனைப் போய்அடுத்தேன்
துன்போர் அணுவும் பொறேன்இனி யான்என்று சொல்லிவந்தேன்
முன்போல் பராமுகம் செய்யேல் அருளுக முக்கணனே.

(பொ - ரை.) "மூன்று கண்களையுடைய இறைவனே! என்னைச் சிலர் "ஏன் இவ்வாறு துயர் உறுகின்றாய்? உம்மைப் போன்ற நல்ல மனிதரை அடைந்து அவர்களிடம், உம் குறை

களைக் கூறி அக் குறைகளைப் போக்கிக்கொள்ளலாமே" என்று கூறினர். அப்போது நான், என்போன்ற மனிதரை அடைந்து என் குறைகளைப் போக்குமாறு ஏன் சொல்வேன். எனக்கு வறுமைக் காலத்தில் உதவக்கூடிய பெருஞ் செல்வம்போன்ற வனும், பொன்போல ஒளியுடன் விளங்கும் சுருண்ட சடை யுடைய வனும் ஆன சிவபெருமான் இருக்க, அவனைப் போய்ச் சார்ந்தேன். இனித் துன்பத்தை ஓர் அணுவளவு அடைய மாட்டேன்'' என்று இறுமாப்புடன் சொல்லிவிட்டு வந்தேன். ஆகவே, முன் என்னைப் பார்த்தும் பாராமல் இருந்தது போல் இனியும் அசட்டையாக இருக்கவேண்டா. எவ்வாறேனும் இறைவா! அருள் செய்வாயாக. (எ - ம்.)

(அ - சொ.) எய்ப்பு - வறுமை. வைப்பு - செல்வம். புரி - சுருண்ட. பராமுகம் - அசட்டை.

(இ - கு.) கணன் என்பதில் ண எனும் மெய்யெழுத்து தொகுத்தல் விகாரத்தால் மறைந்தது. தன், அசைச் சொல்.

**பொன்உடை யார்தமைப் போய்அடுப் பாய்என்ற புன்மையினோர்க்**
**என் உடை யான்தனை யேஅடுப் பேன்இதற் கென்அளவும்**
**பின்இடை யேன்அவர் முன் அடை யேன்எனப் பேசிவந் தேன்**
**மின்இடை மாதுமை பாகஎன் சோகம் விலக்குகவே.**

(பொ - ரை.) "மின்னல் தோன்றி மறைவது போலத் தோன்றி மறையும் அவ்வளவு நுணுகிய இடையினையுடைய பார்வதியின் மணாளனே! என்னை நோக்கிப் பொன்படைத்த செல்வர்களைச் சென்று அடைந்து உன்துயரம் போக்கிக் கொள்ளலாமே என்று கூறிய அற்பர்களிடம், என்னை அடிமை யாகக் கொண்ட இறைவனைத்தான் அடைவேன்; இதில் எள்ளளவேனும் பின் வாங்கமாட்டேன். அந்தச் செல்வர் முன் போகமாட்டேன் என்று சொல்லிவிட்டு வந்தேன்.

ஆகவே, என்சோர்வை நீக்கி அருள் செய்வாயாக" (எ - து).

(அ - சொ.) புன்மையினோர் - அற்பர்.

(இ - கு.) தனையே என்பதில் உள்ள ஏகாரம் பிரிநிலை.

(வி - ரை.) மாதர்களின் இடை சிறுத்துக் கண்ணுக்குத் தோற்றம் அளிக்காது என்ற கருத்தில் புலவர்கள் பெண்களின் இடைக்கு மின்னலை உவமை கூறுவர். கொடுக்கிலாதானைப் பாரியே என்று கூறினும் கொடுப்பார் இல்லை ஆதலின், வள்ளலார் "என்னுடையான் தனையே அடுப்பேன்" என்று உறுதியாகக் கூறினார். (20)

சாதகத் தோர்கட்குத் தான்அருள் வேன்எனில் தாழ்ந்திடுமா
பாதகத் தோனுக்கு முன்அருள் சந்ததேப் பான்மைகொண்டோ
தீதகத் தேன்எளி யேன்ஆ யினும்உன் திருவடியாம்
போதகத் தேநினைக் கின்றேன் கருணை புரிந்தருளே.

(பொ - ரை.) "இறைவா! நீ சரியை, கிரியை, யோகம், ஞானம் முதலான நால்வகை நெறிகளில் பயிற்சியுடைய நற்குணச் சீலர்கட்குத்தான் திருவருள் புரிவேன் என்றால், மிகத் தாழ்ந்த மகா பாதகத்தைச் செய்தவனுக்கு எந்தத் தகுதியைக் கொண்டு முன் ஒரு சமயம் திருவருள் புரிந்து அவனைக் காத்தாய்? நான் தீங்கான குணத்தை உள்ளத்தில் கொண்டிருப்பவனாயினும், மிக எளியவனாயினும் உன் திருவடியாம் மலரை என் உள்ளத்தில் கொண்டிருக்கின்றேன். ஆகவே, எனக்குக் கட்டாயம் திருவருள் புரிய வேண்டும்." (எ - ம்.)

(அ - சொ.) சாதகம் - பயிற்சி. பான்மை - தகுதி. போது - மலர். அகம் - மனம்.

(இ - கு.) மா - உரிச்சொல், ஓகாரம், வினு, ஏ ஈற்றசை.

(வி - ரை.) அவந்தி நாட்டுப் பிராமணர் ஒருவர்க்கு ஒரு மகன் பிறந்தான். அவன் வளர்ந்து மணப்பருவம் உற்றனன். அவன் தாயையே காதலித்தான். அவன் எண்ணத்திற்கு அவளும் இணங்கினுள். இதன் காரணமாகத் தன் தந்தையையும் கொன்றுன். பிறகு தான் காதலித்த தாயை அழைத்துக்கொண்டு ஒரு பாலைவனத்தைக் கடக்கும்போது வேடர்கள் இவனைத் தடுத்து, அவன் கையில் இருந்த பொருளைக் கவர்ந்து. அவன் தாயையும் கொண்டு சென்றனர். பின்னர் அலைந்து திரிந்து மதுரையை அடைந்தான். சிவனைக் காணும் வாய்ப்பபைப் பெற்றுன். சிவபெருமான் அவனுக்குச் சிவனடியாரை வழிபடுமாறு கூற, அவனும் அவ்வாறே சிவனையும் சிவனடியாரையும் போற்றித் தன் பாதகம் நீங்கப் பெற்றுன். இதன் விரிவைத் திருவிளையாடற் புராணத்தில் மா பாதகம் தீர்த்த படலத்தில் காண்க. இநத வரலாறே "மா பாதகத் தோனுக்கு முன் அருள் ஈந்தது" என்னும் தொடரில் அமைந்துள்ளது. "பொறுக்க முடியாத மாபாதகத்தைச் செய்தவனுக்கே அருள்புரிந்த நீ ஒரு பாதகமும் செய்யாத எனக்கு அருள் செய்யக் கூடாதா?" என்பது வள்ளலார் வேண்டுகோள். (21)

**அருள்அறி யாச்சிறு தேவரும் தம்மை அடுத்தவர்கட்**
**கிருள்அறி யாவினைக் கென்றுலும் நெஞ்சம் இரங்குகின்றுர்**
**மருள்அறி யாப்பெருந் தேவேநின் தன்அடி வந்தடைந்தேன்**
**தெருள்அறி யாச்சிறி யேன்ஆயி னும்செய்க சீர்அருளே.**

(பொ - ரை.) "மயக்க உணர்வு சிறிதும் இல்லாத பெருமைமிக்க இறைவரே! அருள் என்னும் பண்பு சிறிதும் இல்லாத சிறு தெய்வங்கள் கூடத் தம்மை யாரேனும் சரண்

புகுந்தால், தாம் அஞ்ஞான இருளைப் போக்குதற்குரிய மெய்ஞ்ஞான ஒளியைப் பெறாத வெறும் விளக்காக இருந்தாலும், அடைக்கலம் புகுந்தவர்களிடத்து, மனம் இளகி, இரக்கம் காட்டுவர். நீயோ அஞ்ஞானத்தை நீக்கும் மெய்ஞ்ஞான தீபம். ஆகவே, நான் உன் திருவடிகளைச் சரணம் புகுந்தேன். நான் தெளிவு இல்லாத அற்பன். அப்படி இருந்தாலும் நீ எனக்குச் சீரிய திருவருளைப் புரிந்து காப்பாயாக" (எ - து)

(அ - சொ.) மருள் - மயக்கம். தெருள் - தெளிவு.

(இ - கு.) செய்க, வியங்கோள் வினைமுற்று. ஏகாரம் ஈற்றசை.

(வி - ரை.) சிவபெருமான் தாருகா வனத்து இருடி பத்தினிமார் இடம் பிட்சைக்குச் சென்றபோது, அவர்கள் காம மயக்கத்தால் மயங்கிய நிலையிலும் அவர்கள்பால் இவர் காம மயக்கம் கொண்டிலர். இந்த உண்மையினைத் திருவிளையாடற் புராணம்,

"அஞ்சலிப் போது பெய்வார் சரணம்என் றடியில் வீழ்வார்
தஞ்செனத் தளிர்க்கை நீட்டித் தழுவிய கிடைக்கும் தோறும்
எஞ்சுவான் எஞ்சா தேத்தி எதிர்மறை எட்டும் தோறும்
வஞ்சனை அகல்வான் மையல் வஞ்சியர்க் கணியன்ஆமோ"

என்று கூறுகிறது. ஆகவேதான் நம் ஐயா "மருள் அறியாப் பெருந்தேவே' என்றார்.

இருள் ஈண்டு அஞ்ஞானமாகிய இருட்டு. இதை நீக்கும் வன்மை சிறு தேவர்கட்குக் கிடையாது. தேவர்கள், தேவர் என்று பெயர் பெற்றிருந்தாலும், மகாதேவர்போல அருள்பாலிக்கும் தரத்தர் அல்லர்; இது குறித்தே, "அருள் அறியாச் சிறுதேவா" என்றனர். விளக்கு ஒளியாய் இருப்

பவன் இறைவன். அந்த விளக்கொளியாம் இறைவன் மெய்ஞ்ஞான தீபம் ஆவன். அந்த மெய்ஞ்ஞான தீபந்தான் அஞ்ஞான இருளை அறியவும், அகற்றவும் இயலும். தேவர் களும் விளக்கு என்று கூறுதற்குரியர் என்றாலும், மாலை என்னும் பெயரைப் பூமாலை பெற்றிருப்பது போல், மாலைக் காலமும் மாலை என்று பெயர் பெற்றிருந்தும் எப்படிப் பெருமை உருதோ, அப்படியே தேவர்களும் விளக்கெனும் பேரைப் பெற்றிருந்தும் சிறப்புடையார் என்பதாம். இதனுல் தான் "இருள் அறியா விளக்கு" எனப்பட்டனர். (22)

அரும்பொரு ளேஎன் அரசேஎன் ஆர்உயிர்க் காகவந்த
பெரும்பொரு ளேஅருள் பேறே சிவானந்தம் பெற்றவர்பால்
வரும்பொரு ளேமுக்கண் மாமணி யேநின் வழிஅருளால்
தரும்பொரு ளேபொருள் என்றுவந் தேன்எனைத் தாங்கிக்கொள்ளே

(பொ - ரை.) "கிடைப்பதற்கு அருமையான பொருளே! என் அரசனே! என் அருமையான உயிரைக் காப்பாற்றுவதற் காகவே என்பால் வந்த பெரிய பொருளே! உன் திருவருள் துணைகொண்டு நான் பெற்ற பாக்கியமே! சிவாநந்தப் பேற்றை அடைந்தவர்களிடத்தில் சென்று திருவருள் புரியும் அரும் பொருளே! மூன்று கண்களை யுடைய உயர்ந்த மாணிக்கமே! நின் திருவருளால் பெறும்பொருளே பொருள் என்று கருதி உன்னைச் சரண் அடைந்தேன். ஆகவே, என்னைத் தாங்கிக் கொள்வாயாக" (எ - து.)

(அ - சொ.) மா - உயர்ந்த.

(இ - கு.) பெற்றவர்பால், பால் ஈண்டு ஏழன் உருபு. மா, உரிச்சொல். பொருளே, என்பதில் உள்ள ஏகாரம் பிரிநிலைப் பொருளது.

(வி - ரை.) சிவனை உள்ளத்தில் உன்னும்போது பெறும் ஆனந்தமே சிவாநந்தம். இதனை மணிமொழியார் "சட்டோ நினைக்க மனத்தமுதாம் சங்கரன்" என்றனர். மேலும், அவரே அந்தச் சிவாநந்தம் பெறும் வழியைக் கூறுகை யில் "நினைத்தொறும் காண்தொறும் பேசுந்தொறும் எப்போ தும் அனைத்தெலும் புள்நெக ஆனந்தத் தேன் சொரியும் குனிப்புடை யான்" என்றும கூறி அறிவித்துள்ளனர். (23)

**சரங்கார் முகம்தொடுத் தெய்வது போல்என் தனைஉலகத்**
**துரங்கார் இருள்பெரு வாதனை யால்இடர் ஊட்டும்நெஞ்சக்**
**குரங்கால் மெலிந்துநின் நாமம் துணைஎனக் கூறுகின்றேன்**
**இரங்கார் தமக்கும் இரங்குநின் றேஎற் கிரங்குகவே.**

(பொ - ரை.) "உன்னை அடுத்து கெஞ்சிக் கேளாதவர் கட்கெல்லாம் இரக்கம் காட்டும் இறைவனே! வில்லில் அம்பை வைத்து எறிவதுபோல என்னைக் கரிய இருள்போன்ற உலகத்தில் வன்மை மிக்க துன்பத்தைக் கொடுக்கும் மனமாகிய குரங்கால் வாடி அவ்வாட்டத்திலிருந்து மீள உன் திருப் பெயரையே துணை எனக்கொண்டு சொல்லித் துதிக் கின்றேன். ஆகவே எனக்கும் இரக்கம் காட்டவேண்டும்" (எ - து.)

(அ - சொ) சரம் - அம்பு. கார்முகம் - வில். எய்வது - விடுவது. உரம் - வன்மை. வாதனை - துன்பம், நாமம் - பெயர். எற்கு - எனக்கு, இரங்கார் - முறையிட்டுக் கொள் ளாதவர்.

(இ - கு.) கார் இருள் என்பதைக் கடுமை இருள் எனப் பிரித்தல் வேண்டும். இது பண்புத் தொகை.

(வி - ரை.) துன்பத்தின் வேதனைக்கு அம்பு உடலில் படுவது உவமைக் காட்டப்பட்டது. மனம் ஒரு வழிப்

படாமல் அலைதலின், மனத்தைக் குரங்கு என்றனர், "காடுங் கரையும் மனக்குரங்கு கால்விட்டு ஓட" என்பர் தாயுமானவர். இருட்பெரு வாதனை பிராரர்த்தவினை. இருள் துன்பம் செய்தலின், வாதனை இருள் பெருவாதனை எனப்பட்டது. (24)

**கூறுற்ற குற்றமும் தானே மகிழ்வின் குணம்எனவே**
**ஆறுற்ற செஞ்சடை அண்ணல்கொள் வான்என்பர் ஆங்கதற்கு**
**வேறுற்ற தோர்கரி வேண்டுகொ லோஎன்உள் மேவிஎன்றும்**
**வீறுற்ற பாதத் தவன்மிடற் றேகரி மேவியுமே.**

(பொ - ரை.) "கங்கை ஆறு பொருந்திய சிவந்த சடையுடைய பெருமையில் சிறந்த சிவபெருமான், பல்வேறு பகுதியாகச் செய்யப்படும் குற்றங்களை எல்லாம் மகிழ்வுடன் மன்னித்து, அக் குற்றங்களைக் குணமாகக் கொள்பவன் என்று மெய்ஞ்ஞானிகள் கூறுவர். இந்த உண்மையை நிலைநாட்ட என் மனத்தில் பொருந்தி என்றும் பெருமையுடன் விளங்கும் திருவடிகளையுடையவனது கழுத்தில் சாட்சி பொருந்தி இருந்தும், வேறு சாட்சியும் வேண்டுமோ?. வேண்டா அன்றே! (எ - து)

(அ - சொ.) கூறு - பகுதி. அண்ணல் - பெருமையில் சிறந்த சிவபெருமான். கரி - சாட்சி. வீறு - பெருமை. மிடறு - கழுத்து.

(இ - கு.) கொல், வினாப் பொருள்தரும் இடைச்சொல். ஓ, அசை.

(வி - ரை.) தேவர்கள் இறைவனைத் துணையாகக் கொள்ளாது திருப்பாற் கடலைக் கடைந்ததனால் விடம் தோன்றியது. தேவர்கள் இறைவன் துணை வேண்டாதது குற்றம். இந்த நிலையில் இறைவன் அவர்களின் குற்றத்தைக் குணமெனக் கொண்டு, அந்தவிடத்தைத் தான் ஏற்றுத் தேவர்களைக்

காத்தனன். குற்றத்தைக் குணமாகக் கொண்டவர் என்பதற்குச் சாட்சி சிவபெருமானது கழுத்தே ஆகும். இதனால் இக்கண்டம் எல்லாராலும் போற்றப்படுவது. இந்த உண்மையினைப் புறநானூறு,

"கறைமிடறு அணியலும் அணிந்தன்று அக்கறை
மறைநவில் அந்தணர் நுவலவும் படுமே"

என்று கூறி விளக்குகிறது. (25)

**சூல்படும் மேக நிறத்தோனும் நான்முகத் தோனும்என்னைப்**
**போல்படும் பாடுநல் லோர்சொலக் கேட்கும் பொழுதுமனம்**
**வேல்படும் புண்ணில் கலங்கி அந்தோநம் விடையவன்பூங்**
**கால்படும் தூளிநம் மேல்படு மோஒரு கால்என்னுமே.**

(பொ - ரை.) "நன்கு கருக்கொண்ட கருநிற மேகம் போன்ற நிறத்தையுடைய திருமாலும், நான்கு முகங்களையுடைய பிரமனும் என்னைப் போலவே, அவன் திருவருளைப் பெறுதற்குப் பாடு படுகின்றனர் என்று நல்ல பெரியவர்கள் சொல்ல நான் கேட்கும்போது. ஐயோ, என் உள்ளம் புண்ணில் வேல் பட்டதுபோலக் கலக்கம் கொண்டு, நம் இரடபவாகனனாகிய சிவபெருமானின் தாமரை மலர்போலும் பாதத்தில் பொருந்திய தூசாகிலும் நம்மேல் படுமோ என்று ஒவ்வொரு சமயம் நினைக்கும்." (எ - து.)

(அ - சொ.) சூல் - கருப்பம், விடை - இரடபம், ஒருகால் - ஒருசமயம்.

(இ - கு.) படுமோ என்பதன் ஓகாரம் ஐயம்,

(வி - ரை.) நன்கு கருத்த மேகத்தைச் சூல்கொண்ட மேகம் என்பது புலவர் கூறும் மரபு. சூல் ஈண்டு நீராகிய கருப்பம். பொறுக்க முடியாத துன்பத்திற்குப் புண்ணில் வேல் நுழைவதை உவமை காட்டப்படும். சிறுத்தொண்டர் இடம்

பிள்ளைக்கறி வேண்டும் என்று பைரவராக வந்த சிவபெருமான் கூறிய சொல்லுக்குச் சேக்கிழார், "புண்செய் நோவில் வேல் எறிந்தால் போலும்" என்று கூறினர். விசுவாமித்திரர் இராமனைத் தம்முடன் அனுப்புமாறு தயரதனைக் கேட்ட போது தயரதன் உற்ற துயரத்திற்கும் கம்பர், "மருமத்தின் எறிவேல் பாய்ந்த புண்ணிலாம் பெரும்புழையில் கனல் நுழைந்தால் என" என்று பாடியுள்ளனர். (26)

வாளேய் நெடுங்கண்ணி எம்பெரு மானே வருடுமலர்த்
தாளே வருந்த மணிக்கூடல் பாணன் தனக்கடிமை
ஆளே எனவிற கேற்றுவிற் றேய்நின் அருள்கிடைக்கும்
நாளேநல் நாள்அந்த நாட்காயிரம் தெண்டன் நான்செய்வனே.

(பொ - ரை.) "வாள் போல் கூர்மையான நீண்ட கண்களையுடைய உமாதேவியார் தடவிக் கொடுக்கும் உன் மலர் போன்ற திருப்பாதங்கள் நோவும்படி அழகிய மதுரை வீதியில் பாணபத்திரனுக்கு நான் அடிமை ஆள் என்று சொல்லி விறகைத் தலைமேல் சுமந்து விற்ற கருணை மூர்த்தியே! உன் திருவருள் கிடைக்கும் நாள்தான் எனக்கு நல்ல நாள். அந்த நாள் எனக்கு அமையுமானல், அந்தநாளுக்கு நான் ஆயிரம் முறை வணக்கம் செய்வேன்." (எ - து.)

(அ - சொ.) ஏய் - போன்ற. வருடும் - தடவும். மணி - அழகிய, கூடல் - மதுரை. தெண்டன் - வணக்கம்.

(இ - கு.) ஏய் உவம உருபு, தாளே என்பதன் ஏகாரம் அசை, ஆளே, என்பதன் ஏகாரம் பிரிநிலை. நாளே, என்றதன் ஏகாரம் தேற்றம்.

(வி - ரை.) உத்தம மாதர்கள் தம் கணவன்மார்களின் பாதத்தைத் தடவிக் கொடுப்பர். இவ்வாறு தேவ மாதரும் செய்வர் என்பதை அஷ்ட பிரபந்த நூலும் திருமால் பாதத்தை ஸ்ரீதேவி, பூதேவி வருடியதை,

' சீர்பூத்த செழுங்கமலத் திருத்தவிசில் வீற்றிருக்கும்
நீர்பூத்த திருமகளும் நிலமகளும் அடிவருட '

என்று கூறுகிறது. நம் வள்ளலார் மீனாட்சி அம்மையார் சொக்கேசப் பெருமானின் திருவடிகளை வருடியதை ஈண்டுக் கூறினார்.

மதுரையில் வரகுண பாண்டியன் ஆட்சி செய்யும் காலத்தில் வட தேசத்திலிருந்து யாழ்வாசிப்பதில் சிறந்த ஏமநாதன் என்பவன் வந்தான். தன் வித்தை செருக்காய் தன்னோடு யாழ்வாசிப்பவர் எவரேனும் மதுரையில் உளரோ என்று அறை கூவினான். இதை அறிந்த அரசன் தன் ஆத்தான யாழ்ப் புலவரான பாணபத்திரர் என்பாரை அழைத்து ஏமநாதனுடன் யாழ் மீட்டுப் பாட வேண்டும் என்று கட்டளை இட்டான். அவ்வாறே பாடுவதாகக் கூறிவிட்டு நேரே மதுரைச் சொக்க லிங்கப் பெருமானிடம் தன் நிலையைப் பற்றிப் பாண்பத்திரர் முறையிட்டார். சிவபெருமான் தம் அன்பருக்கு அருள் செய்ய விறகு விற்கும் ஆள்போல் வேடம் பூண்டு, விறகு கட்டையைத் தலைமேல் சுமந்து சென்று ஏமநாதன் தங்கி இருந்த வீட்டுத் திண்ணையில் இறக்கிச் சாதாரி என்னும் பண்ணைப் பாடினார். இந்த இசையின் அருமையைக் கேட்ட ஏமநாதன் 'நீ யார்?' என்று சிவபெருமானாகிய விறகாளைக் கேட்க அவர், 'நான் பாணபத்திரன் அடிமை. அவரிடம் சில நாட்கள் யாழ் இசை பயின்றவன். பிறகு நான் கிழவன் என்ற காரணத்தால் தள்ளிவிட்டார். அந்தச் சில நாள் பயிற்சி தான் இப்போது நான் பாடிய இசைக்குக் காரணம்' என்று சொல்லிவிட்டுப் போயினார். ஏமநாதன் ' கிழவன் இசையே இப்படி இருந்தால் பாணபத்திரர் இசைப் புலமை பெரிது ' என்று அஞ்சி ஊரைவிட்டு ஓடினான். இந்த வரலாற்றை உளத்தில் கொண்டே ஈண்டு "பாணன் தனக்கடிமை ஆளே

என விறகேற்று விற்றோய்" என்று வள்ளலார் குறிப்பிட்டுள்ளனர். இதன் விளக்கத்தை மேலும் காண விழைவார் திருவிளையாடல் புராணத்துள் விறகு விற்ற படலத்தில் காண்க. (27)

அடுத்தார் தமையென்றும் மேலோர் விடார்கள் அவர்க்குப்பிச்சை
எடுத்தா யினும்இடு வார்கள்என் பார்அதற் கேற்கச்சொல்பூத்
தொடுத்தார் ஒருவர்க்குக் கச்சூரி லேபிச்சைச் சோறெடுத்துக்
கொடுத்தாய்நின் பேர்அருள்என் சொல்லு கேன்எண் குணக்குன்றமே.

(பொ - ரை.) "எட்டுக் குணங்களையுடைய இறைவனே! எக்காலத்தும் மேன்மையான குணம் பொருந்தியவர்கள் தங்களை எவரேனும் சார்ந்தால் அவர்களைக் கைவிடார். தம்மை அடுத்தவர்களுக்குப் பிச்சை எடுத்தாகிலும் உணவு கொடுத்து ஆதரிப்பார்கள் என்று உலகத்தார் சொல்வர். அப்படிச் சொல்வதற்கு இணங்க, சொல்லாகிய மலர்களைக் கொண்டு, பாமாலையினைக் கட்டிய சுந்தரமூர்த்தி சுவாமிகளுக்குத் திருக்கச்சூரில், பிச்சைச் சோறு பெற்றுக் கொடுத்தாய். இப்படிச் செய்த உன் பேரருளைப்பற்றி நான் என்ன சொல்வேன்?" (எ - து.)

(அ - சொ.) எண்குணம் - எட்டுக் குணங்கள். ஒருவர் - சுந்தரமூர்த்தி சுவாமிகள். சொல்பூ - பாமாலை.

(இ - கு.) எட்டு + குணம்.

(வி - ரை.) இறைவனுக்குரிய எட்டுக் குணங்கள்: தன் வயத்தன் ஆதல், தூய உடம்பினன் ஆதல், இயற்கை உணர்வினன் ஆதல், முற்றும் உணர்தல், இயல்பாகவே பாசங்களினின்று நீங்குதல், பேரருளுடைமை, முடிவில் ஆற்றல் உடைமை, வரம்பில் இன்பம் உடைமை என்பன.

திருக்கச்சூர் என்பது சிங்கப் பெருமாள் கோவில் இரயில் அடியிலிருந்து வடமேற்கே ஒன்றரைக் கல்லில் உள்ள ஒரு

சிவதலம். திருமால் ஆமை வடிவில் சிவபெருமானைப் பூசித்த தலம். ஒருநாள் சுந்தரர் இங்குப் பகல் உச்சிப் பொழுதில் இறைவனை வணங்க வந்தபோது பசியால் களைப்புற்றிருந்த நிலையைச் சிவபெருமான் அறிந்து ஊரில் சென்று பிச்சை எடுத்துவந்து சுந்தரர் பசியைப் போக்கினர். இவருக்கு விருந்திட்ட இறைவர் மலைமேல் இன்றும் உள்ள னர். இவ்வாறு இறைவன் செய்ததைச் சுந்தரர் வியந்து,

"கச்சேர் அரவொன் றரைவில் அசைத்துக்
கழலும் சிலம்பும் கலிக்கப் பலிக்கென்
றுச்சம் போதா ஊரூர் திரியக்
கண்டால் அடியார் உருகாரே"

என்று பாடியுள்ளனர்.

"மிடியிலா மனைகள்தொறும் இரந்திட்டு உழன்றமை" என்பர் சிவப்பிரகாச சுவாமிகள். இந்த வரலாற்றை உளத்தில் கொண்டே, "ஒருவர்க்குக் கச்சூரிலே பிச்சைப் சோறு எடுத்துக் கொடுத்தார்" என்று கூறப்பட்டது. இறைவனுக்குப் பூமாலையினும் பாமாலை விருப்பமுடையது. இதனைத் தாயுமானவரும், "பல்மாலைத் திரள் இருக்கத் தமையுணர்ந்தோர் பாமாலைக்கே நீதான் பட்சம் என்று நன்மாலையா எடுத்துச் சொன்னர் நல்லோர்" என்று உணர்த்தியுள்ளனர். இந்த உண்மையே, "சொல்பூத் தொடுத்தார் ஒருவர்" என்று கூறப்பட்டது. (28)

நாடிநின் றேநினை நான்கேட்டுக் கொள்வது நண்ணும்பத்துக்
கோடிஅன் றேஒரு கோடியின் நூற்றொரு கூறும்அன்றே
தேடிநின் றேபுதைப் போரும் தருவர்நின் சீர்நினைந்துள்
பாடிஅந் தோமனம் வாடிநின் றேன்முகம் பார்த்தருளே.

(பொ - ரை.) "இறைவரே! நான் வாட்டம் கொண்டு உம்மைக் கேட்பது பத்துக்கோடிப் பொருள் அன்று. ஒரு

கோடியில் நூற்றில் ஒரு பங்கும் அன்று. பணத்தைத் தேடிப்புதைத்து வைக்கின்றவர்களும் கூட எவரேனும் தம்மை வந்து கேட்டால் சிறிதளவேனும் பொருள் கொடுப்பர். ஐயோ நான் உன்சீரை நினைந்து பாடி நிற்கின்றேன். ஆகவே, என் வாட்டமான முகத்தைப் பார்த்தேனும் அருள் செய்வாயாக.'' (எ - து.)

(அ - சொ.) நண்ணும் - நெருங்கும்.

(இ - கு.) புதைப்போரும் என்பதன் உம்மை இழிவு சிறப்பு. சிறிதும் அருள் செய்யாமல் இருப்பது அழகா என்பது வள்ளலார் கருதும் கருத்து. (29)

**தாயாகி னும்சற்று நேரம் தரிப்பள்நம் தந்தையைநாம்**
**வாயார வாழ்த்தினும் வையினும் தன்இடை வந்திதுநீ**
**ஈயாய் எனில்அருள் வான்என் றுனைஅடுத் தேன்உமையாள்**
**நேயா மனம்இரங் காயாஎன் எண்ணம் நெறிப்படவே.**

(பொ - ரை.) ''பார்வதி தேவியின் அன்பனே! தாய் ஒவ்வொரு சமயம் ஏதேனும் கேட்கும்போது கொடுப்பதற்குச் சிறிது நேரம் சிந்தனையில் ஆழ்ந்து, கொடுக்கலாமா கொடுக்கக்கூடாதா என்று இருப்பள். ஆகவே, நாம் நம் தந்தையை வாயாரப் புகழ்ந்தாலும், திட்டினாலும் அவரிடம் சென்று கொடு என்று கேட்டால் கொடுப்பார் என்று கருதி உனை அடுத்தேன். நான் நல்வழிப்பட என்னிடம் மன இரக்கம் காட்டமாட்டாயா?'' (எ - து.)

(அ - சொ.) நெறிப்பட - நல்வழியில் நடக்க. (30)

**நடும்பாட்டை நாவலன் வாய்த்திருப் பாட்டை நயந்திட்டநீ**
குடும்பாட்டை மேற்கொண்ட என்தமிழ்ப் பாட்டையுங் கொண்டென் [உள்ளத்
**திடும்பாட்டை நீக்கிலை என்னினும் துன்பத் திழுக்குற்றுநான்**
**படும்பாட்டை ஆயினும் பார்த்திரங் காய்எம் பரஞ்சுடரே.**

(பொ - ரை.) "மேலான அருட்பெருஞ் சோதியே! இறைவனே! அவ்வப்பொழுது பாடுகின்றவர்களுடைய பாட்டையும், சுந்தரருடைய வாயினின்று வெளிவந்த திருப்பாட்டையும் விரும்பிய நீ, நான் குடும்ப ஆட்டத்தில் ஈடுபட்டுப் பாடிய என் தமிழ்ப்பாட்டையும் ஏற்றுக்கொண்டு என் உள்ளத்தின் துன்பத்தை நீ நீக்கவில்லை என்றால், நான் துன்பத்தால் வலிக்கப்பட்டு படும் வருத்தத்தையாகிலும் பார்த்து இரக்கம் காட்டவேண்டும்." (எ - து.)

(அ சொ.) நடுப்பாட்டு - அவ்வப்பொழுது இடை இடையே பாடும் பாட்டு. நாவலன்-திருநாவலூரில் தோன்றிய சுந்தரர். பாட்டை - துயரை.

(இ - கு.) குடும்பு + ஆட்டை எனப் பிரிக்க.

(வி - ரை.) நடும் பாட்டு என்பது உலகர் அவ்வப்போது பாடும் பாடல்கள். திருப்பாட்டு என்பது சுந்தரர் பாட்டுக்கே சிறப்பாக அமைந்த பெயர். திருநாவுக்கரசர் பாட்டுத்தான் தேவாரம். திருஞானசம்பந்தர் பாட்டுத் திருக்கடைக் காப்பு. சுந்தரர் பாட்டு, திருப்பாட்டு. இறைவர் சுந்தரரை, சொற்றமிழ் பாடுக என்று பணித்தமையினால் கண்டு, "திருப்பாட்டை நயந்திட்ட நீ" என்றனர். குடும்பத்தில் வள்ளலார் உழந்திலர் என்றாலும், உலகோர் செயலைத் தம்மீது ஏற்றிக் கூறினர் எனக்கொள்க. (31)

ஏட்டாலும் கேள்அயல் என்பாரை நான்சிரித் தென்னைவெட்டிப்
போட்டாலும் வேறிடம் கேளேன்என் ஆணைப் புறம்விடுத்துக்
கேட்டாலும் என்னை உடையான் இடம்சென்று கேட்பன்என்றே
நீட்டாலும் வாய்உரைப் பாட்டாலும் சொல்லி நிறுத்துவனே.

(பொ - ரை.) "இறைவா! என்னிடம் சிலர், 'நீங்கள் ஏன் இவ்வாறு துயர் உறுகின்றீர்கள்? நேரே அயலாரிடம் சென்று உதவி கேட்பதற்கு, நாணம் கொண்டாலும்,

அவர்க்கு ஒரு கடிதம் எழுதியாகிலும் கேட்கலாமே' என்று கூறுவர். அப்போது நான் அவர்களை நோக்கிச் சிரித்து, 'என்னை வெட்டிப் போட்டாலும் கூட வேறு ஒருவரிடம் சென்று கேட்க மாட்டேன். இதனை என்மேல் ஆணை யிட்டுச் சொல்கின்றேன். நான் இருக்கும் இடத்தைக் கடந்து சென்று உதவியைக் கேட்பதானாலும், என்னை அடிமை கொண்டுள்ள இறைவனிடம் சென்றுதான் கேட்பேன்' என்பதை, கடித மூலமாகவும், வாய்ப் பேச்சின் மூலமாகவும், சொல்லி என் கொள்கையை நிலை நாட்டுவன்" (எ - து.)

(அ - சொ.) ஏடு, நீட்டு - கடிதம். புறம் - வெளி.

(வி - ரை.) வள்ளலாரை அணுகித் தம் வறுமையைப் போக்கச் செல்வர் எவர்க்கேனும் ஒரு சீட்டுக்கவி எழுதிக் கொடுக்க வேண்டும் என்று சென்னைக் கந்தசாமி முதலியார் வேண்டியபோது நம் ஐயா இவ்வாறு பாடினர் என்றும் சிலர் கருதுவர். (32)

சீர்க்கின்ற கூடலில் பாணனுக் காட்படச் சென்றஅந்நாள்
வேர்க்கின்ற வெம்மணல் என்தலை மேல்வைக்கும் மேல்அடிக்கும்
பேர்க்கின்ற தோறும் உறுத்திய தோஎனப் பேசிஎண்ணிப்
பார்க்கின்ற தோறும்என் கண்ணேஎன் உள்ளம் பதைக்கின்றதே.

(பொ - ரை.) "என் கண்மணி போன்ற இறைவனே! சிறப்புப் பொருந்திய மதுரைமாநகரில் பாணபத்திரன் பொருட்டு விறகாளாய்ச் சென்ற அந்த நாளில் வியர்வை கொட்டுகின்ற வெயிலில் வெம்மையான மணலில் என்தலை மீது சூட்டுகின்ற மென்மை பொருந்திய திருவடிகளைப் பெயர்த்துப் பெயர்த்துத் தரையில் எடுத்து வைக்கும் தோறும் தைத்ததோ என்று பேசும்போதும், எண்ணிப் பார்க்கும் போதும் என் உள்ளம் பதைக்கின்றது. (எ - து.)

(அ - சொ.) கூடல் - மதுரை. பாணன் - பாணபத்திரர். உறுத்தியது - தைத்தது.

(இ - கு.) தோறும் என்பது ஓர் இடைச்சொல்.

(வி - ரை.) பாணபத்திரருக்கு இறைவன் விறகாளாகச் சென்ற வரலாற்றை. இருபத்தேழாவது செய்யுளின் விசேட உரையில் காண்க.

இறைவனுக்கு எந்நிலையிலும் எந்தத் துன்பம் வந்துறாது என்றாலும், அன்பர்களின் உள்ளம் இறைவன் அன்பர்களின் பொருட்டுச் சிற்சில சமயங்களில் துன்பத்திற்கு ஆளாகும் போது அத்துயரால் இறைவன் வருந்தக் கூடும் என்று எண்ணி ஏங்கும். இதனை உளத்தில் கொண்டுதான் வள்ளலார் "பாணர்க்கு ஆட்படச் சென்ற அந் நாள்வேர்க்கின்ற வெம் மணல் பேர்க்கின்றதோறும் உறுத்தியதோ?" என்று வினவுவார் ஆயினர். (33)

நீயேஎன் தந்தை அருளுடை யாய்எனை நேர்ந்துபெற்ற
தாயேநின் பால்இடத் தெம்பெரு மாட்டிஇத் தன்மையினால்
நாயேன் சிறிதும் குணம்இலன் ஆயினும் நானும்உங்கள்
சேயே எனைப்புறம் விட்டால் உலகம் சிரித்திடுமே.

(பொ - ரை. "அருளுடைய இறைவனே! என் தந்தையும் நீயே! என்னை வேண்டிப் பெற்ற தாயும் நீயே! உன் இடப் பக்கத்தில் உள்ள எம் தெய்வமாம் உமாதேவியும் நீயே! இன்னோரன்ன காரணங்களால் நாய்க்கு நிகரான நான் கொஞ்சமேனும் நற்குணம் இல்லாதவனாய் இருந்தாலும், நான்கூட உங்கள் பிள்ளைதானே! அப்படி இருக்க என்னை வெளியே தள்ளிவிட்டால் உலகத்தில் உள்ள மக்கள் சிரிக்கமாட்டார்களோ? (எ - து.)

(அ - சொ.) நேர்ந்து - வேண்டி. சேய் - பிள்ளை புறம் - வெளி.

(இ - கு.) நானும், என்பதில் உள்ள உம்மை இறந்தது தழுவிய எச்ச உம்மை. இழிவு சிறப்பு உம்மை எனினும் ஆம். உலகம், இட ஆகுபெயர்.

(வி - ரை.) வள்ளலார் அம்மை அப்பரை நோக்கி, "இறைவனே! உன் பிள்ளைகள் விநாயகன், முருகன் மட்டுமா? நான்கூட உனக்குப் பிள்ளை இல்லையா?" என்ற முறையில் தான் 'நானும் உங்கள் சேய்' என்றனர். உலகம் என்பது உலகத்தில் உள்ள மக்களைக் குறித்து நிற்கிறது. (34)

**தெருளும் பொருளும்நின் சீர்அரு ளெனத் தேர்ந்தபின்யான்**
**மருளும் புவனத் தொருவரை யேனும் மதித்ததுண்டோ**
**வெருளும் புவியில் துயரால் கலங்கி வெதும்புகின்றேன்**
**இருளும் கருமணி கண்டா அறிந்தும் இரங்கிலையே.**

(பொ - ரை.) "இருண்ட கரிய நீலமணி போன்ற கழுத்தையுடைய இறைவனே! அறிவின் தெளிவும், செல்வமும் எனக்கு உன் சிறப்புடைய திருவருள்தான் என்று நான் அறிந்த பிறகு மயக்கமுடைய உலகில் எந்த ஒருவரையும் மதித்தது இல்லையே. எல்லோரும் அஞ்சும் உலகில் நான் துன்பத்தால் கலக்கமுற்று வாடிப் போகின்றேன். என் நிலையை அறிந்தும் என்னிடம் இரக்கம் காட்டவில்லையே." (எ - து.)

(அ - சொ.) மணி - நீலமணி. கண்டா - கழுத்தையுடைய சிவபெருமானே. தெருள் - தெளிவு. வெருள் - அச்சம். புவி - உலகு. வெதும்பு - வாட்டம்.

(வி - ரை.) இறைவன் திருவருள் கைவரப்பெற்றவர் உலகில் உள்ள எவரையும் ஒரு பொருளாக மதிப்பதில்லை. இதுவே முதல் இரண்டடிகளின் கருத்து. இந்தக் கருத்துக்கு,

"திருவும் மெய்ப்பொருளும் செல்வமும் எனக்குன்
சீருடைக் கழல்கள் என்றெண்ணி
ஒருவரை மதியா துறுமைகள் செய்தும்
ஊடியும் உறைப்பனாய்த்திரிவேன்"

என்றும் நம்பி ஆரூரர் வாக்குத் துணைசெய்யும். (35)

**பெண்ணால் மயங்கும் எளியேனை ஆளப் பெருங்கருணை**
**அண்ணாநின் உள்ளம் இரங்காத வண்ணம் அறிந்துகொண்டேன்**
**கண்ணார் உலகில்என் துன்பம்எல் லாம்வெளி காணில்இந்த**
**மண்ணா பிலத்தொடு விண்நாடும் கொள்ளை வழங்கும்என்றே.**

(பொ - ரை.) "பேரருளுடைய அண்ணலே! பெண் இன்பத்தில் மயங்கும் எளியேனை ஆட்கொள்ள உன் உள்ளம் இரக்கம் காட்டாத நிலையினை அறிந்து கொண்டேன். நீ என்மீது இரக்கம் காட்டாமைக்குக் காரணம், இடம் அகன்ற இந்த உலகத்தில் என் துன்பங்களை எல்லாம் வெளி உலகில் பிறரால் காணப்பட்டால் இந்த மண்ணுலகம் மட்டும் அன்று; கீழ் உலகம் மட்டும் அன்று; தேவலோகமும் தம் தம் சிற்றின்பத் துயரை மிகுதியாக எடுத்துச் சொல்லத் தொடங்கிவிடும் என்பதனால்தான் போலும் என்பதை நான் இப்போது அறிந்து கொண்டேன்." (எ - து.)

(அ - சொ.) கண் - இடம். ஆர் - நிறைத்த. மண்ணா - மண்ணுலகம் மட்டுமா. பிலம் - கீழ் உலகம். விண் - மேல் உலகம். கொள்ளை வழங்கும் - மிகுதியாக எடுத்துச்சொல்லும்.

(இ - கு.) பிலத்தொடு என்பதில் உள்ள ஒடு எண்ணுப் பொருளில் வந்த ஓர் இடைச்சொல். (36)

**நெறிகொண்ட நின்அடித் தாமரைக் காட்பட்டு நின்றஎன்னைக்**
**குறிகொண்ட வாழ்க்கைத் துயராம் பெரிய கொடுங்கலிப்பேய்**
**முறிகொண் டலைக்க வழக்கோ வளர்த்த முடக்கிழநாய்**
**வெறிகொண்ட தேனும் விடத்துணி யார்இவ் வியன்நிலத்தே.**

(பொ - ரை.) "நேர்மையினைக் கொண்ட உன் திருவடித் தாமரைகளுக்கு அடிமைப்பட்டுநின்ற என்னைக் குறிக்கோளைக் கொண்ட உலக வாழ்க்கையாகிய துன்பத்தால் பெரிய கொடிய வறுமைப் பேய், என்னை அடிமை ஆக்கி அலைத்தல்

முறையாகுமா? இந்தப் பரந்த உலகத்தில் கால் அற்றும் கிழப் பருவம் உற்றும் இருந்த நாய் பைத்தியம் கொண்ட தாலும் அதனை வளர்த்தவர்கள் விட்டுவிடத் துணிவார் களா? விடமாட்டார்களே!'' (எ - து.)

(அ - சொ.) நெறி - நேர்மை. கலி - வறுமை, தரித்திரம். வியன் - பரந்த.

(இ - கு) வியன் - உரிச்சொல்.

(வி - ரை.) தங்களால் வளர்க்கப்பட்ட நாய் பின்னால் கால் ஒடிந்து முடமாகிக் கிழப்பருவம் உற்றாலும், அதைத் துரத்திவிட மனம் இசையார். அதுபோல "இறைவரே! நான் வெறுக்கத்தக்க நிலையினை அடைந்தவனாயினும் நீ என்னைக் கைவிடலாகாது" என்று இறைவரை வள்ளலார் வேண்டினார் என்பது இதன் உள்ளுறை. (37)

மதியாமல் ஆரையும் நான்இறு மாந்து மகிழ்கின்றதெம்
பதியாம் உனது திருவருள் சீர்உரம் பற்றிஅன்றோ
எதியார் படினும் இடர்ப்பட் டலையஇவ் ஏழைக்கென்ன
விதியா இலீப்பட மாட்டேன் அருள்செய் விடையவனே.

(பொ - ரை.) "இடபவாகனத்தை யுடையவனே! நான் யாரையும் பொருட்படுத்தாமல் தருக்கி மகிழ்ந்து இருப்பதற்குக் காரணம், எங்கள் தலைவனும் உனது திருவருளின் சிறப்பாகிய வன்மை பற்றியே ஆகும். யார், எந்தத் துன்பப் பட்டு வருந்தினாலும் இந்த ஏழையாகிய நான் துன்பப்பட்டு அலைய எனக்கென்ன தலைவிதியா? அப்படித் துன்பம் பட எனக்குத் தலைவிதி கிடையாது. ஆகவே நான் துன்பப் படமாட்டேன். எனக்குத் திருவருள் புரிவாயாக.'' (எ - து.)

(அ - சொ.) விடை - இடபம். உரம் - வன்மை.

(இ - கு.) ஆர், யார் என்பதன் மரூஉ வழக்கு. எது+யார் என்பது எதியார் என்றாயது, குற்றியலிகரம் புணர்ச்சி நோக்கி ஆகும். எதி என்பதில் உள்ள இகரம் குற்றியலிகரம்.

(வி - ரை.) இறைவன் திருவருளால் விதியையும் வெல்லக் கூடும் என்னும் கருத்தினால்தான் இடர்ப்பட்டிலை என்ன விதியா என்று வன்மையுடன் வினவுவார் ஆயினர். மார்க்கண்டேயர் விதியை வென்றனர் அல்லரோ? இதை மனத்தில் கொண்டே இவ்வாறு உரத்துடனும் உரிமையுடனும் நம் ஐயா கூறினர். (38)

**கற்கோட்டை நெஞ்சரும் தம்பால் அடுத்தவர் கட்குச்சும்மாச்**
**சொற்கோட்டை ஆயினும் கட்டுவர் நின்னைத் துணிந்தடுத்தேன்**
**அற்கோட்டை நெஞ்சுடை யேனுக் கிரங்கிலை அன்றுலவா**
**நெற்கோட்டை ஈந்தவன் நீஅல்லை யோமுக்கண் நின்மலனே.**

(பொ - ரை.) "மூன்று கண்களையுடைய தூயோனே! கல்லால் அமைந்த கோட்டைபோல அவ்வளவு வன்மை மிக்க நெஞ்சுடையவராயினும், தம்மைச் சரண்புகுந்தவர் கட்கு ஒரு சிறு உதவியைக்கூடச் செய்யாமல் போனாலும், 'நான் அதைச் செய்வேன், இதைச் செய்வேன்', என்று சொல்லால் கோட்டை கட்டுவர். ஆனால், நீ இவ்வாறு பயன் அற்ற மொழிகளைச் சொல்லமாட்டாய் என்று உன்னைத் துணிந்து அடைக்கலம் புகுந்தேன். நீ ஒரு சமயம் எடுக்க எடுக்கக் குறையாத நெற் கோட்டையைத் தந்தவன் அல்லையோ? அப்படி இருக்க அஞ்ஞான இருள் நிறைந்த கோட்டையாகிய மனம் கொண்ட எனக்கு ஏன் நீ இரக்கம் காட்டவில்லை?" (எ - து.)

(அ - சொ.) நின்மலன் - அழுக்கு இல்லாதவன், தூயவன். அல் - இருள், அஞ்ஞானம். உலவா - வற்றாத.

(இ - கு.) கோட்டை நெஞ்சு, உவமைத் தொகை. சொற்கோட்டை, மூன்றும் வேற்றுமைத் தொகை.

(வி - ரை.) உள்ளத்தில் வஞ்சகம், அஞ்ஞானம் முதலான தீய பண்புகள் குடிகொள்ளும் போது உள்ளம் இருள் அடையும். அதனால் அல் கோட்டை நெஞ்சம் எனப் பட்டது. துணிந்து இறைவனை அடுத்தமைக்குக் காரணம், அவன் வெறும் பேச்சுப் பேசி அனுப்பாமல் அருள்புரிந்தே அனுப்புவான் என்பதனால் என்க. சீவான்மாக்களாகிய நாம் ஆணவம், கன்மம், மாயை என்னும் மும் மலங்களைப் பொருந்தியவர்கள். இறைவன் இம் மலங்களுக்கு இடம் கொடாதவன். அதனால்தான் ஈண்டு நின் மலன் எனப் பட்டான்.

அடியார்க்கு நல்லார் என்னும் பெயரிய வேளாளர் ஒருவர் இருந்தார். இவர் பெருஞ் செல்வர். இவர் அடியார்களுக்கு அன்னம் அளித்து இன்புற்று வாழ்ந்து வந்தார். இவரது அன்பை உலகறிய இவரது செல்வம் நாளும் நாளும் குறையு மாறு இறைவர் திருஉள்ளத்தில் எண்ணம் கொண்டார். இறைவன் திருவுள்ளப்படி செல்வம் குறைந்தது. என்றாலும், அவர் கடன் வாங்கி அடியார்கட்கு அன்னம் அளித்து வந்தார். கடன் கொடுப்பாரும் கடன் கொடுக்க மறுத்தனர். அடியார்களுக்கு அன்னம் கொடுக்காத போது தாம் மட்டும் உண்டு வருதல் முறை அன்று என்று எண்ணித் தாமும் அவர் மனைவியாரும் பட்டினி கிடந்தனர். அதன் பிறகு தாம் அடியார்களுக்கு உணவு அளிக்க இயலாத உடம்பை வைத்துக்கொண்டு என்ன பயன் எனக்கொண்டு தம் உயிரை மாய்த்துக்கொள்ள முடிவு கட்டினர். இறைவர் வேளாளரது முடிவை உணர்ந்து அவர்க்கு எடுக்க எடுக்கக் குறையாத நெற் கோட்டையை அளித்து அவரது துயரைப் போக்கினர். அதைப் பெற்று (உலவாக் கோட்டையை)

அவர் முன்போல் சிவனடியார்களுக்கு உணவளிக்கும் தொண்டில் ஈடுபட்டு வந்தார். இதன் விரிவைத் திருவிளையாடல் புராணத்தில் உலவாக் கோட்டை அருளிய படலத்தில் காண்க. இந்த வரலாறே இங்கு, "உலவா நெற் கோட்டை ஈந்தவன்" என்று கூறப்பட்டது. (39)

**ஆதிக்க மாயை மனத்தேன் கவலை அடுத்தடுத்து**
**வாதிக்க நொந்து வருந்துகின் றேன்நின் வழக்கம்எண்ணிச்**
**சோதிக்க என்னைத் தொடங்கேல் அருளத் தொடங்குகண்டாய்**
**போதிக்க வல்லநல் சேய்உமை யோடென்உள் புக்கவனே.**

(பொ - ரை.) "உண்மை அன்பர்கட்கு உபதேசம் செய்ய வல்ல நல்ல குழந்தையாகிய முருகனுடனும், உமாதேவியுடனும் என்னுள் புகுந்து அருள் செய்யும் இறையோனே! மூன்று மலங்களில் ஒன்றான மாயை என்னும் அழுக்குத் தனக்கு உரிமையாக்கிக் கொண்ட உள்ளம் கொண்டவனாகிய என்னைத் துயரம், தொடர்ந்து தொடர்ந்து துன்புறுத்த அதனால் வாடி வருந்துகின்றேன். நீ அடியார்களைச் சோதிக்கும் வழக்கத்தை எண்ணி, என்னையும் சோதிக்கத் தொடங்காதே. எனக்குத் திருவருள் புரிய ஆரம்பிப்பாயாக" (எ-து.)

(அ - சொ.) சேய் - முருகனாம் குழந்தை. ஆதிக்கம் - உரிமை.

(இ - கு.) அடுத்து அடுத்து, அடுக்குத்தொடர். கண்டாய் என்பது முன்னிலை அசைச்சொல்.

(வி - ரை.) முருகப் பெருமான் அகத்தியர், அருணகிரிநாதர் முதலானவர்கட்கு உபதேசம் செய்தவர் ஆதலின் அவரைப் "போதிக்க வல்ல நல்சேய்" என்றனர். வள்ளலார் உள்ளத்தில் "சோமாஸ்கந்தர் குடிகொண்டிருந்தமையின் சேய் உமையோடு என் உள்புக்கவனே" என்றனர். இறைவர் அடியார்களைப் பலவிதமாக சோதித்து ஆட்கொண்ட வழக்கத்தைப் பெரிய புராணத்தில் பரக்கக் காண்க. (40)

**பிறைமுடித் தாண்டொரு பெண்முடித் தோய்பிள்ளைப் போர்முடித்த**
**நிறைமுடித் தாண்டஅஞ் செவ்வேணி செய்திட நித்தம்மன்றில்**
**மறைமுடித் தாண்டவம் செய்வோய்என் பால்அருள் வைத்தெளியேன்**
**குறைமுடித் தாண்டுகொள் என்னே பலமுறை கூறுவதே.**

(பொ - ரை.) "பிறையைச் சூடி, அந்த இடத்திலேயே கங்காதேவியையும் தரித்து ஒப்பற்ற சரக்கொன்றை மாலையையும் நிறைய முடித்து என்னை ஆண்டு கொண்ட அழகும் செம்மையுமான சடையையுமுடைய பெருமானே! தினமும் பொற்சபையிலும் வேதத்தின் உச்சியிலும் நின்று நடனத்தைத் தவறாது செய்வோனே! என்மீது திருவருள் காட்டி எளியேனுடைய குறைகளை நீக்கி ஏற்றுக் கொள்வாயாக. நான் ஏன் உன்னிடம் என் துயரைத் தீர்க்க என்று பலமுறை சொல்ல வேண்டும்? உனக்கு என் துயரைத் தீர்க்க வேண்டும் என்பது தெரியுமே." (எ - ம்.)

(அ - சொ.) ஆண்டு - அங்கு (சடையில்) பெண் - கங்காதேவி. பிள்ளைப் பேர் - சரக்கொன்றை. வேணி - சடை. மன்று - சபை. மறைமுடி - வேதத்தின் உச்சி. என்னே - ஏன்.

இறைவன் நடனம் உலக இயக்க நடனம். ஆதலின், "நித்தம் மன்றில் தாண்டவம் செய்திட"[3] எனப்பட்டது. இறைவன் எங்கும் ஆடுகின்றான். இதனைத் திருமந்திரம்,

பூதங்கள் ஐந்தில் பொறியில் புலன்ஐந்தில்
வேதங்கள் ஐந்தில் மிகுமாம் அகம்தனில்
ஓதும் கலைகாலம் ஊழியுடன் அண்டப்
போதங்கள் ஐந்தில் புணர்ந்தாடும் சித்தனே

நாதத் தினில்ஆடி நற்பதத் தேஆடி
வேதத்தில் ஆடித் தழல்அந்தம் மீதாடி
போதத்தில் ஆடிப் புவன முழுதாடும்
தீதற்ற தேவாதி தேவர் பிரானே.

என்னும் பாடல்களில் அறிவிப்பதைக் காண்க. இந்தக் கருத்தில்தான் "மறைமுடித்தாண்டவம் செய்வோய்" என்றனர் வள்ளலார். மதலை என்பது சரக் கொன்றை மலரைக் குறிக்கும். அதனை முடித்தவர் என்னும் குறிப்பைப் "பிள்ளைபேர் முடித்த" என்னும் தொடர் குறிப்பிடுகின்றது. மதலை என்னும் சொல் பிள்ளையையும் குறிக்கும் ஆதலின், மதலை என்று கூறாமல் பிள்ளைப்பேர் என்று நயம் தோன்ற வள்ளலார் குறிப்பிட்டார் என்க. (41)

**நடங்கொண்ட பொன்அடி நீழலில் நான்வந்து நண்ணும்மட்டும்**
**நீடங்கொண்ட நின்புகழ் அல்லால் பிறர்புகழ் செப்பவையேல்**
**விடங்கொண்ட கண்டத் தருட்குன்ற மேஇம வெற்புடையாள்**
**இடங்கொண்ட தெய்வத் தனிமுத லேஎம் இறையவனே.**

(பொ - ரை.) "திருப்பாற்கடலில் தோன்றிய விடத்தை அடக்கிக்கொண்ட கழுத்தையுடைய அருள்நிறைந்த குன்றமே! இமய மலையில் பிறந்த உமாதேவியை இடப்பக்கத்தே கொண்ட தெய்வமாகிய ஒப்பற்ற முழுமுதல் பொருளே! எங்கள் இறையவனே! திருநடனம் செய்கின்ற உன் அழகிய திருவடி நிழலில் வந்துஅடையும் வரையில் என் வாயால் வன்மையுடைய உன் புகழைத் தவிர்த்துப் பிறருடைய புகழை நான் பேசுமாறு செய்ய வேண்டா." (எ-து.)

(அ - சொ.) இம வெற்பு - பனி மலை. தனி - ஒப்பற்ற. நடம் - நடனம். பொன் - அழகு. நண்ணும்மட்டும் - அடையும் வரையில்.

(இ - கு.) நடனம் என்பது நடம் என்றது இடைக் குறை. நிழல், நீழல் என ஆனது நீட்டல் விகாரம். செப்பு, திசைச்சொல்.

(வி - ரை.) இறைவன் தேவர்களின் உயிர் பிழைக்க அருள் கொண்டு விடம் உண்டான். ஆதலின் அவன் அருள்

குன்றே எனப்பட்டான். சிவபெருமானுக்கு ஒப்பு எவரும் இல்லை ஆதலின், அவனைத் தனிமுதலே என்றனர். 'தனக்குவமை இல்லாதான்' என்பர் திருவள்ளுவர். 'ஒப்புனக்கு இல்லா ஒருவனே' என்பர் மணிமொழியார். பெருமானுக்கு முன் எவரும் தோன்றிலர் ஆதலின், அவனை 'முதலே' என்றனர். "முன்னைப் பழம்பொருட்கும் முன்னைப் பழம் பொருளே" என்பது திருவாசகம். "எல்லார்க்கும் முன்னே தோன்றி முளைத்தானை" என்பது அப்பர் வாக்கு. (42)

**விழிக்கஞ்ச னம்தரும் மின்னனார்தம் வாழ்க்கையில் வீழ்ந்தயலோர்**
**மொழிக்கஞ்சி உள்ளம் பொருது நின் நாமம் மொழிந்தெளியேன்**
**குழிக்கஞ்சி போல்மயங் கின்றேன் அருளக் குறித்திலையேல்**
**பழிக்கஞ்சி னேய்இன்னும் என்பழிக் கஞ்சப் படும்உனக்கே.**

(பொ - ரை) "பழிக்கு அஞ்சினவனே! கண்ணுக்கு மை பூசும் மின்னலைப் போன்று ஒளியுடன் விளங்கும் பெண்களுடன் வாழும் வாழ்க்கையில் ஆழ்ந்து, அன்னியர்களின் பழிச் சொல்லுக்குப் பயந்து மனம் சகிக்கமாட்டாது உன் திருப்பெயராகிய ஐந்தெழுத்து மந்திரத்தைக் கூறியும், ஏழையாகிய நான் குழியில் ஊற்றப்படும் கஞ்சியைப்போல மயங்குகின்றேன். இப்படி வருந்தும் எனக்குத் திருவருள் புரிய உன் உள்ளத்தில எண்ணங்கொள்ளவில்லை என்றால், என் பழிக்கும் நீ அஞ்சும் நிலை உனக்கு வந்து சேரும்." (எ - து,)

(அ - சொ.) அஞ்சனம் - மை. மின்னார் - மின்னல் ஒளி போன்ற பெண்கள். நாமம் - பெயர்.

(இ - கு.) மயங்குகின்றேன் எனற்பாலது மயங்கின்றேன் என்றாயது இடைக்குறை.

(வி - ரை.) யார் பெண் போகத்தில் ஈடுபட்டு வாழ்க்கையைப் பாழ் படுத்துகின்றார்களோ, அவர்களை நல்லோர் பழித்தும் இழித்தும் பேசுவர். அதனை உட்கொண்டே

'அயலோர் மொழிக்கு அஞ்சி' என்றனர். கழிநீர், கஞ்சி முதலானவற்றை ஒரு குழியில் ஊற்றிக்கொண்டே இருப்பர். அதனை மாடு ஆடு குடித்துச் செல்லும். இங்கு வள்ளலார் குழிக் கஞ்சியை உவமை கூறியதன் கருத்து, அந்தக் குழி என்றும் கஞ்சி ஊற்றப்பட்டு நிறைந்திருப்பது போல நானும் காம மயக்கத்தாலும், துயராலும் என்றும் நிறைந்து கொஞ்சங்கூட வற்றாது துயர்கின்றேனே என்பதை விளக்கு வதற்காகவே ஆகும். குழி ஈண்டுப் பள்ளமான நீர்த் தொட்டி. குழி தம்மையும், கஞ்சி காம மயக்கம், கோபம், துன்பம் ஆகியவற்றையும் குறித்து நிற்கின்றன.

ஒரு பிராம்மணன் தன் மனைவியுடனும் தன் குழந்தை யுடனும் தன் மாமனார் வீட்டிற்குச் செல்லப் புறப்பட்டான். வெயில் மிக்கமையால் ஓர் ஆலமர நிழலில் தன் மனைவியை யும் குழந்தையையும் தங்கவிட்டுத் தண்ணீர் கொணரச் சென்றான். அவன் வருவதற்குள் ஓர் அம்பு அவன் மனைவி மீது பாய்ந்து அவளைக் கொன்றுவிட்டது. அவன் அந்த நிலையைக் கண்டு வருந்திச் சுற்றும் முற்றும் பார்க்கையில், சிறிது தூரத்தில் ஒரு வேடன் கையில் அம்பும் வில்லுமாக நிற்பதைக் கண்டு; இவன்தான் தன் மனைவியைக் கொன்றான் என்று உறுதிசெய்து, அவனைப் பாண்டிய மன்னனிடம் அழைத்துச் சென்றான். வேடன் தான் கொல்லவில்லை என்று எவ்வளவு கூறியும் அவனைச் சிறையில் அடைத்துவிட்டனர்.

பாண்டியன் உள்ளம் மட்டும் அவனைச் சிறையில் இட்டதுபற்றி அமைதி கொள்ளவில்லை. இதன் உண்மை யினை இறைவன்தான் தீர்க்கவேண்டுமென்று மதுரைப் பெருமானிடம் முறையிட்டான். சொக்கேசப் பெருமான் பாண்டியனையும் மனைவியை இழந்த பிராம்மணனையும் அங்கு நடக்க இருக்கும் ஒரு திருமணத்திற்கு உருமாறிச் செல்லப் பணித்திட்டான். அப்படியே இருவரும் சென்றிருந்தனர்.

அத் திருமணத்தில் இரண்டு யமதூதர்கள் வேற்றுருவில் வந்திருந்தனர். அவர்கள் மணமகனுடைய உயிரைக் கவர்ந்து போகவே வந்தவர்கள். ஓர் இயம தூதன் "மணமகனின் உயிரை எப்படிக் கொண்டு செல்வது?" என்றபோது மற்றொரு தூதன், "இஃது என்ன அரிய காரியமா? பார்ப்பினியின் உயிரை என்றோ மரத்தில் பொத்தி இருந்த அம்பைக் காற்றால் அசைத்து அஃது அவள்மீது பாயச்செய்து அவள் உயிரைக் கொல்லவில்லையா? அதுபோல் மாட்டை மிரளவிட்டு இவன் உயிரைக் கொல்வோம்" என்று கூறினான். அவ்வாறே ஒரு மாடு மேளச் சத்தத்தாலும் மற்றும் திருமண ஆரவாரத்தாலும் மருண்டு மணமகனைக் குத்திக் கொன்றது. இந்த நிகழ்ச்சியினை நேரே கண்ட இருவர்களும் பார்ப்பினி இறந்தமைக்குக் காரணன் வேடன் அல்லன் என்று உணர்ந்து அவனை விடுதலை செய்தனர்.

பழி ஓர் இடம் பாவம் ஓர் இடம் ஆயிற்று அன்றோ! ஆகவே இது பழிக்கு அஞ்சினதாயிற்று. இந்த வரலாறு திருவிளையாடல் புராணத்தில் பழிக்கஞ்சின படலத்தில் உளது. இதனையே ஈண்டுப் "பழிக்கஞ்சினோய்' என்றனர்.

**சேல்வைக்கும் கண்உமை பாகாநின் சித்தம் திருஅருள்என்**
**பால்வைக்கு மேல்இடர் எல்லாம் எனைவிட்டப் பால்நடக்கக்**
**கால்வைக்கு மேநல் சுகவாழ்வென் மீதினில் கண்வைக்குமே**
**மால்வைக்கும் மாயைகள் மண்வைக்கு** மேதங்கள் வாய்தனிலே.

(பொ - ரை.) "சேல்மீனைப் போன்ற கண்களைப் பெற்ற உமாதேவியை இடப் பக்கத்தே வைத்துள்ள இறைவனே! எனக்குத் திருவருள் புரிய உன் மனம் சிறிது தயவு கொள்ளுமானால், என் துன்பம் எல்லாம் என்னைவிட்டு அப்பால் நடந்துபோகக் கால் எடுத்துச் செல்லுமே. சுகவாழ்வு என்மீது நாட்டம் வைக்குமே. மயக்கத்தைச் செய்யும்

மாயைகள் தம் வாயில் மண் போட்டுக் கொள்ளுமே (எ - து.)

(அ - சொ.) சேல் - சேல்மீன். மால் - மயக்கம்.

(வி - ரை.) இறைவியின் திருக்கண்கள் சேல்கெண்டை போன்றவை. இது குறித்தே அவள் மீனாட்சி எனப்படுவாள். அட்சி என்பதன் பொருள் கண்ணை யுடையவள் என்பது. மீனாட்சி என்பதன் தமிழ்ப் பெயர் கயற்கண்ணி என்பது.

"அங்கயற்கண்ணி தன்னொடு அமர்ந்த ஆலவாயான்" என்பது திருஞான சம்பந்தர் திருவாக்கு. மாயைகள் மண் வைக்கும் என்பதன் கருத்து வாயில் மண்ணைப் போட்டுக் கொண்டு போகும் என்பது. (44)

ஒருமாது பெற்ற மகன்பொருட் டாக உவந்துமுன்னம்
வருமாமன் ஆகி வழக்குரைத் தோய்என் வழக்குரைத்தற்
கிருமா நிலத்தது போல்வேடம் கட்ட இருத்திகொலோ
திருமால் வணங்கும் பதத்தவ யான்உன் சிறுவன்அன்றே.

(பொ - ரை.) "மகாவிஷ்ணு வணங்குகின்ற திருவடிகளை யுடையவனே! முன் ஒரு சமயம் ஒரு வணிக மாது பெற்ற மகனுக்காக மனம் மகிழ்ந்து மாமனாக வந்து வழக்கை வென்றவனே! அதுபோல என் வழக்கையும் பேசித் தீர்ப்பதற்கு இந்தப் பெரிய உலகில் நீ ஒரு தோற்றத்தைக் காட்ட இருக்கிறாயோ? நான் உன் மகன் இல்லையே. நீ எப்படி என் பொருட்டு வழக்குத் தீர்க்க வருவாய்?" (எ - து).

(அ - சொ.) திருமால் - விஷ்ணு. உவந்து - மகிழ்ந்து. இருமா - மிகப்பெரிய.

(இ - கு.) பதத்தவ, விளிவேற்றுமை. பொருட்டு என்பது நான்காம் வேற்றுமைச் சொல்உருபு. இருமை + மா

எனப் பிரிக்கவேண்டும். பெரிய என்னும் பொருளைக் குறிக்க இரண்டு சொற்கள் வந்தமையின் இஃது ஒருபொருள் பன்மொழி எனப்படும்.

(வி - ரை.) மதுரையில் தனபதி என்னும் பெயரிய வணிகன் ஒருவன் இருந்தான். அவனுக்குப் பிள்ளை இல்லை. ஆகவே, விதவையான தன் தங்கை மகனைத் தன் மகன் போல ஏற்று வளர்த்தான். ஒருநாள் தனபதி தன் மனைவிமீது கொண்ட காதல் பெருக்கினால் தங்கையோடு சண்டையிட்டான். அப்போது தங்கை தன் தமையனை நோக்கி, "நீ பிள்ளைப்பேறு அற்ற பாவி. என் மகனால்தான் புத்தென்னும் நரகத்தைப் போக்குவாய்" என்று பேசினாள். இந்த மொழிகளைக் கேட்ட தனபதி மறுபிறப்பிலேனும் பிள்ளைப்பேற்றை அடையத் தன் பொருள் முழுவதையும் தத்தெடுத்து வளர்த்த பிள்ளைக்கு எழுதி வைத்துவிட்டுத் தன் மனைவியுடன் காட்டில் தவஞ்செய்யப் போய்விட்டான். தனபதி திரும்பி வராததைக் கண்ட தனபதியின் சுற்றத்தார் சிறுவன் பெற்ற சொத்துகளைப் பிடுங்கிக்கொண்டனர்.

தனபதியின் தங்கை, சொக்கலிங்கப் பெருமானிடம் முறையிட்டாள். இறைவர் அவள் கனவில் தோன்றி "நாளைக்கு நாம் நீதிமன்றத்தில் வந்து உன் வழக்கை உன் பக்கம் தீர்த்துவைப்போம்" என்று கூறினார். அவ்வாறே இறைவர் சிறுவனின் மாமனாகிய தனபதியின் வடிவுடன் வந்து வழக்கை வென்று செல்வம் முழுவதையும் சிறுவனே பெறுமாறு செய்தார் இதுவே, "மாமனாகி வழக்குரைத்தோய்" என்பதில் அடங்கிய வரலாறு. இதனைத் திருவிளையாடற் புராணத்தில் காண்க

(45)

முன்னஞ்சம் உண்ட மிடற்றரசே நின் முழுக்கருணை
அன்னம் சுகம்பெற உண்டும்உன் பால்அன் படைந்திலதால்
கன்னெஞ்ச மோகட்டை வன்நெஞ்ச மோஎட்டிக் காய்நெஞ்சமோ
என்னெஞ்சம் எந்நெஞ்ச மோதெரி யேன்இதற் கென்செய்வதே.

(பொ - ரை.) "முன் ஒரு சமயம் விடத்தை உண்ட கழுத்தையுடைய தலைவனே! உன்னுடைய முழுக்கருணையினால், உடல் நல் வளம்பெறச் சோற்றை உண்டும் உன்னிடம் என்மனம் அன்பு கொள்ளவில்லையே. இதனால் என் மனம் கல்லாகவோ அல்லது கட்டைபோன்று வன்மை மிக்கதாகவோ, அல்லது எட்டிக் காய்போன்று கசப்புடையதாகவோ இருக்குமோ? என் மனம் மேலே காட்டப்பட்ட பொருள்களுள் எதைப் போன்றதாக இருக்குமோ? ஒன்றும் புரியவில்லையே. இதற்கு நான் என்ன செய்வேன்?" (எ - து.)

(அ - சொ.) நஞ்சம் - விடம். மிடறு - கழுத்து.

(இ - கு.) நஞ்சு என்பது நஞ்சம் என்றிருப்பது அம் எனும் சாரியை ஏற்றிருப்பதனால் என்க. மிடறு + அரசு. இலது + ஆல். ஆல் என்பது அசை.

(வி - ரை.) நாம் உட்கொள்ளும் ஒவ்வொரு பொருளும் இறைவன் திருவருளினால் பெறுவதாகும். ஆகவேதான் முழுக்கருணை அன்னம் சுகம்பெற உண்டும் என்றனர். (46)

வானம் விடாதுறு கால்போல்என் தன்னை வளைந்துகொண்டே
மானம் விடாதிதற் கென்செய்கு வேன்நின்னை வந்தடுத்தேன்
ஊனம் விடாதுழல் நாயேன் பிழையை உளங்கொண்டிடேல்
ஞானம் விடாத நடத்தோய்நின் தண்அருள் நல்குகவே.

(பொ - ரை.) "ஞானானந்தத் திருநடனம் புரியும் கூத்தரசே! வானத்தை விட்டு நீங்காத பெருங் காற்றுப்போல் என்னை வளைந்துகொண்ட அபிமானமானது என்னை விடவில்லை. இதற்கு நான் என் செய்வேன்? இந்த உலகப் பற்றை விட்டு நீங்கவேண்டும் என்னும் காரணத்தினால்தான் உன்னை வந்தடுத்துள்ளேன். தீமையை விடாமல், அலைகின்ற நாய் போன்றவனான நான் செய்கின்ற தவறுகளை மனத்தே

கொள்ளவேண்டா. உன் நல் அருளைத் தந்தாட்கொள்வா யாக." (எ - து.)

(அ - சொ.) நடத்தோய் - திருநடனம் புரிபவனே! உறு - பெரிய. கால் - காற்று. மானம் - அபிமானம். அகங் காரம். ஊனம் - தீமை. தண்ணருள் - நற்கருணை.

(இ - கு.) உறு - உரிச்சொல். அபிமானம் என்பது மானம் என நின்றது முதற்குறை.

(வி - ரை.) இறைவன் நடனம், ஞான நடனம் என்ப தைத் திருமந்திரம்,

"ஆனத்தி ஆடிப் பின்நவக் கூத்தாடிக்
கானத்தி ஆடிக் கருத்தில் தரித்தாடி
மூனச் சுழுமுனையில் ஆடி முடிவில்லா
ஞானத்துள் ஆடி முடித்தான் நாதனே!

என்று கூறுவது கொண்டு தெளிக. காற்றின் இருப்பிடம் ஆகாயம். ஆதலின், "வானம் விடாது உறுகால்" எனப் பட்டது. காற்று ஆகாயத்தை விட்டு நீங்காதிருப்பதுபோல, அகங்காரம் தம்மை விட்டு நீங்காமைக்கு, "மானம் விடாது உழல் நாயேன்" எனப்பட்டது (47)

நாயும் செயாத நடையுடை யேனுக்கு நாணமும்உள்
நோயும் செயாநின்ற வன்மிடி நீக்கிநல் நோன்பளித்தாய்
பேயும் செயாத கொடுந்தவத் தால்பெற்ற பிள்ளைக்குநல்
தாயும் செயாள்இந்த நன்றிகண் டாய்செஞ் சடையவனே.

(பொ - ரை.) "சிவந்த சடையுடைய சங்கரனே! நாயும் செய்யாத் தீய நடத்தைகளையுடைய எனக்கு நாணத்தை யும் மனத் துயரையும் செய்கின்ற கொடிய வறுமையை ஒழித்து நல்ல தவ விரதத்தை மேற்கொள்ளத் திருவருள்

புரிந்தாய். பேய்கூடச் செய்யாத வன்மையான நோன்பு களைச் செய்து பெற்ற பிள்ளைக்கு நல்தாய் கூட, நீ செய்த நன்றியைப் போலச் செய்ய மாட்டாள். நீ இன்று செய்த நன்மை உன் கருணைப் பெருக்கைக் காட்டுகின்றது." (எ—று.)

(அ - சொ.) நடை - நடத்தை, தீய ஒழுக்கம். செயா நின்ற - செய்கின்ற. மிடி - வறுமை. தவம் - நோன்பு.

(இ - கு.) நாயும், பேயும் என்பனவற்றில் உள்ள உம் இழிவு சிறப்பு. தாயும் என்பதில் உள்ள உம் உயர்வு சிறப்பு. நாணமும். நோயும் என்பனவற்றில் உள்ள உம் எண்ணும்மை. செயாநின்ற என்பதை செய் + ஆநின்று + அ. என்று பிரிக்கவும். ஆநின்று என்பது நிகழ்கால இடைநிலை. அ, பெயரெச்ச விகுதி.

(வி - ரை.) பொறுத்தற்கரிய தவம் செய்தமையின் "பேயும் செயாததவம்" எனப்பட்டது. வறுமையுற்ற காலத்தில் தாயும் தன் மகனை விரும்பாள். "இல்லானை (பொருள் இல்லாதவனை) இல்லாளும் வேண்டாள் ஈன்றெடுத்த தாய் வேண்டாள் செல்லாது இவன் வாயிற் சொல்" என்னும் ஔவையாரின் அருள் வாக்கைக் காண்க. வறுமையின் கொடுமையினைப் பற்றிக் கூறவந்த ஒரு புலவர்

தாங்கொணு வறுமை வந்தால் சபைதனில் செல்ல நாணும்
வேங்கைபோல் வீரம் குன்றும் விருந்தினர் காண நாணும்
பூங்கொடி மனையாட் கஞ்சும் புல்லருக் கிணங்கச் செய்யும்
ஓங்கிய அறிவு குன்றும் உலகெலாம் பழிக்கும் தானே

என்று கூறுதல் காண்க. இது குறித்தே "நாணம் உள் நோயும் செயாநின்ற வன்மிடி" எனப்பட்டது! (48)

உருவத்தி லேசிறி யேன்ஆக் ஞகத்தில் ஒன்றும்இன் றித்
தெருவத்தி லேசிறு கால்வீசி ஆடிடச் சென்றஅந்தப்
பருவத்தி லேநல் அறிவளித் தேஉனைப் பாடச்செய்தாய்
அருவத்தி லேஉரு வானேஎய்நின் தன்அளி யார்க்குளதே.

(பொ - ரை.) "அருவ வடிவிலும் உருவ வடிவு கொண்ட சிவபெருமானே! வடிவத்தில் சிறியவானுகிப் பகுத்தறிவு சிறிதும் இல்லாமல், தெருவில் கால்வீசி ஆடச் சென்ற அந்தச் சிறு பருவத்திலேயே நல் அறிவு தந்து உன்னைப் பாடும்படி செய்தாய்! இப்படி எனக்குச் செய்த உன் நல் கருணை எவர்க்கேனும் இருக்க முடியுமா? ஒருவருக்கும் இருக்க முடியாது." (எ - து.)

(அ - சொ.) அருவம் - உருவற்ற வடிவம், யூகம் - பகுத்தறிவு, ஒன்றும் இன்றி. சிறிதும் இல்லாமல், தண்ணளி - நல் கருணை.

(இ - கு.) அருவத்தில் உருவானேய், முரண்தொடை. இன்றி, குறிப்பு வினைஎச்சம்.

(வி - ரை.) இறைவன் ஒன்பது பேதங்களிலும் கலந்து நின்று ஆன்மாக்கள் உய்ய ஐந்தொழில் நடத்துவான் அவனுடைய ஒன்பது பேதங்கள் நான்முகன், திருமால், உருத்திரன், மகேசன் (இந்தப் பேதங்கள் உருவத் திருமேனிகள் ஆகும்) விந்து, நாதம், சத்தி, சிவம் (இந்தப் பேதங்கள் அருவத் திருமேனிகள் ஆகும்) சதாசிவம், (இந்தப் பேதம் அருவுரு) என்பன. இவ்வொன்பது உருவங்களையும் உணர்த்தும் முறையில் "அருவத்தில் உருவானேய்" என்றனர். இந்தத் திருமேனியின் அருமையினைச் சிவஞான சித்தியார்,

"உருமேனி தரித்துக் கொண்ட தென்றலும் உருவிறந்த
அருமேனி அதுவும் கண்டோம் அருவுரு ஆனபோது
திருமேனி உபயம் பெற்றேம் செப்பிய மூன்றும் நந்தம்
கருமேனி கழிக்க வந்த கருணையின் வடிவு காணே."

என்று விளக்குதல் காண்க.

வள்ளலார் இந்தப் பாட்டின் மூலம் இறைவர் சிறுவயதில் தம்மை ஆட்கொண்ட அருள்திறத்தைப் பாராட்டிப்

பேசியுள்ளார். "பாடுவித்தால் ஆர் ஒருவர் பாடா தாரே" என்று அப்பர் கூறுவதனால், இறை திருவருளால் இளமையிலும் பாடக் கூடும் என்பது அறிய வருதல் காண்க. ஆளுடைய பிள்ளையாரும் இளவயதில் பாடினர் அல்லரோ ?.

மான்எழுந் தாடும் கரத்தோய்நின் சாந்த மனத்தில்சினம்
தான்எழுந் தாலும் எழுகஎன் றேஎன் தளர்வைஎல்லாம்
ஊன்எழுந் தார்க்கநின் பால்உரைப் பேன்அன்றி ஊர்க்குரைக்க
நான்எழுந் தாலும்என் நாஎழு மோமொழி நல்கிடவே.

(பொ - ரை.) "மான் எழுந்தாடும் கையை யுடைய இறைவனே! உனது பொறுமை நிறைந்த மனத்தில் கோபம் வந்தாலும் வரட்டும் என்றுதான் என் மனச் சோர்வை என் உடல் எழுந்து ஆரவாரம் செய்ய உன்னிடம் சொல்வேனே அல்லாமல், ஊராரிடம் சொல்லப் புறப்படமாட்டேன். ஒரு வேளை என் உடல் ஊர் மக்களிடம் கூறக் கிளம்பினாலும், என் நாக்கு அவர்களிடம் என் குறையை எடுத்துச்சொல்ல முற்படாது." (எ - து.)

(அ - சொ.) சினம் - கோபம். ஊன் - தசை. ஆர்க்க - ஆரவாரம் செய்ய. நல்கிட - ஈண்டுச் சொல்ல என்னும் பொருளது. மொழி - சொல்.

(இ - கு.) ஊர்க்கு என்பது ஊரில் உள்ள மக்களுக்கு எனப் பொருள் தருதலின் இட ஆகுபெயராம்.

(வி - ரை.) நாம் உணர்ச்சி வேகத்தில் பேசத் தொடங்கும்போது உடல் மிக்க ஆரவாரத்தோடு பேசும். ஆதலின், "உடல் எழுந்து ஆர்க்க" எனப்பட்டது. (50)

வனம்எழுந் தாடும் சடையோய்நின் சித்தம் மகிழ்தல்அன்றிச்
சினம்எழுந் தாலும் எழுகஎன் றேஎன் சிறுமையைநின்
முனம்எழுந் தாற்றுவ தல்லால் பிறர்க்கு மொழிந்திடஎன்
மனம்எழுந் தாலும்என் வாய்எழு மோஉள்ள வாறிதுவே.

(பொ - ரை.) "அழகு நிறைந்து விளங்கும் சடையுடைய இறைவனே! உன் உள்ளம் மகிழ்ச்சி கொள்ளாது கோபம் கொண்டாலும் கொள்க என்று அறிந்தே, என் குறைகளை உன் திருமுன்கூறி மனம் அமைதி கொள்வதே அல்லாமல், பிறரிடம் சொல்ல என் உள்ளம் ஒருவேளை எண்ணம் கொண்டு புறப்பட்டாலும், என்வாய் அவர்களிடம் கூற முற்படுமா? உண்மை இதுதான். பொய் அன்று." (எ - து.)

(அ - சொ.) வனம் - அழகு, சிறுமை - குறைகள், ஆற்றுவது - அமைதி உறுவது.

(இ - கு.) முனம் என்பதில் உள்ள அம் சாரியை. பிறர் இடம் என்று ஏழாம் வேற்றுமையுடன் வரவேண்டியது பிறர்க்கு என நான்காம் வேற்றுமை பெற்று வந்திருப்பது உருபு மயக்கம் பற்றி என்க. (51)

சிற்பர மேஎம் சிவமே திருஅருள் சீர்மிகுந்த
கற்பக மேஉனைச் சார்ந்தோர்க் களிக்கும்நின் கைவழக்கம்
அற்பம்அன் றேபல அண்டங் களின்அடங் காததென்றே
நற்பர ஞானிகள் வாசகத் தால்கண்டு நாடினனே.

(பொ - ரை.) "மேம்பட்ட பரம்பொருளே! எங்கள் சிவபெருமானே! திருவருளாகிய மேன்மை மிகுந்த கற்பகமே! 'உன்னைச் சரண்புகுந்தவர்களுக்கெல்லாம் நீ திருவருள் பேற்றைக் கொடுக்கும் உன் திருக்கையின் வழக்கம் சாதாரணமானது அன்று. நீ அருளும் பான்மை பற்பல உலகங்களிலும் அடங்காதது' என்று நல்ல மேன்மையுடைய ஞானிகள் கூறும் திருவார்த்தைகளை அறிந்துதானே உன்னை நாடி வந்தேன்?" (எ - து.)

(அ - சொ.) சித்பரம் மேம்பட்ட பரம்பொருள் (இறைவன்) அண்டம் - உலகம் பரம் - மேலான.

(வி - ரை.) இறைவன் அன்பர்கட்குத் திருவருள் புரியும் பான்மை, அற்பமானது அன்று. அது மிக மிகப் பெரியது. இந்த அருள்பான்மையை மணிமொழியார்.

"காலம்உண் டாகவே காதல்செய் துய்மின் கருதரிய
ஞாலம்உண் டானொடு நான்முகன் வானவர் நண்ணரிய
ஆலமுண் டான்எங்கள் பாண்டிப் பிரான்தன் அடியவர்க்கு
மூலபண் டாரம் வழங்குகின் றான்வந்து முந்துமினே."

என்று விளக்கமுறக் கூறியுள்ளனர். இதனால்தான் "கை வழக்கம் அற்பம் அன்றே, பல அண்டங்களிலும் அடங்காது" எனப்பட்டது.

அண்டங்கள் பற்பல. இந்த உண்மையினையும் நம் திருவாதவூரர்,

அண்டப் பகுதியின் உண்டைப் பிறக்கம்
அளப்பரும் தன்மை வளப்பெருங் காட்சி
ஒன்றனுக் கொன்று நின்றெழில் பகரின்
நூற்றுக் கோடியின் மேற்பட விரிந்தன. என்பர்.

இவ்வாறு மணிமொழியார் கூறி இருப்பதால்தான் "நற்பர ஞானிகள் வாசகத்தால் கண்டு நாடினனே" என்றனர் நம் ஐயா. (52)

வருஞ்செல்லுள் நீர்மறுத் தாலும் கருணை மறந்தவங்கள்
பெருஞ்செல்வ மேஎம் சிவமே நினைத்தொழப் பெற்றும்இங்கே
தருஞ்செல் அரிக்கும் மரம்போல் சிறுமைத் தளர்நடையால்
அருஞ்செல்லல் மூழ்கிநிற் கின்றேன் இதுநின் அருட்கழகே.

(பொ - ரை.) "ஆகாய வழியே செல்கின்ற மேகம் தன்னிடம் உள்ள நீரைப் பெய்ய மறுத்தாலும், கருணை செய்வதை மறக்காத எங்கள் பெருஞ் செல்வமே! எங்கள்

சிவமே! உன்னை வணங்கும் பேற்றை அடைந்தும், இயற்கை உண்டுபண்ணும் செல்லால் அரிக்கப்பட்ட மரம்போல், வறுமையாகிய தளர்நடையால், துன்பத்தில் மூழ்கி நிற்கின்றேன். இவ்வாறு துயரால் வருந்தி இருப்பது உன் பேரருள் தன்மைக்கு அழகாகுமா?'' (எ - து.)

(அ - சொ.) செல் - மேகம், செல் எனும் ஒரு வகைப் பூச்சி. மருத - மறவாத. சிறுமை - வறுமை. செல்லல்- துன்பம்.

(வி - ரை.) இறைவன் திருவருள் என்றைக்கும் அடியவர்கட்கு உண்டு என்னும் உண்மையினை உணர்த்தவே 'செல்லுள் நீர் மறுத்தாலும் கருணை மருத எங்கள் பெருஞ் செல்வமே' என்றனர். ஈஸ்வரனே என்பதன் நேர் தமிழ் மொழி 'செல்வமே' என்பது. (53)

கருமுகம்நீக்கிய பாணனுக் கேகன கம்கொடுக்கத்
திருமுகம் சேரற் களித்தோய்என் றுன்னைத் தெரிந்தடுத்தேன்
ஒருமுகம் பார்த்தருள் என்கின்ற ஏழைக் குதவிலையேல்
உருமுக ஆர்க்கும் விடையோய் எவர்மற் றுதவுவரே.

(பொ - ரை.) ''இடியும் கூடத் தளர் வெய்தும்படி ஆரவாரம் செய்யும் இரடப வாகனமுடைய இறைவனே! வறுமையால் துன்பமுற்ற பாணபத்திரனுக்கு அவ்வறுமை நீங்க அவனுக்குப் பொன் கொடுத்து உதவும்படி ஒரு கடிதம் எழுதிச் சேரமான் பெருமாள் நாயனாருக்கு அனுப்பியவன் என்று உன் கொடைக் குணத்தை உணர்ந்துதான் உன்னை அடைந்தேன். அப்பாணனுக்கு அருளியதுபோல, நீ திருமுகம், (கடிதம்) காட்டி அருள மனமில்லை என்றாலும், உன் திருமுகத்தால் என்னை ஒருமுறை பார்த்தேனும் அருள் செய்க என்கின்ற இந்த ஏழைக்கு நீ உதவிசெய்யவில்லை என்றால், எனக்கு வேறு யார் உதவி செய்வர்?'' (எ - து.)

(அ - சொ.) கருமுகம் - வறுமைக் கொடுமையால் மாறுபட்ட முகம். கனகம் - பொன், திருமுகம் - கடிதம், சேரன் - சேரமான் பெருமாள் நாயனுர், உரும் - இடி, உக - தளர்வுகொள்ள, ஆர்க்கும் - ஆரவாரம் செய்யும், விடை - இரடபம்.

(இ - கு.) கருமை + முகம்.

(வி - ரை.) இரடபத்தின் ஆரவாரம் இடி ஓசையின் மிக்கிருக்கின்றமையின் "இடி உக" எனப்பட்டது. ஒருமுகம் பார்த்தருள் என்று நம் ஐயா இரக்கத்துடன் வேண்டுவதைப் படிக்கும்போது,

பாராயோ என்னைமுகம் பார்த்தொருகால் என்கவலை
தீராயோ வாய்திறந்து செப்பாய் பராபரமே

என்னும் தாயுமானுர் திருவாக்கு நினைவுக்கு வருகிறது.

மதுரையில் பாணபத்திரர் என்பவர் சிவபெருமான் முன் யாழ் வாசிக்கும் கட்டப்பாட்டில் ஈடுபட்டிருந்தார். அவர் நாளுக்கு நாள் வறுமையில் வாடினுர். இதனுல் சொக்கலிங்கப் பெருமான் மனம் இரக்கம்கொண்டு இவரது வறுமை தீரப் பொருள் தரும்படி சேரமன்னராம் சேரமான் பெருமாள் நாயனுர்க்கு ஒரு கடிதம் எழுதிப் பாணபத்திரரிடமே கொடுத்துச் சேர மன்னரிடம் கொடுக்கச் செய்தார். அக்கடிதம் கண்ட கழறிற்றறிவார் (சேரமான் பெருமாள் நாயனுரின் மற்றெரு பெயர்) பாணபத்திரருக்குப் பொன் தந்தனுப்பினுர். இறைவர் எழுதித் தந்த பாடல்,

மதிமலி புரிசை மாடக் கூடல்
பதிமிசை நிலவும் பால்நிற வரிச்சிறகு
அன்னம் பயில்பொழில் ஆல வாயின்
மன்னிய சிவன்யான் மொழிதரும் மாற்றம்

பருவக் கொண்மூப் படிஎனப் பாவலர்க்கு
உரிமையின் உரிமையின் உதவி ஒளிதிகழ்
குருமா மதிபுரை குலவிய குடைக்கீழ்ச்
செருமா உகைக்கும் சேரலன் காண்க
பண்பால் யாழ்வல பாண பத்திரன்
தன்போல் என்பால் என்பன் தன்பால்
காண்பது கருதிப் போந்தனன்
மாண்பொருள் கொடுத்து வரவிடுப் பதுவே

என்பது.

இந்த வரலாறே, "பாணனுக்கே கனகம் கொடுக்கத் திருமுகப் சோறகளித்தோய்" என்னும் தொடரில் அமைந்துளது. மேலும் இதன் விரிவைக் காண விழைவோர் திருவிளையாடற் புராணத்தில் திருமுகம் கொடுத்த படலத்தில் காணவும். (54)

மருப்பா வனத்துற்ற மாணிக்கு மன்னன் மனம்அறிந்தோர்
திருப்பா சுரம்செய்து பொன்கிழி ஈந்தநின் சீர்நினைந்தே
விருப்பா நினையடுத் தேன்எனக் கீந்திட வேஇன்றென்னை
கருப்பாநின் சித்தம் திருப்பாய்என் மீது கறைக்கண்டனே.

(பொ - ரை.) "விடம் பொருந்திய கழுத்தை யுடையவனே! மணம் பரவியுள்ள கடம்ப வனத்தில் வந்து சேர்ந்த பிராமணனுக்கு அருள் செய்யப் பாண்டிய மன்னன் மனத்தில் இருந்த உண்மைக் கருத்தை உணர்ந்து ஒரு திருப்பாடலை எழுதி அவனிடமே கொடுத்தனுப்பிப் பொன் முடிப்பைப் பெறும்படி செய்த உன் சீரிய அருள்குணத்தை எண்ணி மகிழ்ச்சியுடன் உன்னை அடைந்தேன். இப்போது எனக்கு அவ்வாறு திருவருள் புரிய உனக்கென்ன பஞ்சமா? இன்று நீ உன் மனத்தை என்பக்கம் திருவருள் புரியத் திருப்புவாயாக". (எ - து.)

(அ - சொ.) கறை - விஷம். மரு - வாசனை. பா - பரவும். வனம் - கடம்பக்காடு. (மதுரை) மாணி - தருமி என்னும் பிராம்மணன். மன்னன் - வாங்கிய சூடாமணிப் பாண்டியன். (இவனுக்குச் சண்பக மாறன் என்னும் பெயரும் உண்டு) திருப்பாசுரம் - சிறந்த அழகிய பாடல். பொன் கிழி - பொன் முடிப்பு. கருப்பா - பஞ்சமா.

(வி - யு.) சண்பக மாறனும் அவன் மனைவியும் அரண் மனையின் மேல் மாடத்தில் தனித்தனியே அமர்ந்திருந்தனர். அப்போது வேனிற் காலம் ஆதலின், தன் மனைவியின் கூந்தலி லிருந்து மணம் வீசுவதை உணர்ந்தான். அம்மணம் புதிய மணமாக இருந்தமையினால், அது தன் மனைவி கூந்தலின் இயற்கை மணம் என்று தீர்மானித்து அதனை எவர்க்கும் கூறாமல், 'என் மனத்தில் உள்ள முடிவை எவர் கூறுகிறார் களோ அவர் இப்பொன் முடிப்பைப் பெறலாம்' என்று ஆயிரம் பொற் காசுகள் அடங்கிய ஒரு பையை மதுரைத் தமிழ்ச் சங்கத்தின் மண்டபத்தில் கட்டித் தொங்கவிடச் செய்தான். அதைப் பெறுதற்குப் பல புலவர்கள் பல பாடல்களைச் செய்து மன்னனுக்குக் காட்டினர். அவற்றுள் ஒன்றேனும் அவன் உள்ளக் கருத்தை உணர்த்துவதாக அமையவில்லை

இந்த நிலையில் தருமி என்னும் பிராம்மணன் மதுரை சொக்கலிங்கப் பெருமானிடம் சென்று "இறைவ! நான் அநாதை. எனக்கு மணம் செய்துகொள்ள விருப்பம். ஆகவே, பாண்டியன் மனம் மகிழும் முறையில் ஒரு பாடலைப் பாடித் தருக" என்று கூற, இறைவர் அவ்வாறே,

"கொங்குதேர் வாழ்க்கை அஞ்சிறைத் தும்பி
காமம் செப்பாது கண்டது மொழிமோ
பயிலியது கெழீஇய நட்பின் மயிலியல்
செறிஎயிற் றரிவை கூந்தலின்
நறியவும் உளவோநீ அறியும் பூவே"

என்னும் பாடலைப்பாடிப் பாண்டியன் மனம் மகிழும்படி செய்து பொற்கிழியைத் தருமி பெறத் திருவருள் புரிந்தார். இதனை வியந்து அப்பர்பெருமானும் "நன் பாட்டுப் புலவனாய்ச் சங்கம் ஏறி நற்கனகக்கிழி தருமிக்கு அருளினோன் காண்" என்று பாராட்டிப் பேசியுள்ளார். இந்த வரலாறே "மாணிக்கு மன்னன் மனம் அறிந்தோர் திருப்பாசுரம் செய்து பொற்கிழி ஈந்த நின்சீர்" என்னும் வரிகளில் உளது. இதன் வரலாற்றை மேலும் அறிய அவாவுவோர் திருவிளையாடல் புராணத்துள் தருமிக்குப் பொற்கிழி அளித்த படலத்தில் காண்பார்களாக.

**பீழையை மேவும்இவ் வாழ்க்கையி லேமனம் பேதுற்றஇவ்**
**ஏழையை நீவிட லாமோ அடிமைக் கிரங்குகண்டாய்**
**மாழையைப் போல்முன்னர்த் தாம்கொண்டு வைத்து வளர்த்தஇள**
**வாழையைத் தாம்பின்னர் நீர்விடல் இன்றி மறுப்பதுண்டே.**

(பொ - ரை.) "உலக மக்கள், முன்பு பொன்போலத் தாம் கொண்டுவந்த ஒரு வாழைக் கன்றைப் போற்றி வளர்த்துப் பிறகு அதற்கு நீர் விடுதல் இல்லாமல், அதனை வேண்டா என்று வெறுப்பரோ? ஒருபோதும் வெறுக்க மாட்டார்கள். போற்றியே அவ் வாழை மரத்தை வளர்ப்பர். அதுபோலத் துன்பத்தையே பொருந்தப் பெற்ற இந்த உலக வாழ்க்கையில் அறிவு கலங்கி வாடிய உள்ளம் பெற்ற இந்த ஏழையை நீ கைவிடலாமா? ஆகவே, இந்த அடிமையினிடத்து இரக்கம் காட்டுக எம்பெருமானே!" (எ - து.)

(அ - சொ.) மாழை - பொன். பீழை - துன்பம். பேதுற்ற - அறிவு கலங்கிய. இரங்கு - இரக்கம் காட்டுக.

(இ - ரு.) கண்டாய் - முன்னிலை அசைச் சொல்.

(வி - ரை.) "இன்னாதம்ம இவ்வுலகம் இனிய காண்கிலர் இயல்புணர்ந்தோரே" எனும் புறநானூற்று வரிகளும், "தாம் வளர்த்ததோர் நச்சு மாமரம் ஆயினும் கொலார்

நானும் அங்ஙனே உடைய நாதனே'' என்னும் திருவாசக வரிகளும், முறையே ''பீழையை மேவும் இவ் வாழ்க்கை'' ''வைத்து வளர்த்த இளவாழையைத் தாம் பின்னர் நீர் விடல் இன்றி மறுப்பதுண்டோ'' என்னும் வள்ளலார் வாக்கைப் படிக்கும்போது நம் நினைவுக்கு வருகின்றன. (56)

**கருத்தறி யாச்சிறி யேன்படும் துன்பக் கலக்கம்எல்லாம்**
**உருத்தறி யாமை பொறுத்தருள் ஈபவர் உன்னைஅன்றித்**
**திருத்தறி யார்பிறர் அன்றேமென் கன்றின் சிறுமைஒன்றும்**
**எருத்தறி யாதுநல் சேதா அறியும் இரங்குகவே.**

(பொ - ரை.) ''உண்மைப் பொருளை அறியாத சிறியவனாகிய நான் படும் துன்பத்தால் ஏற்படும் கலக்கங்களைக் கடுங் கோபம் கொள்ளுதல், அறியாமை உறுதல் ஆகிய இவற்றை எல்லாம் பொறுத்து எனக்குத் திரு அருள் செய்பவர் உன்னைத் தவிர்த்து யார் உளர்? பிறர் என்னைத் திருத்தி நல்வழிப்படுத்த அறியார். இளங்கன்றின் வருத்தத்தை எருது உணராது. நல்ல பசுவன்றோ கன்றின் துயரை அறியும்? ஆகவே என் மீது இரக்கம் காட்டுக பெருமானே!'' (எ - து.)

(அ - சொ.) கருத்து - நல்ல பொருள். உருத்து - கடுங் கோபம். திருத்து - திருத்தம். சிறுமை - வருத்தம். எருத்து - எருது. சேதா - நல்ல பசு, செம்மையான பசு.

(இ - கு.) உருத்துதல், திருத்துதல் எனப்படுபவை, உருத்து, திருத்து என நிற்றல் முதல் நிலைத் தொழிற் பெயர் ஆதல் பற்றி என்க. எருது என்பது எருத்து என ஆயது; விரித்தல் விகாரம் பற்றி ஆம். செம்மை + ஆ = சேதா.

(வி - ரை.) ஈண்டுப் பிற தெய்வங்களை எருதாகவும், சிவபெருமானைப் பசுவாகவும், தம்மைக் கன்றாகவும் கொண்டு பாடியுள்ள நயத்தைக் காணவும். (57)

வான்வேண்டிக் கொண்ட மருந்தோமுக் கண்கொண்ட வள்ளல்உன்னை
நான்வேண்டிக் கொண்டது நின்அடி யார்க்கு நகைதருமீ
தேன்வேண்டிக் கொண்டனை என்பார் இதற்கின்னும் ஏன்இரங்காய்
தான்வேண்டிக் கொண்ட அடிமைக்குக் கூழிடத் தாழ்ப்பதுண்டே.

(பொ - ரை.) "முக்கண்கொண்ட எல்லாம் கொடுக்க வல்ல வள்ளலே! உன்னை நான் வேண்டிக் கேட்பது, தேவர்கள் வேண்டிய தேவாமிருதத்தையா? இல்லையே. நான். தேவாம்ருதத்தை உன்னிடம் வேண்டினால் உன் அடியார்க்கு நகைப்பைத்தான் உண்டாக்கும். அவர்கள் என்னை நோக்கி, நீ ஏன் இறைவனிடம் தேவமுதத்தை வேண்டினை என்பர். எனவே, நீ இன்னும் எனக்கு உன் திருவருளைப் புரிய ஏன் இரக்கம் காட்டவில்லை. ஓர் வேலைக்காரன் தன் எசமானனிடம் குடிக்கக் கூழை வேண்டினால், அதைக் கூடக் கொடுக்க அவன் எசமானன் தாமதிக்கலாமோ?" (எ - து.)

(அ - பொ.) வான் - மேல் உலகில் உள்ள தேவர்கள். மருந்து - தேவாமுதம். நகை - சிரிப்பு.

(இ - கு.) வள்ளல், அண்மைவிளி. வான், இட ஆகு பெயர். ஈது, நீட்டல் விகாரம்.

(வி - ரை.) தேவாமுதத்தைத் தேவர்கள் உண்டும் இறந்தனர் ஆதலின், அதனைப் பெறுதலில் அவ்வளவு சிறப்பில்லை. ஆகவேதான் அதனை வேண்ட நல் அடியவர்கள் மறுத்தனர். இந்த உண்மையினை உணர்த்தவேதான் "நான் வேண்டிக்கொண்டது வான் வேண்டிக் கொண்ட மருந்தோ" என்றும் "நின் அடியார்க்கு நகை தரும்" என்றும், "ஏன் வேண்டிக்கொண்டனை என்பர்" என்றும் வள்ளலார் ஈண்டுக் கூறியுள்ளனர். (58)

**பையுரைத் தாடும் பணிப்புயத் தோய்தமைப் பாடுகின்றோர்
உய்யுரைத் தாஉள்ள தில்லதென் றில்லதை உள்ளதென்றே
பொய்யுரைத் தாலும் தருவார் பிறரது போல்அன்றிநான்
மெய்யுரைத் தாலும் இரங்காமை நின்அருள் மெய்க்கழகே.**

(பொ - ரை.) "படமெடுத்து ஒலியுடன் ஆடுகின்ற பாம்பை உடலில் அணிந்துள்ள இறைவனே! பாடலைப் பாடுகின்ற புலவர்கள் தாம் வாழவேண்டி ஒருவனிடத்தில் உள்ள குணங்களுள் இருப்பனவற்றை இல்லை என்றும், இல்லாதனவற்றை உள்ளன என்றும் பொய்யாகப் பாடினாலும் ஒரு சிலர் அப்படி வந்து பாடிய புலவர்களுக்கு ஏதேனும் கொடுத்தனுப்புவர். நான் அவர்களைப் போல் பொய்யாக ஒன்றும் சொல்லாமல் உண்மையினையே சொல்லுகின்றேன். அப்படி இருந்தும் எனக்கு நீ இரக்கம் காட்டாமல் இருப்பது உன் உண்மைப் பண்பிற்கு அழகாகுமா?" (எ-து.)

(அ - சொ.) பை - பாம்பின் படம். பணி - பாம்பு. உய் - ஈடேறுதல்.

(இ - கு.) பாடுகின்றோர், வினையால் அணையும் பெயர். உய், முதல் நிலைத் தொழிற் பெயர். இரங்காமை, எதிர்மறைத் தொழிற்பெயர்.

(வி - ரை.) சிவபெருமான், தாருகாவனத்து இருடிகள் செய்த யாகத்தை அழித்த காரணத்தால் கோபம் கொண்டு பாம்புகளை ஏவி இறைவனைக் கொல்லத் துணிந்தனர். இறைவர் அவர்களின் அறியாமைக்கு இரங்கி அவர்கள் ஏவிய பாம்புகளைத் தம் உடலில் ஆபரணமாகத் தரித்துக் கொண்டார். இதுவே, 'பணிப்புயத்தோய்' என்னும் தொடரில் உள்ள வரலாறு.

இந்த வரலாறு இவ்வாறிருக்க ஒரு புலவர் வேடிக்கையாகத் தட்டானுக்குப் பயந்துதான் சிவபெருமான் பாம்பையே

நகையாக அணிந்து கொண்டுள்ளான் என்று நகைச்சுவை தோன்றப் பாடியுள்ளனர். மணிமொழியாரைப் போன்ற ஞானிகள் இறைவர் விருப்பு வெறுப்பு இல்லாதவர் என்பதைக் காட்டவே பாம்பை அணிந்தனர் என்பர்.

புலவர்கள் தம் வறுமை காரணமாகச் செல்வர்களை அடைந்து அச் செல்வர்கள் பொய்யே பேசுபவர்களாய், ஈயாத கருமிகளாய் இருந்தாலும், அவர்களை அரிச்சந்திரனே, கற்பகமே, சிந்தாமணியே என்று பாடுவது இயல்பு.

"சீருலா வியகாம தேனுவே தாருவே சிந்தா மணிக்கு நிகரே
செப்புவச னத்தரிச் சந்திரனே எனலும்"

என்று அட்டாவதானம் சரவணப் பெருமாள் கவிராயர் பாடிய பாடலைக் காணவும். இந்த உண்மையினையே நம் வள்ளலார், 'பாடுகின்றோர், உய்யுரைத் தாஉள்ள தில்லதென் றில்லதை உள்ளதென்றே பொய்யுரைத்து' என்று பாடிக் காட்டினர்.

வள்ளலார், இறைவர் விடம்கொண்ட பாம்பையும் ஏற்றுத் திருவருள் புரிந்தது போலத் தாமும் கொடியராக இருந்தாலும் ஏற்றருள வேண்டுமென்று வேண்டினர் என்க.

மடல்வற் றினும் மணம்வற் றுறுத மலர்எனஎன்
உடல்வற் றினும்என் உள்வற்று மோதுயர் உள்ளஎல்லாம்
அடல்வற் றுறுதநின் தாட்கன்றி ஈங்கய லார்க்குரையேன்
கடல்வற் றினும் கருணைவற் றுதமுக் கண்ணவனே.

(பொ - ரை.) "கடல், நீர் இன்றி வற்றினாலும், கருணை ஒரு சிறிதும் குறையாத முக்கண் மூர்த்தியே! இதழ்கள் வற்றினாலும் தன்னிடம் இயற்கையில் அமைந்த வாசனை குறையாத மலரைப்போல, என் உடல் வற்றினாலும் என் உள்ளம் உன்னி

டம் அன்புகாட்டுவதில் குறையுமோ? என்னிடமுள்ள துன்பங்கள் அனைத்தையும், வன்மை சிறிதும் குறையாத உன் திருவடிகளில் என் குறையை முறையிட்டுக் கொள்வதே அல்லாமல், வேறெவரிடமும் சென்று உரைக்கமாட்டேன்.'' (எ - து.)

(அ - சொ.) மடல் - இதழ். அடல் - வன்மை.

(இ - கு.) ஈங்கு, நீட்டல் விகாரம்.

(வி - ரை.) திருவள்ளுவர், "நெடுங்கடலும் தன்நீர்மை குன்றும் தடிந்தெழிலி, தான்நல்கா தாகி விடின்" என்று கூறியுள்ளனர். இதன் பொருள் மழை தன் நீரைக் கடலுக்குத் தரவில்லை எனில், பெரிய கடலும் தன் தன்மையில் குறையும் என்பது. "தன் நீர்மை குன்றும்" என்பதற்கு விளக்கம் தரவந்த பரிமேலழகர் "தன் இயல்பு குறைதலாவது நீர்வாழ் உயிர்கள் பிறவாமையும் மணி முதலியன படாமையும்" என்று எழுதினர். இதனால் கடலுக்கும் குன்றும் தன்மை உண்டு என்பது பெறப்படுகின்றது. இந்த உண்மையினையே, நம் ஐயா "கடல் வற்றினாலும்" என்னும் தொடரால் உணர்த்தினார்.

ஒரு சில மலர்கள் வற்றினாலும் தேனையும் மணத்தையும் கொண்டிருக்கும் என்பதற்குச் செவ்வந்தி மலரையும், மகிழம் பூவையும் உதாரணமாகக் கூறலாம். இந்த உண்மை,

"மலர்ந்த செவ்வந்திப் போதும் வகுளமும் உதிர்ந்து வாடி
உலர்ந்துமொய்த் தளித்தேன் நக்கக் கிடப்பன"

என்று திருவிளையாடற் புராணம் கூறுதல் கொண்டு தெளியலாம். இந்தக் கருத்தில்தான் நம் ஐயா, "மடல் வற்றினாலும் மணம் வற்றாத மலர்" என்றனர். இறைவன் திருவடிகளின் வன்மையினை நம் அப்பர்,

"சாட எடுத்தது தக்கன்தன் வேள்வியில் சந்திரனை
விட எடுத்தது காலனை நாரணன் நான்முகனும்
தேட எடுத்தது தில்லையுள் சிற்றம் பலத்துநட்டம்
ஆட எடுத்திட்ட பாதம்அன் றோநம்மை ஆட்கொண்டதே"

என்று பாடி உணர்த்தியுள்ளனர். இந்தக் கருத்தில்தான் நம் வள்ளலார் "அடல் வற்றுறுத திருவடி" என்று பாடிக் காட்டினர். (60)

**எள்ளிருக் கின்றதற் கேனும் சிறிதிடம் இன்றிஎன்பால்**
**முள்ளிருக் கின்றது போல்உற்ற துன்ப முயக்கம்எல்லாம்**
**வெள்ளிருக் கின்றவர் தாமும்கண் டார்எனில் மேவிஎன்தன்**
**உள்ளிருக் கின்றநின் தாட்கோதல் என்எம் முடையவனே.**

(பொ - ரை.) "எங்களை அடிமையாகக் கொண்ட முதல்வனே! வடிவில் சிறிய எள் இருப்பதற்குக்கூடச் சிறிது இடமும் இல்லாதபடி, என் உடலம் எல்லாம் முள் தைப்பது போல் வருத்தும் துன்பச் சேர்க்கை யாவற்றையும் வெளியில் இருக்கின்றவர்கள் காண்பார்களானால் அவர்கள் உன்னிடம் வந்து, என் மனத்தில் இடம் கொண்டுள்ள உன் திருவடி களில் வந்து கூறுவானேன்? நீயே தெரிந்து அத்துன்பங்களை நீக்க வேண்டாவோ?" (எ - து.)

(அ - சொ.) துன்ப முயக்கம் - துன்பச் சேர்க்கை. (சேர்ந்துள்ள துன்பம்) வெள் இருக்கின்றவர் - வெளியில் இருப்பவர்கள்.

(இ - கு.) ஓதுதல் என்பது ஓதல் என நின்றது தொகுத்தல் விகார இலக்கணம் பற்றி எனக.

(வி - ரை.) வள்ளலார் தம் திருவுள்ளத்தில் எப்போதும் சிவபெருமானின் திருவடிகளை நினைந்த வண்ணம் இருத்தலின் "என்தன் உள்இருக்கின்ற நின்தாள்" என்றனர். "எள் இருக்கின்றதற் கேனும் சிறிதிடம் இன்றி" என்னும் வரியைப்

படிக்கும்போது, "எள் இருக்கும் இடன் இன்றி உயிர் இருக்கும் இடம் நாடி" எனும் கம்பர் வாக்கு நினைவுக்கு வருகிறது. துன்பத்தின் கொடுமையை விளக்க, "முள்இருக்கின்றது போல் உற்ற துன்பம்" என்றனர். "வெள் இருக்கின்றவர் தாமும் கண்டார் எனில் மேவி ஓதல்என்?" என்று வள்ளலார் வினவுவதன் கருத்து "இறைவா! என் துயரைப் பற்றிப் பிறர் உன்னிடம் வந்து உரைத்த பிறகோ நீ உணர்வை? என் உளத்தில் நிற்கின்ற நீ உணராயோ? ஆகவே, நீயே உணர்ந்து அருள்புரிக" என்று வேண்டியவாரும். (51)

**பொன்கின்ற பூத்த சடையாய்இவ் ஏழைக்குன் பொன்அருளாம்**
**நன்கின்ற நீதரல் வேண்டும்ஐந் தோதுயர் நண்ணிஎன்னைத்**
**தின்கின்ற தேகொடும் பாம்பையும் பால்உணச் செய்துகொலார்**
**என்கின்ற ஞாலம் இழுக்குரை யாதெற் கிரங்கிடினே.**

(பொ - ரை.) "பொன்னிறப் பெற்ற கொன்றைமலர் விளங்கும் சடையுடைய பெருமானே! இந்த ஏழைக்கு உனது அருளாகிய பொன்னை நீ எனக்கு நன் முறையில் தந்தருள வேண்டும். ஐயோ! உலகத் துன்பம் என்னை அணுகி என்னை அழிக்கின்றதே! கொடிய பாம்பையும் பால் ஊட்டி வளர்த்தவர்கள் கொல்லமாட்டார்கள் என்று கூறுகின்ற இந்த உலக மக்கள், நீ எனக்கு இரக்கம் காட்டினால் உன்னைக் குற்றம் கூறமாட்டார்கள்" (எ - து).

(அ - பொ.) நண்ணி- அணுகி. ஞாலம் - உலகமக்கள்.

(இ - கு.) கின்று, ஓர் அசைச்சொல். ஞாலம், ஞாலத்தில் உள்ள மக்களை உணர்த்தலின் இட ஆகுபெயர்.

**வாய்மூடிக் கொல்பவர் போலேஎன் உள்ளத்தை வன்துயராம்**
**பேய்மூடிக் கொண்டதென் செய்கேன் முகத்தில் பிறங்குகையைச்**
**சேய்மூடிக் கொண்டுநல் பாற்கழக் கண்டும் திகழ்முலையைத்**
**தாய்மூடிக் கொள்ளுவ துண்டோ அருளுக சங்கரனே.**

(பொ - ரை.) "எல்லோருக்கும் இன்பம் செய்யும் இறைவனே! கூச்சல் இடாமல் இருப்பதற்கு வாயில் துணியை அடைத்துக் கொள்பவர்களைப் போல் என் மனத்தைக் கொடிய துன்பமாகிய பேய் மூடிக்கொண்டது. இதற்கு நான் என்ன செய்வேன்? குழந்தை, அழகுடன் விளங்கும் தன் கையால் தன் முகத்தை மூடிக்கொண்டு தாயை நோக்கித் தனக்குப் பால் தரும்படி அழுதால் குழந்தை தன்னைப் பார்க்கவில்லை என்று எண்ணி எந்தத் தாயாகிலும் தன் முலையை மூடிக் கொள்வாளா? மூடிக் கொள்ள மாட்டாள். அனைத்துயிர்க்கும் தாயாகிய இறைவா! நீ உன் குழந்தை போன்றவனாகிய எனக்கு அருள் செய்யாமல் இருப்பாயா? அருள் செய்வாயாக." (எ - து.)

(அ - சொ.) சங்கரன் - இன்பம் தருபவன். பிறங்கு திகழ் - விளங்கும். சேய் - குழந்தை.

(வி - ரை.) தாய்க்கும் சேய்க்கும் இருக்கின்ற நெருக்கமான தொடர்பைக் குலசேகராழ்வார் பாடியுள்ள

" அரிசினத்தால் ஈன்றதாய் அகற்றிடினும் மற்றவள்தன்
அருள்நினைந்தே அழும் குழவி "

என்று பாடியுள்ள பாட்டைக்கொண்டு தெளிக. (63)

தோள்வேண்டும் ஏழை மனத்தினை வேறுற்றுக் கொட்டக்கொள்ளித்
தேள்வேண்டு மோசுடத் தீவேண்டு மோவதை செய்திடவோர்
வாள்வேண்டு மோகொடுந் துன்பே அதில்என் மடங்குகண்டாய்
ஆள்வேண்டு மேல்என்னை யாள்வேண்டும் என்னுள் அருள்ஒழித்தே.

(பொ - ரை.) "தீமையையே விரும்பும் என் மனத்தை வேருக்கி, அதனை மேலும் துன்புறுத்தத் தேள் வேண்டுமா? சுட்டெரிக்கத் தீ வேண்டுமா? வதை செய்ய வாள் வேண்டுமா? என்னிடம் பொருந்தியுள்ள துயரம், கொடுமை

செய்யும் கருவிகளாக மேலே கூறப்பட்ட அவை அனைத்தினும் எட்டு மடங்கு மிக்கன அல்லவோ? ஆகவே எவரையேனும் ஆட்கொள்ள விரும்பினால் என்னை முதலில் ஆட்கொண்டு என் மனத்தில் உள்ள துயரைப் போக்கி அருள் செய்வாயாக." (எ - து)

(அ - சொ.) கோள் - தீமைக் குணங்கள், கொள்ளித் தேள் - நெருப்புப்போல் எரிக்கும் தேள். எண் மடங்கு - எட்டுப் பங்கு, ஆள் - அடிமை ஆள், அநர் - துன்பம்.

(இ - கு.) வேறு + உற்று, கண்டாய் - முன்னிலை அசைச் சொல். (64)

**விடைஇலை யோஅதன் மேல்ஏறி என்முன் விரைந்துவரப்**
**படைஇலை யோதுயர் எல்லாம் துணிக்கப் பதம்கொள்அருள்**
**கொடைஇலை யோஎன் குறைதீர நல்கக் குலவும்என்தாய்**
**புடைஇலை யோஎன் தனக்காகப் பேசஎம் புண்ணியனே.**

(பொ - ரை.) "நாங்கள் செய்த தவத்தின் பயனாக எங்கட் கமைந்த புண்ணியப் பொருளே! நான்படும் துயரைப் போக்கி அருள் செய்ய என்முன் வர விரைவில் செல்லும் இரடபம் உன்னிடம் இல்லையா? என் துன்பங்களை வெட்டி எறிய உன்னிடம் ஆயுதம் இல்லையா? அருளுடன் விளங்கும் என் தாயாகிய பார்வதி தேவியார் என் குறைகளை எடுத்து உன்னிடம் சொல்லித் திருவருள் பாலிக்க உன் பக்கத்தில் இல்லையா?" (எ - து)

(அ - சொ.) விடை - இரடபம். படை - ஆயுதம். துணிக்க - வெட்டி எறிய. அருள் கொடை - திருவருள் பாலிப்பு, நல்க - தந்தருள. குலவும் - விளங்கும். புடை - பக்கம்.

(வி - ரை.) இந்தப் பாடலில் இறைவர் தமக்கு இன்னமும் திருவருள் புரியாமைக்குரிய காரணங்களை நகைச்சுவை

தோன்ற நம் ஐயா பாடி இருப்பது படித்து இன்புறுதற்குரியது. "நீ நடந்து வரவேண்டியது இல்லையே. இரடப வாகனத்தில் விரைவில் வந்து அருள் செய்ய வரலாமே. உன்னிடம் சூலம், மழு முதலான ஆயுதங்கள் இருக்கின்றனவே. அவற்றைக் கொண்டு என் துன்பங்களை வெட்டி வீழ்த்தலாமே என்று கூறி இருப்பனவற்றை ஊன்றி நோக்குக. இவ்வாறே இவருக்கு முன்பு சுந்தரரும் இறைவர் இரடபம் ஏறிவந்து அருள் செய்யலாமே என்பதை,

முடவர் அல்லீர் இடரிலீர் முருகன் பூண்டிமா நகர்வாய்
இடபம் ஏறியும் போவ தாகில்நீர் எத்துக்கிங் கிருந்தீர் எம்
பிரானிரே

என்று பாடி உணர்த்தி யுள்ளனர்.

இறைவர் படைகளைப் பெற்றிருப்பதைக் குமரகுருபரர்

"ஏற்றுன் பரசும் பிறைகமும் சூலமும் என்னே
கரமலர் சேப்பக் கோளல்."

என்பர். சைவ எல்லப்ப நாவலரும்

"சூலப் படையேன் மழுப்படையேன் சுமந்தீர்
அருணை அமர்ந்தீரே"

என்பர். இவற்றை உணர்ந்தே ஈண்டு "படைஇலையோ துயர் எல்லாம் துணிக்க, என்றினர். இறைவனிடம் நிரம்பக் கொடைக் குணம் உண்டு. இந்த உண்மையினைச் சம்பந்தர்,

"பண்ஒன்ற இசைபாடும் அடியார்கள் குடியாக
மண் அன்றி விண்கொடுக்கும் மணிகண்டன்"

என்று கூறுதல் காண்க. இதனை அறிந்தே நம் வள்ளலார் "அருள் கொடை இலையோ? என்று வினவி விளக்குவார் ஆயினர்.

எப்போதும் ஆண்களினும் பெண்கள் அருளுடைய வர்கள். தம் மக்கள் மீது தந்தைக்குப் பெருஞ் சினம்

இருப்பினும் அதனைத் தாய்மார்கள் பக்குவமாகத் தம் கணவன்மார்களிடம் பேசிக் கோபத்தை மாற்றிவிடுவார்கள். மனைவிமார்கள் இன்றெனில் தந்தையர் கடின நெஞ்சுடைய வர்களாகவே இருப்பர். இந்த உண்மையினைக் கம்பர், வாலியின் வாய் மூலம் நன்கு விளக்கியுள்ளனர். இராமன் மறைந்து நின்று தன்மீது அம்பு எய்து கொன்றது, பக்கத்தில் சீதை இல்லாமையினால் தான் என்பதை வாலி,

கோவியல் தருமம் உங்கள் குலத்துதித் தோர்கட் கெல்லாம்
ஓவியத் தெழுத ஒண்ணு உருவத்தாய் உடைமை அன்றோ?
ஆவியைச் சனகன் பெற்ற அன்னத்தை அமிழ்தில் வந்த
தேவியைப் பிரிந்த பின்னைத் திகைத்தனை போலும் செய்கை.

என்று கூறி அறிவித்தல் காண்க. இதனை உளத்தில் கொண்டே நம் ஐயா,

"குறைதீர நல்கக் குலவும் என்தாய்
புடைஇலை யோஎன் தனக்காப் பேச" என்றனர். (65)

**நறைஉள தேமலர்க் கொன்றைகொண் டாடிய நல்சடைமேல்**
**பிறைஉள தேகங்கைப் பெண்உள தேபிறங் கும்கழுத்தில்**
**கறைஉள தேஅருள் எங்குள தேஇக் கடையவனேன்**
**குறைஉள தேஎன் றரற்றவும் சற்றும் குறித்திலதே.**

(பொ-ரை.) "தேன் நிரம்பிய இனிய பூவாகிய கொன்றைமலர் பொருந்திய நல்ல சடைமீது சந்திரன் இருக்கின்றானே! கங்கை ஆறும் அச்சடையில் பொருந்தி இருக்கிறதே! கழுத்தில் எவரும் காணும் முறையில், விடம் இருக்கிறதே. இவ்வாறெல்லாம் உன்னிடம் இவை பொருந்தி இருப்பதால் நீ அருள் உடையவன் என்று அறிகின்றேன். இவ்வாறு உன்னருள் உடைமையினை நான் அறிந்திருந்தும் இப்போது அந்த அருள் எங்குச் சென்று ஒளிந்துளதோ?

கடையவனென என்னிடம் ஏதேனும் குறையுளதோ என்று நான் கூவி முறையிடவும் சிறியேனாகிய எனக்கு அருள் செய்ய உன் உள்ளம் எண்ணவில்லையோ." (எ - து.)

(அ - சொ.) நறை - தேன், பிறங்கும் - விளங்கும். தேன் - இனிய, கறை - விடம், அரற்றவும் - வாய்விட்டுக் கதறவும், குறித்தல் - மனத்தில் எண்ணுதல்.

(இ - கு.) தேன் + மலர், பிறை உளதே, கறைஉளதே குறித்திலதே என்பனவற்றில் உள்ள ஏகாரங்கள் அசை. குறையுளதே, என்பதின் உள்ள ஏகாரம் வினா.

(வி - ரை.) இறைவன் கருணை உள்ளவன் என்பதற்குப் பிறையும், கங்கையாறும், விடமுமே போதுமான சாட்சிப் பொருள்கள் ஆகும். எவ்வாறெனில் எல்லாக் கலைகளும் குறைபட்டு வருந்திய சந்திரனைத் தன் சடையில் சூடி அனைன் கலைகள் வளரத் திருவருள் புரிந்தான். பகீரதன் பெருமுயற்சியுடன் கொணர்ந்த கங்கையின் வேகத்தை தன் சடையில் அடக்கிப் பின் பகீரதன் வேண்ட இமய மலையில் சிறிது பாய்ச்சி அவன் வேண்டுகோளை நிறைவேற்றினர். தேவர்கள் விடத்தைக் கண்டு அஞ்சி ஓடியபோது அவர்கள் அச்சத்தைப் போக்க அந்த விடத்தைத் தான் உண்டு தன் கழுத்தில் தங்க வைத்தான். இவ்வாறு பேரருள் பெருங்கருணை உடையவன் இப்போது தமக்கு அருளாமையினுல் அருள் எங்குளதோ என்று விநயமாக ஐயா வினவினர். அன்பர்கள் தம் முனைப்பு அற்றுத் தம்மைக் கடையவனேன் என்று கூறிக் கொள்வது மரபு. மணிமொழியாரும் தம்மைக் "கடையவனேனைக் கருணையினுல் கலந்தாண்டு கொண்ட விடையவனே" என்று கூறுதல் காண்க. அவரது திருவாக்கை ஒட்டி நம் ஐயாவும் "கடையவனேன்" என்று கூறிக்கொண்டனர். (36)

**சினத்தாலும் காமத்தி னாலும்என் தன்னைத் திகைப்பிக்கும்**
**மனத்தால் உறும்துயர் போதாமை என்று மதித்துச்சுற்றும்**
**இனத்தாலும் வாழ்க்கை இடும்பை யினாலும்** இளைக்கவைத்தாய்
**அனத்தான் புகழும் பதத்தோய் இதுநின் அருட்கழகே.**

(பொ-ரை.) "அன்னப்பறவையை வாகனமாகக் கொண்ட பிரமதேவன் புகழ்ந்து பேசும் திருவடிகளையுடைய இறைவனே! கோபத்தாலும், காம இச்சையாலும் என்னை திணற வைக்கும் இந்த மனத்தால் நான் அடையும் துன்பம் போதாது என்று உன் திருவுளத்தில் எண்ணி, என்னைச் சுற்றியுள்ள உறவினர்களாலும், உலக வாழ்க்கையில் ஏற்படும் துன்பத்தினாலும் இவ்வாறு சோர்ந்து போகும்படி உலகில் நிலைபெறச் செய்துள்ளாய் போலும்! இப்படிச் செய்வது உன் திருவருளுக்கு அழகாகுமா?" (எ - து.)

(அ - சொ.) அனத்தான் - பிரமன். சினம் - கோபம். இடும்பை - துன்பம்.

(இ - கு.) அன்னத்தான் என்பது அனத்தான் என்றிருப்பது இடைக்குறை பற்றி என்க. பாதத்தோய் என்பது பதத்தோய் என்றாயது குறுக்கல் விகாரம் பற்றியாம்.

(வி - ரை.) மக்களைக் கெடுப்பவை காமம், கோபம், மயக்கம் என்பன. இதனைத் திருவள்ளுவர் "காமம், வெகுளி மயக்கம் இவை மூன்றன், நாமம் கெடக்கெடும் நோய்" என்பர். திருமூலரும், "காமம், வெகுளி, மயக்கம் இவை கடிந்து" என்று கூறியுள்ளனர். இந்தக் கருத்துக்களுக் கேற்பவே நம் வள்ளலார், "சினத்தாலும், காமத்தினாலும் என்னைத் திகைப்பிக்கும் இம் மனத்தால் உறும்துயர்" என்றனர்.

(67)

**புல்அளவாயினும் ஈயார்தம் வாயில் புகுந்துபுகழ்ச்**
**சொல்அள வாநின் றிரப்போர் இரக்கநல் சொன்னங்களைக்**
**கல்அள வாத்தரு கின்றோர்தம் பாலும் கருதிச்சென்றோர்**
**நெல்அள வாயினும் கேளேன்நின் பால்அன்றி நின்மலனே.**

(பொ - ரை.) "மிகத் தூயோனே! புல்லின் அளவேனும் கூடக் கொடுக்காதவர்களின் வீட்டு வாயிலின் நுழைந்து அவர்களைப் புகழ்ந்துபேசிக் கெஞ்சிக் கேட்போர்கள் கெஞ்சிக் கேட்கட்டும். ஆனால், நான்மட்டும் நல்ல பொன்னைச் செங்கல் அளவுக்குக் கொடுக்கக் கூடியவர்களிடமும் சென்று ஒரு நெல் அளவுகூடக் கேட்கமாட்டேன். அப்படிப் பொன் வேண்டும் என்று கேட்பதானாலும் உன்னிடமே கேட்பேன்." (எ - து.)

(அ - சொ.) நின்மலன் - தூயவன் (அழுக்கு இல்லாதவன்). இரப்போர் - கெஞ்சிக் கேட்பவர். சொன்னம் - பொன். பால் - இடம்.

(இ - கு.) வாயில் என்பது இலக்கணப் போலி. இரக்க, வியங்கோள் வினைமுற்று. பால், ஏழன் உருபு.

(வி - ரை.) புல், நெல் அளவின் சிறுமையினைக் குறிக்க வந்துள்ளன. கல், பருமையைக் குறிக்க வந்துளது. இந்தப் பாட்டின் கருத்துடன் முப்பத்திரண்டாவது பாட்டையும் ஒப்பிட்டு நோக்குக. (68)

**பிறைசூழ்ந்த வேணி முடிக்கனி யேஎம் பெருஞ்செல்வமே**
**கறைசூழ்ந்த கண்டத்தெம் கற்பக மேநுதல் கண்கரும்பே**
**மறைசூழ்ந்த மன்றொளிர் மாமணி யேஎன் மனமுழுதும்**
**குறைசூழ்ந்து கொண்டதென் செய்கேன் அகற்றக் குறித்தருளே.**

(பொ - ரை.) "பிறைச்சந்திரனை அணிந்த சடைமுடியுடைய இனிய கனியே! எங்கள் பெருஞ்செல்வமே! விடம்

பொருந்திய கழுத்தையுடைய கற்பக விருட்சமே! நெற்றியில் கண்படைத்த கரும்பே! வேத ஒலி நிறைந்த தில்லைச் சிதம்பரத்தில் விளங்கும் சிறந்த மாணிக்கமே! என் உள்ளம் முழுதும் குறைபாடுகள் நிரம்பி யுள்ளது. இதற்கு நான் என்ன செய்வேன்? அன்புகூர்ந்து என் குறைகளை நீக்க உன் திருவுள்ளத்தில் நாட்டம் கொள்வாயாக" (எ - து.)

(அ - சொ.) வேணி - சடை. கறை - விடம். பிறை - பிறைச் சந்திரன். கண்டம் - கழுத்து. நுதல் - நெற்றி. மறை - வேதம். மன்று - நடன சபை. மா - சிறந்த.

(இ - கு.) வேணிமுடி - இருபெயர்ஒட்டுப் பண்புத் தொகை. மா - உரிச்சொல். (69)

கண்கட்டி ஆடும் பருவத்தி லேமுலை கண்டஒரு
பெண்கட்டி யாள நினைக்கின்ற ஓர்சிறு பிள்ளையைப்போல்
எண்கட்டி யான்உன் அருள்விழைந் தேன்சிவ னேஎன்நெஞ்சம்
புண்கட்டி யாய்அலைக் கின்றது மண்கட்டிப் போல்உதிர்ந்தே.

(பொ - ரை.) "சிவபெருமானே! கண்ணைக் கட்டிக் கொண்டு விளையாடும் சிறு பருவத்தில், முலையுடைய ஒரு பெண்ணைக் கட்டித் தழுவ நினைக்கின்ற ஒரு சிறுவனைப்போல், என் எண்ணத்தில் உன்னைத் தழுவி இன்புற உன் திருவருளை விரும்புகின்றேன். ஆனால், என் மனம் உன் திருவருளைப் பெறாத காரணத்தால் புண்ணாகிய கட்டியைப்போல் துன்பத்தால் அலைகிறது. மேலும் மண்கட்டியைப்போல் உதிர்ந்து வாடிப் போகிறது." (எ - து.)

(அ - சொ.) எண் - எண்ணம். விழைந்தேன் - விரும்பினேன்.

(வி - ரை.) கண்கட்டி ஆடுதல், குருட்டாட்டம் ஆடுதல் "குருடும் குருடும் குருட்டாட்டம் ஆடிக் குருடும் குருடும்

குழி விழுந்த வாறே'' என்று திருமந்திரம் கூறுதல் காண்க. சிறுவன் வயதான பெண்ணை விரும்புதல் அகப் பொருள் இலக்கணத்தில் பெருந்திணை எனப்படும். அதாவது பொருந் தாக் காமம் என்ப. இங்கு நம் ஐயா இந்த உவமை யினைக் கூறியதன் நோக்கம் தாம் இறைவனை அடைதற்குரிய பக்குவம் பெருமையினை அறிவிக்கவே ஆகும். (70)

**மெய்விட்ட வஞ்சக நெஞ்சால் படுந்துயர் வெந்நெருப்பில்**
**நெய்விட்ட வாறிந்த வாழ்க்கையின் வாதனை நேரிட்டதால்**
**பொய்விட்ட நெஞ்சுறும் பொற்பதத் தையஇப் பொய்யனை நீ**
**கைவிட் டிடநினை யேல்அருள் வாய்கரு ணைக்கடலே.**

(பொ - ரை.) " பொய்யை ஒழித்த மெய் அன்பர்களின் உள்ளத்தில் பொருந்திய அழகிய திருவடிகளையுடைய தலைவ! அன்புக் கடலே! உண்மையினைக் கைவிட்ட வஞ்சனை பொருந்திய மனத்தில் படும் துன்பம் கொடிய நெருப்பில் நெய்யை விட்டது போல் இந்த உலக வாழ்க் கையின் வேதனை மிகுதியால் வளர்ந்துளது ஆகவே, இந்தப் பொய்யனாகிய என்னை நீ கைவிடாதே; அருள் செய்க''. (எ - து.)

(அ - சொ.) உறும் - பொருந்தும். விட்டவாறு விட்டது போல. வாதனை - வேதனை. பொன் - அழகிய.

(இ - கு.) பொன் + பதத்து + ஐய. வெம்மை + நெருப்பு. இறைவன் நம்மிடம் பொருந்த வேண்டுமானால், நாம் பொய்மை ஒழித்து மெய்யுடையராய் விளங்க வேண்டும். இந்த உண்மையினைத் திருநாவுக்கரசர்

மெய்ம்மையாம் உழவைச் செய்து விருப்பெனும் வித்தை [வித்திப்
பொய்ம்மையாம் களையை வாங்கிப் பொறைஎனும் நீரைப் [பாய்ச்சி,
தம்மையும் நோக்கிக் கண்டு தகவெனும் வேலி இட்டுச்
செம்மையுள் நிற்பர் ஆகில் சிவகதி விளையும் அன்றே.

என்று அறிவித்துள்ளார். இந்த நோக்கம் கொண்டே தம் வள்ளலார் "பொய்விட்ட நெஞ்சு உறும் பொன் பதத்ததுஐய" என்று பாடி அருளினர். (71)

**அருட்கட லேஅக் கடல்அமு தேஅவ் அமுதத்துற்ற**
**தெருட்சுவை யேஅச் சுவைப்பய னேமறைச் சென்னிநின்ற**
**பொருட்பத மேஅப் பதத்நர சேநின் புகழ்நினையா**
**இருட்குண மாயை மனத்தே னையும்உவந் தேன்றுகொள்ளே**

(பொ - ரை.) "அருளாகிய கடலே! அக்கடலில் எழுந்த அமுதமே! அவ்வமுதத்தில் நிறைந்த தெளிவான சுவையே! அச்சுவையின் பயனாக உள்ளவனே! வேதத்தின் உச்சியில் அமர்ந்து எல்லாப் பொருள்களும் தோன்றி மறை தற்குக் காரணமாக உள்ள திருவடிகளை யுடையவனே! அத் தகைய திருவடிகளைக் கொண்ட நடராசப் பெருமானே! உன் திருப்புகழை நினைக்காத அஞ்ஞான இருட் குணம் பொருந்திய மாயாமலம் குடிகொண்ட மனத்தையுடைய என்னையும் நீ மகிழ்வுடன் ஏற்றருள வேண்டும்." (எ - து.)

(அ - சொ.) தெருள் - தெளிவு. மறைச்சென்னி - வேதத்தின் சிகரமான உபநிடதங்கள், உவந்து - மன மகிழ்ச்சியுடன். ஏன்றுகொள் ஏற்றுக் கொள்வாயாக.

(வி - ரை.) திருப்பாற்கடலில் தோன்றும் அமுதம் இறப்பை ஒழிக்காது. இந்த அமுதத்தை உண்ட தேவர் களும் மறைந்து போயினர். ஆனல், இறைவனாகிய அருட் கடலில் தோன்றும் அமுதம் பிறவிப் பிணியைப் போக்கிப் பேர் இன்பப் பேற்றைத் தரவல்லது. ஆகவேதான் அருட் கடலே அக் கடல் அமுதே என்று திருப்பாற் கடலில் தோன் றிய அமுதத்திற்கும் அருட்கடலில் தோன்றிய அமுதத்திற்

கும். உள்ள வேறுபாட்டை ஈண்டு உய்த்துணர வைத்தனர். நம் ஐயா, சிவானந்த அமுதுண்டவர். இறைவன் அடியில் என்றும் இன்புற்றிருப்பதே ஈண்டு சுவைப்பயன் ஆகும். (72)

**அண்டங்கண் டானும் அளந்தானும் காண்டற் கரியவநின்**
**கண்டங்கண் டார்க்கும் சடைமேல் குறைந்த கலைமதியின்**
**துண்டங்கண் டார்க்கும் பயம்உள தோஎனச் சூழ்ந்தடைந்தேன்**
**தொண்டன்கண் டாள்பல தெண்டன்கண் டாய்நின் துணைஅடிக்கே.**

(பொ - ரை.) "உலகங்களைப் படைக்கும் பிரமனும், அவ்வுலகங்களைத் தன் பாதத்தால் அளந்த திருமாலும் பார்ப்பதற்கரிய பரம்பொருளே! உன் கழுத்தில் விடம் பொருந்தி இருப்பதைப் பார்க்கின்றவர்களுக்கும் உன் சடை மீது ஒளியுடைய பிறைச் சந்திரன் இருப்பதையும் பார்க்கின்ற வர்களுக்கும் இறைவன் காப்பானோ? காக்கமாட்டானோ என்னும் அச்சம் உண்டாகுமோ? ஆகாது. ஆகவேதான் நான் நன்கு ஆய்ந்து உன்னைச் சரண் அடைந்தேன். நான் உன் அடியவன். உன் இரண்டு திருவடிகட்குப் பல வணக் கங்களைச் செய்கின்றேன். எனவே, என்னை ஆட்கொண்டு அருள் செய்வாயாக". (எ - து.)

(அ - சொ.) அண்டம் - உலகம். கண்டான் - படைத்த வனான பிரமன். அளந்தான் - உலகை அளந்த திருமால். கண்டம் - கழுத்து. கலை - ஒளி. மதி - சந்திரன். சூழ்ந்து - நன்கு ஆராய்ந்து. தெண்டன் - வணக்கம். துணை - இரண்டு.

(இ - கு) கண்டு + ஆள். கண்டாய், முன்னிலை அசைச் சொல்.

(வி - ரை.) இறைவன் கழுத்தில் விடம் இருப்பதையும் சடையில் பிறைச் சந்திரன் இருப்பதையும் கண்டவர்களுக்கு

அச்சம் இல்லை என்பதன் கருத்து, தேவர்களின் அச்சத்தைத் தீர்த்தமைக்கு அடையாளமாகக் கழுத்தில் விடம் இருக்கிறது என்பதும், சந்திரன் தன் கலைகளை இழந்து வருந்திய வருத்தத்தைத் தீர்த்து அவனைத் தன் சடையில் சூடி அச்சத்தைத் தீர்த்தான் என்பதும் ஆகும்.

சிவபெருமானே படைத்தல், காத்தல், அழித்தல் ஆகிய முத்தொழில்களைச் செய்பவன். ஆயினும் ஒவ்வொரு தொழிலை இயற்றுதற்கு ஒவ்வொருவரை நியமித்துள்ளான் என்பது அறிஞர் கருத்து. இந்த உண்மைகளை முறையே திருவாசகம்,

படைப்போன் படைக்கும் பழையோன் படைத்தவை
காப்போன் காக்கும் கடவுள் காப்பவை.
கரப்போன் கரப்பவை கருதாக்
கருத்துடைக் கடவுள். என்றும்,

பிரபுலிங்க லீலை,

ஆக்குறும் செயல தொன்றே அயன்தனக் காக்க லோடு
காக்குறும் செயல்இ ரண்டும் கண்ணனுக் காக்கல் காத்தல்
போக்குதல் என்றிம் மூன்றும் புராந்தகற் களித்த வர்க்கு
நீக்கரும் இறைமை நல்கி நிறுவினன் குருகு கேசன்

என்றும் கூறுதல் காண்க. இந்தக் கருத்தில் தான் "அண்டம் கண்டானும்" என்று பிரமனைக் குறிப்பிடப்பட்டான்.

மாவலி சக்ரவர்த்தி எல்லா உலகங்களையும் தன் கீழ்ப் படுத்தி அரசாண்டான். அந்த நிலையை அழிக்கத் திருமால் குட்டை வடிவில் மாவலியிடம் சென்று, தான் தவம்புரியத் தன் அடியால் மூவடி மண் (இடம்) வேண்டும் என்று கேட்டனன். அவன் திருமாலே வாமனனாக (குள்ள வடிவினனாக) வந்துளான் என்பதை உணராமல், அவ்வாறே கொடுத்து விட்டனன். உடனே திருமால் நீண்ட வடிவு

கொண்டு மேல் உலகங்களையும் கீழ் உலகங்களையும் தன் அடியால் அளந்து ஓர் அடிக்கு இடம் இன்மையால் மாவலி யின் தலை மேல் வைத்து அவனைப் பாதளத்தில் இருக்கச் செய்தான். இதுவே அளந்தான் என்னும் சொல்லில் அமைந்த வரலாறு.

ஒரு முறை திருமாலும் பிரமனும் தமக்குள் "நான் பெரியன்; நான் பெரியன்" என்று வாதாடித் தம் வாதத்தைத் தீர்த்துக் கொள்ளச் சிவபெருமானை அடையச் சிவபெருமான் தீப்பிழம்பாய் நின்று "யார் என் முடியையும் அடியையும் கண்டு பிடிக்கின்றீர்களோ, அவர்களே பெரியவர்கள்" என்று அருள் கட்டளை இடப் பிரமன் அன்னவடிவெடுத்து முடியைக் காண விண்ணில் பறந்தும், திருமால் அடியைக் காணப் பன்றி வடிவெடுத்து நிலத்தைத் தோண்டியும் இரு வரும் காண இயலாது திரும்பினர். இந்த வரலாறே "அண்டங் கண்டானும் அளந்தானும் காண்டற் கரியவ" என்னும் வரியில் அமைந்துளது. இதன் விரிவைக் கந்த புராணத்தும், அருணைசல புராணத்தும் காண்க. இந்த வரலாற்று உண்மையைத் திருவாசகம் "பிரமன்மால்காணாப் பெரியோன்" என்று போற்றுகிறது. பரம வைஷ்ணவராகிய பாரதம் பாடிய வில்லிபுத்தூர் ஆழ்வாரும் "ஓர் ஏனம் தனைத் தேட ஒளித்தருளும் இரு பாதத் தொருவன்" என்று திருமால் சிவபெருமான் திருவடிகளைத் தேடியதை எடுத்துக் கூறியுள்ளார். (73)

**தேட்டக்கண் டேர்மொழிப் பாகா உலகில் சிலர்குரங்கை**
**ஆட்டக்கண் டேன்அன்றி அக்குரங் கால்அவர் ஆடச்சற்றும்**
**கேட்டுக்கண் டேன்இலை நான்ஏழை நெஞ்சக் கிழக்குரங்கால்**
**வேட்டுக்கொண் டாடுகின் றேன்இது சான்ற வியப்புடைத்தே.**

(பொ - ரை.) "விருப்பமான கற்கண்டைப் போன்றதும் அழகியதும் ஆன மொழிகளைப் பேசும் பார்வதி தேவியின் கணவனே! உலகத்தில் சிலர் குரங்கைத் தாம் சொல்லுகிற படி ஆடச் செய்வதை நான் பார்த்திருக்கிறேனே அல்லாமல், அக்குரங்கினால் ஆட்டப் படுகிறவர்களும் உண்டு என நான் காதால் கேட்டதும் இல்லை; கண்களால் கண்டதும் இல்லை. நானோ அறிவு குறைந்த ஏழை. ஆனால், நான் மனமாகிய கிழக் குரங்கு தன் விருப்பம் போல ஆட்ட ஆடுகின்றேன். இஃது ஆச்சரியம் நிறைந்த செயலாக அன்றோ இருக்கிறது." (எ - து.)

(அ - சொ.) தேட்டம் - விருப்பம். கண்டு - கற்கண்டு. ஏர் - அழகு. கண்டேர் மொழி - பார்வதி. வேட்டு - விருப்பம். சான்ற - நிறைந்த.

(இ - கு.) கண்டேர் மொழி என்பது கற்கண்டை போலும் இனிய மொழியைப் பேசும் உமா தேவியைக் குறிக்கின்றமையின், இஃது அன்மொழித் தொகை. சான்று, உரிச் சொல்லின் அடியாகப் பிறந்த பெயர் எச்சம். (74)

**போகம்கொண் டார்த்த அருள்ஆர் அமுதப் புணர்முலையைப்**
**பாகம்கொண் டார்த்த பரம்பொரு ளேநின் பதம்நினையா**
**வேகம்கொண் டார்த்த மனத்தால்இவ் ஏழை மெலிந்துமிகச்**
**சோகம்கொண் டார்த்துநிற் கின்றேன் அருளத் தொடங்குகவே.**

(பொ - ரை.) "இன்பத்தைத் தன்னிடத்தே கொண்டு நிறைந்த அருளும், அமுதமும் நிறைந்த முலைகளையுடைய உமாதேவியை, இடப்பாகத்துக் கொண்டு எங்கும் நிறைந்துள்ள மேலான பெரிய பொருளாம் சிவமே! உன் திருவடிகளை நினைக்காமல் உலக இச்சையின் வேகத்தில் கட்டுப்பட்ட உள்ளத்தால் இந்த ஏழையாகிய நான், மிகவும் வாடி

சோர்வு கொண்டு, சோர்வால் கட்டுண்டு நிற்கின்றேன். ஆகவே என்நிலையினை உணர்ந்து எனக்குத் திருவருள் புரியத் தொடங்குவாயாக." (எ - து.)

(அ - சொ.) போகம் - இன்பம். ஆர்த்த - நிறைந்த. கட்டுப்பட்ட. புணர் - இணைந்த. சோகம் - சோர்வு.

(இ - கு.) அருள் அமுதம், உம்மைத் தொகை. அருள் அமுதப் புணர்முலை, அன்மொழித்தொகை, நினையா, ஈறு கெட்ட எதிர்மறைப் பெயர் எச்சம்.

(வி - ரை.) திருநள்ளாற்றின் தேவியின் பெயராகிய போகமார்த்த பூண் முலையாள் என்பதை முதல் அடி குறிப்பிடுகின்றது. இந்த வரியைக் காண்கிறபோது திருஞான சம்பந்தரது பதிகத்தில் காணப்படும் "போகமார்த்த பூண் முலையாள் தன்னொடும் பாகம் ஆர்த்த பைங்கண் வெள் ளேற்றண்ணல்" என்னும் வரிகள் நினைக்கு வருகின்றன. நம் ஐயா சைவ சமய பெரியார்களாகிய அப்பர், சம்பந்தர், சுந்தரர், மாணிக்க வாசகர் ஆகிய நால்வரிடத்தில் பெரிதும் ஈடுபாடுடையவர். இந்த உண்மையினைத் திருவருட்பா முழுவதிலும் நன்கு காணலாம். தனியாகவே இந்நால்வர்களைப் போற்றி வணங்கிய பாடல்களும் உண்டு. நம் ஐயா இந்நால்வர்களின் சொல்லையும் பொருளையும் தொடர்களையும் ஆங்காங்கே அப்படி அப்படியே எடுத்தாண்டுள்ளனர்.

ஒரு புலவன் தன் நூல் சிறப்படைய வேண்டுமானால், தமக்கு முன்னே இருந்த அறிஞர்களின் வாக்குகளையும் கருத்துகளையும் தம் நூலில் எடுத்து ஆண்டு கொள்ள வேண்டுமென்பது இலக்கணத்தில் எடுத்து மொழியப்பட்டுள்ளது.

"முன்னோர் மொழிபொருளே அன்றி அவர்மொழியும்
பொன்னேபோல் போற்றுவம் என்பதற்கும்—முன்னோரின்
வேறுநூல் செய்தும்எனும் மேற்கோளில் என்பதற்கும்
கூறுபழஞ் சூத்திரத்தின் கோள்"

என்பது அந்த விதி. இந்த முறையை உணர்ந்தே நம் ஐயா நால்வரின் பொன் மொழிகளை ஆங்காங்கே தம் நூலில் புகுத்தி யுள்ளனர்.

இறைவியின் இரு கொங்கைகளும் அபர ஞானம் (சாத்திர அறிவு) பரஞானம் (பதி அறிவு) ஆக விளங்குபவை. இதனால்தான் இந்தக் கொங்கையின் அமுதத்தைத் திருஞான சம்பந்தர் உண்ட பிறகு ஞானப் பாடல்களைப் பாட முடிந்தது. இந்த உண்மையினைத் துறைமங்கலம் சிவப்பிரகாச சுவாமிகள்,

சுட்டுதற் கரிய நின்னை மெய்ஞ்ஞான
சொரூபிஎன் றருமறை அனைத்தும்
சொல்லுவ துண்மை என்னநன் குணர்ந்தேன்
சுரந்தநின் திருமுலைச் செழும்பால்
வட்டிலில் கொச்சைப் பிள்ளைமுன் உண்டு
வண்புகழ் ஞானசம் பந்த
வள்ளல்என் றிடப்பேர் பெற்றரன் மொழிபோல்
மையல்தீர் செய்யுள்செய் தமையால்.

என்று பாடிக் காட்டியுள்ளனர். (75)

**இன்றல வேநெடு நாளாக ஏழைக் கெதிர்த்ததுன்பம்**
**ஒன்றல வேபல எண்ணில வேஉற் றுரைத்தநயன்**
**மன்றல வேபிறர் நன்றல வேஎன வந்தகயக்**
**கன்றல வேபசுங் கன்றடி யேன்தனைக் காத்தருளே.**

(பொ - ரை.) "ஏழையாகிய என்னை அடுத்துள்ள துன்பம் ஒன்று அன்று; பல. ஏன்? கணக்கில் கூட அடங்

காது. இதைப்பற்றி உன்னை அடைந்து முறையிட்டு வருவது, இன்று மட்டும் அன்று. பல நாட்களாக அன்றோ உன்னிடம் முறையிட்டு வருகின்றேன். நான் முறையிடுவது என்னை இந்தத் துயரத்தில் ஆழப்படைத்த பிரமன் இருப்பிடமாகிய சத்திய லோகத்தில் சென்று அன்றே. உன்னிடம் தானே வந்து முறையிடுகின்றேன். பிறர் 'இது நல்ல கன்று அன்று. கீழ்த்தரக்கன்று' என்று கூறக்கூடிய கன்று அன்றே நான். எவரும் நன்று என்று வரவேற்கத்தக்க பசுங்கன்று அன்றோ நான். ஆகவே, என்னைக் காத்தருள்க.'' (எ - து.)

(அ - சொ.) எதிர்த்த - அடுத்துள்ள. உற்று - நெருங்கி. அயன்மன்று - பிரமன் வீற்றிருக்கும் சபை. (சத்திய லோகம்) கயக்கன்று - கீழ்க்குலக் கன்று.

(இ - கு.) ஏகாரங்கள் அசை.

(வி - ரை.) பிரமன் உயிர்களை அவ்வவ்வுயிர்களின் பாவ புண்ணியங்களுக்கு ஏற்பப் படைக்கின்றான். அப்படிப் படைக்கப்பட்ட உயிர்கள், துன்பம் பொறுக்காமல் ஒருவேளை பிரமனை அணுகிக் கேட்டாலும், அவன் உன் வினைப்பகுதி என்று கூசாமல் கூறிவிடுவான். ஆகவே நான் அவனிடம் சென்று முறையிடமாட்டேன் என்னும் குறிப்பில்தான் ஈண்டு "அயன் மன்றலவே" என்று அறிவிக்கப்பட்டது. பசும் கன்றைப் போற்றுவதுபோல ஏனையவற்றின் கன்றைப் பிறர் போற்றார் ஆதலின் "கயக்கன்றலவே பசுங்கன்று அடியேன்" என்று வள்ளலார் கூறிக் கொள்கின்றனர். (76)

படிபட்ட மாயையின் பால்பட்ட சாலப் பரப்பில்பட்டே
மிடிபட்ட வாழ்க்கையில் மேல்பட்ட துன்ப விசாரத்திஞல்
அடிபட்ட நான்உனக் காட்பட்டும் இன்னும் அலைதல்நன்றோ
விடிபட்ட நேர்இடைப் பெண்பட்ட பாகப் பெருந்தகையே.

(பொ - ரை.) "பெண் யானையைப் போன்ற நடையும், நுணுகிய இடையும் கொண்ட உமாதேவியைப் பக்கத்தே கொண்ட பெருந்தகையே! உலகில் நிறைந்த மாயையின் வலையில் மிகுதியும் சிக்கி, வறுமையுற்ற வாழ்க்கையின் துன்பத்தால் அடிபட்ட நான் உனக்கு அடிமைப்பட்டும் இன்னமும் அலைதல் நன்றோ?" (எ - து.)

(அ - சொ.) பிடி - பெண் யானை. பெண் - உமாதேவி. பெருந்தகை - பண்பாடு நிறைந்த இறைவன். படி - உலகு. சால - மிகுதியும். மிடி - வறுமை.

(இ - கு.) பெருந்தகை, அன்மொழித் தொகை. சால, உரிச்சொல். துன்பம் எனினும் விசாரம் எனினும் ஒன்றே. ஒரே பொருளைக் குறிக்க இருசொற்கள் வருமாயின் அதனை ஒரு பொருள் பன் மொழி என்பர். (77)

உடையாய்என் விண்ணப்பம் ஒன்றுண்டு கேட்டருள் உன்அடிச்சீர்
தடையாதும் இன்றிப் புகல்வதல் லால்இச் சகத்திடைநான்
நடையால் சிறுமைகொண் டந்தோ பிறரை நவின்றவர்பால்
அடையா மையும்நெஞ் சுடையாமை யுந்தந் தருளுகவே.

(பொ - ரை.) 'உலகில் உள்ள எல்லாப் பொருள்களையும் உடைமையாகக் கொண்ட இறைவனே! உன்னிடம் அறிவித்துக் கொள்ளும் வேண்டுகோள் ஒன்று உண்டு. அதனைக் கேட்டருள்க. அதாவது நான் திருவடியின் சிறப்பைத் தடை சிறிதும் இல்லாமல் புகலுதல் வேண்டும். இந்த உலகில் நான் செல்வக் குறைவு காரணமாக ஐயோ பிறரை நாடி அவர்களிடம் இல்லாத குணங்களை எடுத்துச் சொல்லி அவர்களை அடையாதிருத்தலும், என்மனம் துயரால் உடையாமல் இருத்தலும் ஆகிய இவ்விருவரங்களைத் தந்தருள். இவையே என் விண்ணப்பம்." (எ - து.)

(அ - சொ.) புகல்வது - கூறுவது. சகம் - உலகம். நடை - செல்வம். சிறுமை - குறைவு. நவின்று - சொல்லி.

தஞ்சமென் றேநின்ற நாயேன் குறையைத் தவிர்உனக்கோர்
பஞ்சமின் றேஉல கெல்லாம்நின் சீர்அருள் பாங்குகண்டாய்
எஞ்சநின் றேற்குனை அல்லால் துணைபிறி தில்லைஇது
வஞ்சமன் றேநின் பதம்காண்க முக்கண் மணிச்சுடரே.

(பொ - ரை.) "மூன்று கண்களையுடைய நவமணிகளைப் போல ஒளிவிடுகின்ற பேரொளிப் பிழம்பே! உனது பாதங்களே அடைக்கலம் என்று உன் திருமுன் நிற்கின்ற நாயின் கடைப்பட்ட என் குறைகளைப் போக்குக. என் குறைகளைப் போக்குவதில் உனக்குப் பஞ்சமா? இல்லையே. உலகம் முழுவதும் உன் சீரும் அருளும்தாமே இடம் கொண்டுள்ளன. குறையுடன் வாழும் எனக்கு உன்னைத் தவிர்த்து வேறு துணை யாரும் இல்லையே. இப்படி நான் சொல்வது கபடம் அன்றே; ஆகவே என் நிலைமையினைக் கண்டு திருவருள் புரிக." (எ - து.)

(அ - சொ.) தஞ்சம் - அடைக்கலம். குறை - குறைகள். பாங்கு - இடம். எஞ்ச - குறையுடன். (79)

பொறுத்தாலும் நான்செயும் குற்றங்கள் யாவும் பொறுத்தெனைநீ
ஒறுத்தாலும் நன்றினிக் கைவிட்டி டேல்என் உடையவன்நீ
வெறுத்தாலும் வேறிலை வேற்றோர் இடத்தை விரும்பிஎன்னை
அறுத்தாலும் சென்றிட மாட்டேன் எனக்குன் அருள்இடமே.

(பொ - ரை.) "நான் செய்கின்ற குற்றங்கள் எல்லாவற்றையும் பொறுத்தாலும் பொறுக்கலாம். என்னைத் தண்டித்தாலும் நல்லதே. இனி என்னைக் கைவிடேல். நீ என்னை அடிமையாக உடையவன். என்னை வெறுத்தாலும் நான் சென்று அடையத்தக்க இடம் வேறு எனக்கு இல்லை. என்னை அறுத்துப் போட்டாலும் வேறோர் இடைத்தை விரும்பிச் செல்ல மாட்டேன். எனக்கு உன் அருள்தான் இடம் வேறு அன்று." (எ - து.)

(அ - சொ.) பொருது - பொறுக்காமல்; ஒறுத்தாலும், தண்டித்தாலும்.

(வி - ரை.) இந்தப் பாடல் கருத்தை ஊன்றிப் பார்க்கையில் திருவாசகத்தில் வரும் "இருந்தென்னை ஆண்டுகொள்; விற்றுக்கொள்; ஒற்றிவை என்னும் வரியும்,

அன்றே என்தன் ஆவியும் உடலும் உடைமை எல்லாமும்
குன்றே அனையாய் என்னைஆட் கொண்ட போதே [கொண்டிலையோ
இன்றோர் இடையூறு எனக்குண்டோ எண்தோள் முக்கண் [எம்மானே
நன்றே செய்வாய் பிழை செய்வாய் நானோ இதற்கு நாயகமே

என்னும் பாடலும் நம் நினைவில் வருகின்றன. (80)

சேல்வரும் ஏர்விழி மங்கைபங் காஎன் சிறுமைகண்டான்
மேல்வரும் நீவரத் தாழ்த்தாலும் உன்தன் வியன்அருள்பொன்
கால்வரு மேஇளங் கன்றழுத் தாய்ப்பசுக் காணில்மடிப்
பால்வரு மேமுலைப் பால்வரு மேபெற்ற பாவைக்குமே.

(பொ - ரை.) "சேல் மீனைப் போன்ற அழகிய கண்ணையுடைய உமாதேவியை இடப்பக்கத்தே கொண்ட மீனாட்சி சுந்தரேசனே! என் துன்பத்தைக் கண்டு நீ வரத்தாழ்த்தால் உனக்கு முன்னே உன் தரும விடை வருமே. அல்லது உனது பரந்த அருள் வடிவான அழகிய திருவடிகள் வருமே. இளங்கன்று அழுவதைத் தாய்ப் பசு கண்டால் அப்பசுவின் மடியில் பால் சுரக்குமே. குழந்தை அழக் கண்டால் பெற்ற தாய்க்கு முலையில் பால் தானே வருமே." (எ - து.)

(அ - சொ.) சேல் - சேல்மீன். ஏர் - அழகு. சிறுமை - துன்பம் ஆன் - இடபம். வியன் - பரந்த. பொன் - அழகிய. பாவை - பதுமை போலும் அழகுடைய தாய்.

(இ - கு.) வியன் - உரிச்சொல். பாவை, உவமை ஆகுபெயர். கண்டு + ஆன் + மேல் + வரும் எனப்பிரிக்க.

(வி - ரை.) இறைவி மீனாட்சி என்னும் பேருடையவள். அந்தக் குறிப்பே ஈண்டுச்சேல் வரும் ஏர் விழிமங்கை எனப் பட்டது. அடியவர்கட்கு அருள் செய்ய இறைவன் தரும தேவதையாம் எருது மீது வருவன் ஆதலின் "ஆன் மேல் வரும்" எனப்பட்டது. தாய்க்கும் சேய்க்கும், கன்றுக்கும் ஆனுக்கும் உள்ள அன்புத் தொடர்பை கீழ்வரும் வரிகளில் நன்கு உணரலாம்.

"இல்லா முலைப்பாலும் கண்ணீரும் ஏந்திழைபால்
நல்லாய் உளவாமால்" என்பது சிவஞான போத வெண்பா.

"இலைபடர்ந்த பொய்கை இடத்தழுதல் கண்டு
முலைசுரந்த அன்னையோ முன்னின்—நிலைவிளம்பக்
கொங்கை சுரந்தஅருள் கோமகளோ"
என்பது நால்வர் நான்மணி மாலை.

"காதுண்ட சேற்று மேதி கன்றுள்ளிக் கனைப்பச் சோர்ந்த பால்" என்பது கம்ப ராமாயணம்.

"மோட்டெருமை வாவிபுக முட்டுவரால் கன்றென்று
வீட்டளவும் பால்சொரியும்" என்பது தனிப் பாடல் திரட்டு. இந்தக் கருத்துகளைக் கொண்டே நம் ஐயா "இளங் கன்றழத் தாய்ப்பசுக் காணின் மடிப்பால் வருமே முலைப்பால் வருமே பெற்ற பாவைக்குமே" என்றனர். (81)

**வன்பட்ட கூடலில் வான்பட்ட வையை வரம்பிட்டநின்**
**பொன்பட்ட மேனியில் புண்பட்ட போதில் புவிநடையாம்**
**துன்பட்ட வீரர்அந் தோவாத ஊரர்தம் தூயநெஞ்சம்**
**என்பட்ட தோஇன்று கேட்டஎன் நெஞ்சம் இடிபட்டதே.**

(பொ - ரை.) "வன்மை மிக்க மதுரையில் பெருமை வாய்ந்த வையை ஆற்றில் வெள்ளம் திரண்டபோது கரைகள் உடைப் பெடுத்ததனுல், கரையினைக் கட்ட நீ ஈடுபட்ட போது, உன் பொன்னிறமான திருமேனியில் பாண்டியன் அடித்ததனுல் புண்பட்ட போதில் ஐயோ ! உலகத் தொடர்பாம் துன்பங்களை ஒழித்த வீரராம் மாணிக்க வாசகருடைய தூய உள்ளம் அப்போது என்னபாடு பட்டதோ? இப் பொழுது நான் கேட்கும் போதே என் மனம் துன்புறுகிறதே." (எ - து.)

(அ - சொ.) கூடல் - மதுரை. வான் - பெருமை. வரம்பு - கரை. புவி நடை - உலகத் தொடர்பு. அட்ட - ஒழித்த. வாதவூரர் - திருவாதவூரில் பிறந்த மாணிக்க வாசகர். தூய - பரிசுத்தமான. இடிபட்டது - துன்புற்றது.

(இ - கு.) வன்மை + பட்ட, துன்பு + அட்ட.

(வி - ரை.) இந்திரன் வருணனிடம் கடலைப் பொங்கச் செய்து மதுரையை அழிக்கக் கூறினன். ஆனல் உக்கிர பாண் டியன் வேலைச் செலுத்தி மதுரையைக் காத்தனன். இப்படிப் பல நிகழ்ச்சிகள் நடந்த போதெல்லாம் மதுரை அழியாமல் இருந்தமையின் அது வன்பட்ட கூடல் எனப்பட்டது. வையைக்குப் பெருமையாவது, அது புலவர் பெருமக்களால் சிறப்பித்துப் பாடப்பட்டமை ஆகும். சங்க நூலாகிய பரி பாடல் என்னும் நூலில் வையையைப்பற்றி இருபத்தாறு பாடல்கள் இருந்தன. ஆனல் இப்போது எட்டுப் பாடல்கள் உள்ளன. இந்தப் பெருமை மட்டும் அன்று. திருஞான சம்பந்தர் சமணரோடு புனல் வாதம் செய்த போது அவர் எழுதியிட்ட "வாழ்க அந்தணர்" எனும் பாடல் இவ்வாற்றில் எதிர்ந்து சென்றது. இந்தப் பெருமையைப் பரம வைணவ ராகிய பாரதம் பாடிய வில்லிபுத்தூராரும், " கூறிய செஞ்

சொல் ஏடு குறித்தெதிர் கொண்ட வைகை" என்று போற்றிப் பாடியுள்ளனர். எனவேதான் "வான்பட்டக் வைகை" எனப்பட்டது.

திருவாதவூரர் அரிமர்த்தன பாண்டியன் பொருட்டுக் குதிரை வாங்கப் பாண்டியன் பொருளைக் கொண்டு புறப் பட்டுச் சென்று குதிரை வாங்காமல் திருப்பெருந்துறையில் கோவில் கட்டினர். இதனை அறிந்த பாண்டியன் அவரை நல்ல வெயிலில் வையை ஆற்று மணலில் நிறுத்தி அடிக்க ஏற்பாடு செய்தான். அந்த வேளையில் மதுரைச் சொக்கேசர் வையையில் வெள்ளம் புரளச் செய்தார். அதனால் கரைகள் உடைந்தன. அக்கரைகளைக் கட்ட ஊரார் ஈடுபட்டபோது, அவ்வூரில் இருந்த வந்திக் கிழவியின் பொருட்டுக் கூலி யாளாக வந்த சிவபெருமான், கரை அடைக்கும் பணியில் ஈடுபடாமல் தூங்கிக்கொண்டும், ஆடிப்பாடிக் கொண்டும் இருந்த காரணத்தால் பாண்டியன் சிவபெருமானைச் பிரம்பால் அடித்தான். இந்த நிகழ்ச்சியின்போது இறைவர் திருமேனி புண்பட்டது. இதை எண்ணியே ஈண்டு "வையை வரம் பிட்டநின் பொன்பட்ட மேனியில் புண்பட்டபோது" என்று கூறப்பட்டுள்ளது. இந்த வரலாற்று விரிவைத் திருவாதவூரர் புராணத்தில் காண்க.

திருவாதவூரர் உலக நடையாம் துன்பத்தை ஒழித்தவர் என்பதற்கு அவரது திருவாசகப் பாடல்களைக் கொண்டு தெளியலாம். அடியார்கள் வீரர் என்பதைச் சேக்கிழார்

"பூதம் ஐந்தும் நிலையில் கலங்கினும்
மாதோர் பாகர் மலர்த்தாள் மறப்பிலார்" என்றும்,
"ஈர அன்பினர் யாதும் குறைவிலார்
வீரம் என்னால் விளம்பும் தகையதோ" என்றும்

அறிவித்திருப்பதனால் தெளிக.

இறைவர் புண்பட்டதைக் கேட்டபோதே என் உள்ளம் துன்புறுகிறதே! நேரே தம் கண்ணால் கண்ட திருவாதவூரர் உள்ளம் எப்படி வருந்தியதோ என்று எண்ணி நம் ஐயா இங்கு வருந்துகின்றார். (82)

**நீர்சிந்தும் கண்ணும் நிலைசிந்தும் நெஞ்சமும் நீள்நடையில்**
**சீர்சிந்து வாழ்க்கையும் தேன்சிந்தி வாடிய செம்மலர்போல்**
**கூர்சிந்து புந்தியும் கொண்டுநின் றேன்உள் குறைசிந்தும்வா**
**றோர்சிந்து போல்அருள் நேர்சிந்தன் ஏத்தும் உடையவனே.**

(பொ - ரை.) ''கடலில் உறங்குபவனாகிய திருமால் நேர் நின்று போற்றும் உடைமைப் பொருளாகி உள்ள இறையவனே! ஒழுகும் கண்களும், நிலை கெட்டு வாடிய மனமும், நீண்ட உலக நடையில் சிறப்பு ஒன்றும் இன்றி வாடும் வாழ்க்கையும் கொண்டு, தேன் அற்று வாடிக் கீழே விழுந்த நல்ல மலர் போல அறிவு கூர்மை அற்ற புத்தியும் கொண்டு நின்றேன். ஆகவே, என் உள்ளத்தில் பொருந்திய குறைகள் சிந்தும் விதத்தை உன் உள்ளத்தில் ஆராய்வாயாக. கடல் போலத் திருவருள் புரிவாயாக.'' (எ - து)

(அ - சொ.) சிந்தன் - கடலில் உறங்கும் திருமால். ஏத்தும் - போற்றும். உடையவன் - உயிர்களைத் தன் உடைமையாகக் கொண்ட இறைவன். கூர் - அறிவின் கூர்மை. புந்தி - புத்தி. சிந்தும்வாறு - சிந்தும்படி. ஓர் - ஆய்ந்து உணர். சிந்து - கடல்.

(இ - கு.) புத்தி என்பது புந்தி என நின்றது மெலித்தல் விகாரம் பற்றி என்க.

(வி - ரை.) திருமால் இறைவனைப் புகழ்ந்து போற்றிய உண்மையினைத் திருமால்பூர் (இதுவே திருமால் பேறு) தலத்தின் வரலாற்றால் உணரலாம். 'மாலினார் வழிபாடு செய் மால்பேறு' என்று சம்பந்தரும், 'பூம்புனல் வரு ஆற்றின்

மலர் கொண்டு வழிபடும் கருமால்' என அப்பரும், திருமால் பூரில் திருமால் வழிபட்டதைக் கூறியுள்ளனர். (83)

**கொடிகொண்ட ஏற்றின் நடையும் சடையும் குளிர்முகமும்**
**துடிகொண்ட கையும் பொடிகொண்ட மேனியும் தோல்உடையும்**
**பிடிகொண்ட பாகமும் பேர்அருள் நோக்கமும் பெய்கழலும்**
**குடிகொண்ட நல்மனம் என்மனம் போல்குறை கொள்வதின்றே.**

(பொ - ரை.) "கொடியில் அமைத்துக்கொண்ட இரடபத்தின் நடையும், சடையும், குளிர்ந்த கருணை நிறைந்த முகமும், உடுக்கையினை ஏந்திய கையும், திருநீறு பூசப்பெற்ற உடலும், புலித்தோல் உடையும், பெண் யானை போலும் நடையுடைய பார்வதியின் இடப்பாகமும், பெரிய திருவருள் பார்வையும், வீரத் தண்டை அணிந்த திருவடிகளும் என் நல்ல உள்ளத்தில் குடியாக அமைந்துள்ளன. ஆகவே என் மனம் இனி குறைபடுவதற்கு ஒன்றும் இல்லை.'' (எ - து.)

(அ - சொ.) ஏறு - இரடபம். துடி - உடுக்கை. பொடி - திருநீறு. பிடி - பெண்யானையைப் போன்ற நடையுடைய பார்வதி. பெய் – அணிந்த. கழல் - வீரத்தண்டை அணிந்த பாதம்.

(இ - கு.) பிடி, உவமை ஆகுபெயர். பெய்கழல்; வினைத் தொகை. கழல், தானி ஆகுபெயர்.

(வி - ரை.) இறைவனுக்கு வாகனம் இரடபம். அவ்விரடபமே இறைவன் கொடியிலும் திகழ்வது. இதனை புறநானூறு,

"ஊர்தி வால்வெள் ளேறே; சிறந்த
சீர்கெழு கொடியும் அவ்வே றென்ப' என்று கூறுகிறது.

தாருகவனத்து இருடிகள் ஏவிய யானையைக் கொன்று அதன் தோலை இறைவன் ஆடையாக உடுத்தி யுள்ளான் ஆதலின், தோல் உடையும் எனப்பட்டது. பெண்களின் நடையைப்

பெண் யானையின் நடைக்கு உவமை கூறுவர். இந்தக் கருத்தில்தான் ஈண்டுப் பார்வதி பிடி என்றே கூறப்பட்டாள். கழல் என்பதன் பொருள் வீரத்தண்டை. ஆனால் அஃது இங்கு அவ் வீரத்தண்டையை அணிந்த பாதத்தை உணர்த்தி நிற்கிறது.

இங்கு நம் ஐயா பாடிய பாட்டு, அப்பர் பெருமான் பாடியுள்ள,

"முடிகொண்ட மத்தமும் முக்கண்ணின்
நோக்கும் முறுவலிப்பும்
துடிகொண்ட கையும் துதைந்தவெண்
ணீறும் சுரிகுழலாள்
படிகொண்ட பாகமும் பாய்புலித்
தோலும்என் பாவிநெஞ்சில்
குடிகொண்ட வாதில்லை அம்பலக்
கூத்தன் குரைகழலே"

என்னும் பாட்டை அப்படியே அடி ஒட்டியதாகும். (84)

**விதிக்கும் பதிக்கும் பதிநதி ஆர்மதி வேணிப்பதி**
**திதிக்கும் பதிக்கும் பதிமேல் கதிக்கும் திகழ்பதிவான்**
**துதிக்கும் பதிக்கும் பதிஓங்கு மாபதி சொல்கடந்த**
**பதிக்கும் பதிசித் பதிஎம் பதிநம் பசுபதியே.**

(பொ - ரை.) "நம் உயிர்க்கு நாயகனாகிய இறைவன், அவ்வுயிர்கள் இவ்விவ்வாறு வாழவேண்டும் என்று விதிக்கின்ற தலைவனாகிய பிரமனுக்கும் தலைவன். கங்கை ஆறு பொருந்திய சந்திரன் அமைந்த சடையுடைய தலைவன், பிரமன் படைத்த உலகினைக் காக்கின்ற திருமாலுக்கும் தலைவன். மேல் நிலையாகிய மோட்ச உலகிலும் விளங்குகின்ற தலைவன். தேவலோகத்தில் உள்ள தேவர்கள் வணங்கும் இந்திரனுக்கும் தலைவன். எல்லாப் படியாலும் உயர்ந்து

உமாதேவிக்கும் தலைவன். சொல்லுக்கும் அப்பாற்பட்ட உருத்திரமூர்த்திக்கும் தலைவன். உண்மை ஞானத்திற்கும் தலைவன். அடியவர்களாகிய எங்களுக்கும் தலைவன்." (எ - து)

(அ - சொ.) விதிக்கும்பதி - பிரமன். ஆர் - பொருந்திய. மதி - சந்திரன். வேணி - சடை. திதிக்கும் - காக்கும். திதிக்கும்பதி - விஷ்ணு. கதி - மோட்சம். திகழ்-விளங்கும். வான் - தேவலோகத் தேவர்கள். வான் துதிக்கும் பதி - இந்திரன். சொற்கடந்தபதி - உருத்திரமூர்த்தி, சித்பதி - ஞானத் தலைவன். பசுபதி - ஆன்ம நாயகன்.

(இ - ரு.) ஓங்கு + உமா + பதி எனப்பிரிக்க. வான், இட ஆகுபெயர். பதி என்னும் ஒரே சொல் பலமுறை ஈண்டு ஆளப்பட்டமையின், இது சொல் பின் வரு நிலை அணி.

(வி - ரை.) மும்மூர்த்திகளுக்கும் இந்திராதி தேவர்களுக்கும் சகல சீவான்மாக்களுக்கும் தலைவன் என்பதை இப்பாடலால் நம் ஐயா நன்கு விளக்கியுள்ளனர். ஈண்டுச் சொற்கடந்த பதி என்பவன் உருத்திரன் என்க. இதனால் சிவபெருமானும் உருத்திரர்களும் வேறுவார் என்று உணர்க. (85)

என்னை அடைந் தாழ்த்திய துன்பச் சுமையை இறக்கெனவே
நின்னை அடைந் தேன்அடி நாயேற் கருள நினைத்திகண்டாய்
வினை அடைந் தேமன வீறுடைந் தேநின்று வேற்றவர்தம்
மனை அடைந் தேமனம் வாடல்உன் தொண்டர் மரபல்லவே.

(பொ - ரை.) "இறைவனே! என்னை நெருங்கி அழுத்திய துன்பச் சுமையை இறக்குக, என்று உன்னை அடைந்தேன். உன் திருவடியில் சரண்புகுந்த நாயிற் கடைப்பட்ட நாயேனுக்குத் திருவருள் செய்ய உன் உள்ளத்தில் நினைப்பாயாக. தீவினை யற்று மனத்தின் மேம்பாடு கெட்டு நின்று அயலார்

வீட்டிற்குச் சென்று மனம் வாடுதல் உன் தொண்டர்கட்கு முறை அன்றே. ஆகவே நீதான் என்னைக் காத்தருள வேண்டும்." (எ - து.)

(அ - சொ.) வீறு - மேம்பாடு. வேற்றவர் - அயலார். மனை - வீடு. மரபு - முறை.

(இ - கு.) கண்டாய், முன்னிலை அசைச்சொல். (86)

**வனம்போய் வருவது போலேவன் செல்வர் மனைஇடத்தே**
**தினம்போய் வரும்இச் சிறியேன் சிறுமைச் செயலதுபோய்ச்**
**சினம்போய்க் கொடும்பகைக் காமமும் போய்நின் திறம்இகழ்ந்தார்**
**இனம்போய்க் கொடிய மனம்போய் இருப்பதென் றேன்அரசே.**

(பொ - ரை.) "அரசே! காட்டுக்குப் போய் வருவது போலக் கொடுமை மிக்க செல்வர் வீட்டுக்கு நாள்தோறும் போய், இந்தச் சிறியவனது சிறுமைச் செயல் போய், கோபம், கொடிய பகையாகிய பற்றுள்ளமும் போய், உன் வன்மைகளைக் கூறாத தீயவர்களின் கூட்டத்திற்குப் போய், கொடுமையான மனம் போய் வாட்ட முறுமல் நான் இருப்பது எந்த நாளோ?" (எ - து.)

(அ - சொ.) வனம் - காடு. மனை - வீடு, சினம் - கோபம். காமம் - பற்று. திறம் - வன்மை. இனம் - தீயவர் கூட்டம். என்று - எப்பொழுது.

(இ - கு.) போலே என்பதன் ஏகாரம் அசை. செயல்+அது, அது பகுதிப் பொருள் விகுதி.

(வி - ரை.) சினம் என்னும் சேர்ந்தாரைக் கொல்லி இனம் என்னும் ஏமாப் புணையைச் சுடும். ஆதலின், அச் சினம் நீங்கவேண்டும். எனவேதான் சினம் போய் என்றனர். காமம் பொதுவாகப் பெண் போகத்தையும் சிறப்பாக உலகப் பொருள்களின் மீது வைக்கும் பற்றையும் உணர்த்தும்,

இரண்டும் மக்களை அழிக்கும் ஆதலின் அதனை 'கொடும் பகைக் காமமும் போய்' என்றனர். இறைவன் திறம் ஆவன முப்புரங்களை எரித்தது, யமனை உதைத்தது முதலியன. (87)

பெற்றாள் அனையநின் குற்றேவல் செய்து பிழைக்கறியாச்
சிற்றாள் பலரினும் சிற்றாள் எனும்என் சிறுமைதவிர்த்
துற்றாள் இலைஎனில் மற்றார் துணைஎனக் குன்கமலப்
பொற்றாள் அருள்புகழ்க் கற்றாய்ந்து பாடப் புரிந்தருளே.

(பொ - ரை.) "தாய் போன்று காத்து வரும் உனக்குத் தொண்டு செய்து ஈடேற வழியறியாச் சிறு தொழிலாளர்கள் பலரினும் மிகச் சிறிய ஆளாகிய எனது துன்பத்தை நீக்கி என்னை அணுகி ஆட்கொள்ளவில்லை என்றால், எனக்கு வேறு யார் துணை? உன்னுடைய தாமரை மலர் போன்ற அழகிய திருவடிப்புகழையே கற்று ஆய்ந்து, அவற்றையே பாடச் செய்யும் அருளை எனக்குச் செய்வாயாக." (எ - து.)

(அ - சொ.) அனைய - போன்ற. குற்றேவல் - சிறுபணி. சிறுமை - வருத்தம். கமலம் - தாமரை. பொன் - அழகு.

(இ - ந.) குறு + ஏவல். சிறு + ஆள். உற்று + ஆள். பொன் + தாள். (88)

அந்நாளை யாதுநஞ் சேற்றயன் மால்மனை ஆதியர்தம்
பொன்நாளைக் காத்த அருள்கட லேபிறர் புன்மனைபோய்
இந்நாளை யாவகை என்நாளைக் காத்தருள் ஏழைக்குநின்
தன்ஆனை ஐயநின் தாள்ஆணை வேறு சரண்இல்லையே.

(பொ - ரை.) "தேவர்களும் அசுரர்களும் அந்த நாளில் திருப்பாற் கடலைக் கடைந்தபோது உண்டான விடத்தைக் கண்டு தேவர்கள் வருந்தாதிருக்க, அந்த விடத்தை ஏற்றுப்

பிரமன், திருமால் முதலான மனைவிமார்களின் பொன் தாலிக் கயிற்றைக் காத்து இரட்சித்த அருள் கடலே! தலைவனே! பிறருடைய அற்பமான வீடுகளை அடைந்து இந்தநாளில் வருந்தாதபடி என் நாணத்தைக் காத்தருள்வாயாக. உன் மேல் ஆணையிட்டுக் கூறுகின்றேன். உன் திருவடிகளின் மீது ஆணையிட்டுக் கூறுகின்றேன். இந்த ஏழைக்கு உன் திருவடிகளைத் தவிர வேறு அடைக்கலம் என்ன இருக்கிறது? ஒன்றும் இல்லையே!" (எ - து.)

(அ - சொ.) நையாது - வருந்தாது. நஞ்சு - விடம். அயன் - பிரமன். மால் - விஷ்ணு. மனை - மனைவிமார். ஆதியர் - முதலியோர். பொன் நாண் - பொன் தாலி. புன் - அற்பமான. மனை - வீடு. என்நாணை - என்நாணத்தை. ஆணை - சத்தியம். சரண் - அடைக்கலம்.

(இ - கு.) நாள் + நையாது. நஞ்சு + ஏற்று. மனை, இட ஆகுபெயர். பொன் + நாணை. தன் + ஆணை.

(வி - ரை.) மனை ஆதியர் ஆவார் பிரமன், திருமால் ஆகிய இவர்களின் மனைவிமார்களே அல்லாமல் தேவலோக மாதர்கள் அனைவரும் ஆவர். இறைவன் தேவமாதர்களின் பொன் நாணைக் காத்த வரலாற்றைப் பன்னிரண்டாம் பாட்டின் விசேட உரையில் காண்க. (89)

பவசா தனம்பெறும் பாதகர் மேவும்இப் பாரிடைநல்
சிவசா தனத்தரை ஏன்படைத் தாய்அத் திருஇலிகள்
அவசா தனங்களைக் கண்டிவர் உள்ளம் அழுங்கஎன்றோ
கவசா தனம்எனக் கைம்மான் உரியைக் களித்தவனே.

(பொ - ரை.) "உடம்புக்குச் சட்டையாகவும், அமர்தற்கு ஆசனமாகவும் இருக்க யானையின் தோலை மகிழ்வுடன்

கொண்டிருப்பவனே! அழிவுக்கே பயற்சி செய்துவரும் கொடியவர்கள் வாழும் இந்த உலகில், சிவபெருமானை அடைதற்கு நல்முறையில் பயிற்சி செய்து வரும் சாதுக்களை ஏன் படைத்தாய்! பாவத்தையே சாதகமாகக் கொண்டு வாழும் நல்வினை இல்லாத தீயவர்கள் அறிவுக்குகந்த சிவசாதனையைச் செய்பவர்களைக் கண்டு பொறுமையால் மனம் புழுங்க என்று எண்ணியோ படைத்தாய்?" (எ - து.)

(அ - சொ.) கவசம் - சட்டை. ஆதனம் - பீடம், ஆசனம். கைம்மான் - யானை. உரி - தோல். பாதகர் - கொடியவர்கள். பவம் - அழிவு. சாதனம் - பயிற்சி. சிவ சாதனம் - சிவபெருமானை அடையப் புரியும் சரியை, கிரியை, யோகம், ஞானமாகிய பயிற்சிகள். அழுங்க - பொறுமை கொண்டு துன்பப்பட. திருவிலிகள் - நல்வினை இல்லாதவர். அவ - அறிவு,

(இ - கு.) கவசம் + ஆதனம். பார்இடை என்பதன் இடை, ஏழன் உருபு.

(வி - ரை.) அவம், வேறு, அவவேறு. அவம் என்னும் சொல்லுக்கு வீண் என்பது பொருள். அவ என்பதற்கு அறிவு என்பது பொருள். ஈண்டு நம் ஐயா அறிவு என்னும் பொருள்தரும் அவ என்னும் சொல்லையே பயன்படுத்தியுள்ளனர். அவசாதனம் ஆவன அறிவுக்கு உகந்த செயல்கள். அவையே கோயில்களுக்குச் சென்று வழிபடுதல், அடியார்களுக்குத் தொண்டு புரிதல், பஞ்சாட்சர மந்திரத்தைக் கூறுதல் முதலியன.

காசியில் இருந்த யானை வடிவுகொண்ட அசுரனைச் சிவபெருமான் கொன்று அந்த யானையின் தோலைச் சட்டையாகக் கொண்டனர். இந்த வரலாறே "கைம்மாவின் உரியைக் களித்தவனே" என்னும் தொடரில் அமைந்துளது. (90)

**நான்செய்த புண்ணியம் யாதோ சிவாய நமஎனவே**
**ஊன்செய்த நாவைக்கொண் டோதப்பெற் றேன்எனை ஒப்பவர்ஆர்**
**வான்செய்த நான்முகத் தோனும் திருநெடு மாலுமற்றைத்**
**தேன்செய்த கற்பகத் தேவனும் தேவரும் செய்அரிதே.**

(பொ - ரை.) ''நான் முன்பிறவியில் செய்த புண்ணியம் எதுவோ? தெரியவில்லையே! தசையால் ஆகிய நாக்கைக் கொண்டு சிவாயநம என்று சொல்லும் பேறு பெற்றேன், ஆகவே, எனக்கு ஒப்பானவர் யாரும் இலர். மேல் உலக மாகிய சத்திய லோகத்தில் உள்ள பிரமனும், திருமாலும், தேன் நிறைந்த கற்பக விருட்சத்திற்குரிய இந்திரனும் மற்றும் உள்ள தேவர்களும் நான் கூறும் பஞ்சாட்சர செபத்தைக் கூறுவது மிகவும் கடினம்.'' (எ - து)

(அ - சொ.) ஊன் - தசை. வான் - மேல் உலகம் (சத்திய லோகம்) நான் முகத்தோன் - நான்கு முகமுடைய பிரமன். கற்பகத் தே - கற்பக விருட்சத்தின் கீழ் உள்ள இந்திரன். அரிது - கடினம்.

(இ - கு.) ஆர் என்பது யார் என்பதன் மரூஉ, செய், முதல் நிலைத் தொழிற்பெயர்.

(வி - ரை.) சிவாயநம என்பது சூட்சும பஞ்சாட்சரம். இந்த மந்திரத்தைக் குருமுகமாகக் கேட்டுச் செபித்தல் வேண்டும். நமசிவாய என்பது தூல பஞ்சாட்சரம். இதனைக் குரு மூலம் கேட்டல் இன்றியே செபிக்கலாம். சிவபெருமான் மாணிக்க வாசகர்க்கு உபதேசம் செய்தது சிவாயநம எனனும் மந்திரமே ஆகும். இந்த உண்மையினை மாணிக்க வாசகரே. '(முன் நின்று ஆண்டாய் எனை முன்னம் யானும் அதுவே முயல்வுற்றுப் பின்னின்று ஏவல் செய்கின்றேன்'' என்று கூறுதல் காண்க. முன்னின்று ஆண்டதாவது சூட்சும பஞ்சாட்சர மந்திரமாம், சிவாயநம என்பதில் உள்ள

சியை முன் நிறுத்திச் சிவாயநம என்று உபதேசித்து ஆட்கொண்டமை ஆகும். இவ்வாறு இறைவர் சிவாயநம என்று உபதேசம் செய்ததனால் பெரிதும் மகிழ்ந்த மாணிக்கவாசகர்,

நானேயோ தவம்செய்தேன் சிவாயநம எனப்பெற்றேன்
தேனாய்இன் அமுதமுமாய்த் தித்திக்கும் சிவபெருமான்
தானேவந் தெனதுள்ளம் புகுந்தடியேற் கருள்செய்தான்
ஊனாரும் உயிர்வாழ்க்கை ஒறுத்தன்றே வெறுத்திடவே.

என்று பாடிக் களிக்கின்றார். இந்த மணிமொழியின் நினைவே நம் வள்ளலாரை "நான் செய்த புண்ணியம் யாதோ சிவாயநம எனவே, ஊன் செய்த நாவைக்கொண்டு ஓதப் பெற்றேன் எனை ஒப்பார் ஆர்" என்று குதுகலமாகப் பாடச் செய்தது. (91)

**உற்று ரயினும்மறைக் கோர்வரி யோய்எனை உற்றுப்பெற்ற**
**நற்று யினும்இனி யானேநின் நல்அருள் நல்கில்என்னை**
**விற்று யினும்கொள வேண்டுகின் றேன்என் விருப்பறிந்தும்**
**சற்று யினும்இரங் காதோநின் சித்தம் தயாநிதியே.**

(பொ - ரை.) "கருணைநிதியே! வேதங்கள் நெருங்கி ஆராய்ச்சி செய்தாலும் அவ் வேதங்களாலும் உணர்தற்கரிய அரிய பொருளே! என்னைக் கருவில் தாங்கிப் பெற்ற நல்ல தாயைக் காட்டிலும் இனியவனே! உனது நல்ல திருவருளைத் தந்து என்னைப் பிறர்க்கு விற்பதற்காயினும் ஏற்றருள வேண்டும் என உன்னை வேண்டுகின்றேன். இவ்வாறான என் விருப்பத்தை நீ நன்கு தெரிந்திருந்தும், உன் உள்ளம் சிறிதேனும் என்னைக் குறித்து இரக்கம் கொள்ளாதோ?" (எ - து.)

(அ - சொ.) தயாநிதி - கருணை நிறைந்த செல்வம். (இறைவன்) ஆயினும் - ஆராய்ந்தாலும். ஓர்வு - உணர்தல். நல்கி - தந்து. சித்தம் - உள்ளம். மறை - வேதம்.

(இ - கு.) தயை + நிதி. உற்று + ஆயினும். இது குற்றியலுகரப் புணர்ச்சி. ஓர்வு + அரிது. இது முற்றியலுகரப் புணர்ச்சி. நல் + தாய்.

(வி - ரை.) வேதம் இறைவனைப் பலவாறுக எண்ணி ஆராய்ந்திருக்கிறது. அப்படி ஆராய்ந்தும் இறைவனது உண்மை நிலையினை உணராது தடுமாறி இருக்கிறது. இந்த உண்மையினைப் பரஞ்சோதியார்,

"பூதங்கள் அல்ல பொறி அல்ல வேறு
புலன் அல்ல உள்ள மதியின்
பேதங்கள் அல்ல இவை அன்றி நின்ற
பிறிதல்ல என்று பெருநூல்
வேதம்கிடந்து தடுமாறும் வஞ்ச
வெளிஎன்ப கூடல் மறுகில்
பாதங்கள் நோவ வளை இந்தன் ஆதி
பகர்வாரை ஆயும் அவரே."

என்று கூறி விளக்குதல் காண்க.

"ஆர் அறிவார் என்னை அனந்தமறை ஓலமிடும்
பேர் அறிவே இன்பப் பெருக்கே பராபரமே"

என்பது தாயுமானுர் வாக்கு.

"இருக்காதி சதுர்வேதம் இசைப்பதுநின் பல்பேதம்
ஒருக்காலும் ஒன்றுரைத்த தொன்றுரைக்க அறியாதே"

என்பது சைவ எல்லப்ப நாவலர் கருத்து.

இன்னோரன்ன கருத்துக்களைக் கொண்டே "உற்று ஆயினும் மறைக்கு ஓர்வு அரியோய்" என்றனர்.

இறைவனுக்குத் தம் அடியார்களை விற்கும் உரிமை உண்டு என்பதைச் சுந்தரர், 'விற்றுக் கொள்வீர் ஒற்றி அல்லேன்' என்று கூறுதல் காண்க. இந்த முறைமையினை நன்கு உணர்ந்தே நம் ஐயா என்னை விற்ருயினும் கொள வேண்டுகின்றேன் என்று வேண்டுவாராயினர். (92)

**வான்மா றினும்மொழி மாருத மாறன் மனம்களிக்கக்**
**கான்மாறி ஆடிய கற்பக மேநின் கருணைஎன்மேல்**
**தான்மா றினும்விட்டு நான்மாறி டேன்பெற்ற தாய்க்குமுலைப்**
**பான்மாறி னும்பிள்ளை பால்மாறு மோஅதில் பல்இடுமே.**

(பொ - ரை.) "மேகம் நீர் பொழிதலில் மாறுபட்டாலும், சொன்ன சொல்லிலிருந்து மாருத இராசசேகர பாண்டியனுடைய மனம் மகிழும்படி கால் மாறி ஆடிய கற்பகமே! உன் திருவருள் என் மீது வைக்க மாறுபட்டாலும் நான் உன்மீது அன்பு காட்டுவதில் சிறிதும் மாறுபட மாட்டேன். குழந்தையைப் பெற்ற தாய்க்குத் தன் முலையில் பால் சுரப்பது தடைப் பட்டாலும் அவள் பெற்ற குழந்தை பால் வற்றிய தாய் முலையில் தன் பல்லை வைக்கச் சிறிதேனும் தயங்குமோ? தயங்காது." (எ - து.)

(அ - சொ.) வான் - மேகம். மாறன் - பாண்டியன் (இராசசேகரன்) பால் மாறுமோ - தயங்குமோ.

(இ - கு.) வான், இடவாகுபெயர்.

(வி - ரை.) பாண்டியர்கள் சத்தியவான்கள் என்பதை உணர்த்தவே வான்மாறினும் மொழி மாருத மாறன் எனப் பட்டது. மதுரையில் இராசசேகர பாண்டியன் என்பவன் ஆட்சிபுரிந்து வந்தான். அவன் ஆயகலைகள் அறுபத்து நான்கனுள் நடனகலையைத் தவிர்த்து அறுபத்துமூன்று கலை களிலும் வல்லவனாய் இருந்தான். பரத நாட்டிய கலையினை அவன் கற்காமைக்குக் காரணம், அக்கலை சிவபெருமானுக்கே சிறப்பான முறையில் அமைந்திருப்பதனால், அக்கலையைத் தான் பயிலக் கூடாது என்பதற்காகவே ஆகும். ஆனால், இப் பாண்டிய மன்னன் காலத்தில் உறையூரில் அரசாண்டு வந்த கரிகாலன் அறுபத்துநான்கு கலைகளிலும் வல்லவனாய் இருந்தான்.

இந்த நிலையில் சோழநாட்டுப் புலவர் ஒருவர், இராச சேகர பாண்டியனைக் கண்டபோது, "எங்கள் நாட்டுக்கரிகால சோழனுக்குப் பரதநாட்டியம் உள்பட அறுபத்துநான்கு கலைகளில் நல்ல புலமை உண்டு. நீ எல்லாக் கலைகளையும் கற்றிருந்தும் பரத நாட்டியக் கலையினைப் பயிலாதது குறை யாகும்" என்றனர். அக்குறையையும் போக்கப் பாண்டியன் பரத கலையையும் நன்கு பயின்றான். அப்படி அக்கலையினைப் பயின்றபோது அதனைப் பயின்றதனால் ஏற்பட்ட துன்பங் களை நன்கு உணர்ந்தான். இந்த உணர்ச்சி மேலிட்டினால் மதுரை வெள்ளியம்பலத்தில் வலக்காலை ஊன்றி இடக் காலைத் தூக்கி எப்போதும் திருநடனம் புரியும் கூத்தப் பெரு மானைக் கண்டு, "இறைவரே! நான் சில நாட்களாகப் பரத நாட்டியம் பயின்றபோது பட்டபாடு எனக்கு நன்கு தெரியும். நீங்கள் ஓய்வு இன்றி ஒரே காலில் திருக்கூத்தினைப் புரிந்து கொண்டிருந்தால் உங்கள் கால் நோகாதா? ஆகவே நீங்கள் இனி இடக்காலை ஊன்றி வலக்காலைத் தூக்கித் திரு நடனம் புரிவீர்களாக. இன்றேல் யான் உயிர் விடுவேன்" என்று வேண்டினன். இப்படி வேண்டிய இராசசேகர பாண் டியன் உள்ளம் மகிழும் வண்ணம் இறைவர் அவ்வாறே இடக் காலை ஊன்றி வலக்காலைத் தூக்கித் திருக்கூத்து இயற்றுவார் ஆயினர். பாண்டியனும் மகிழ்ந்தான். இந்தத் திருக் கோலத்தை இன்றும் மதுரைக் கோயிலுள் இருக்கும் வெள்ளி யம்பலத்தில் கண்டு களிக்கலாம். இந்த வரலாறே திரு விளையாடல் புராணத்தில் கால்மாறி ஆடின படலத்தில் கூறப்பட்டுள்ளது. இந்த நிகழ்ச்சியினையே நம் ஐயா 'மாறன் மனம் களிக்கக் கால்மாறி ஆடிய கற்பகமே' என்று குறித் துள்ளனர்.

கற்பகம் தேவலோகத்தில் உள்ள ஒரு மரம். இது தன்னிடம் வந்து [illegible] தைக் கேட்பினும் தரவல்லது.

அதுபோல் இறைவனும் அன்பர்கட்கு அவர்கள் வேண்டியதைத் தடையின்றித் தருதலின் கற்பகமே எனப்பட்டான்.

தாயின் முலையில் பால் சுரப்பது நிற்பினும் குழந்தைகள் அதில் வாய்வைத்துச் சுவைப்பதில் பின்வாங்குவதில்லை. இதனை மிகவும் இரக்கம் தோன்ற,

"புல்உளைக் குடுமிப் புதல்வன் பல்மாண்
பால்இல் வருமுலை சுவைத்தனன் பெருஅன்"

என்றும்,

"மருங்கில் கொண்ட பல்குறு மாக்கள்
பிசைந்துதின வாடிய முலையள்"

என்றும்,

"ஆடுநனி மறந்த கோடுயர் அடுப்பின்
ஆம்பி பூப்பத் தேம்பசி உழவாப்
பாஅல் இன்மையின் தோலொடு திரங்கி
இல்லி தூர்ந்த பொல்லா வறுமுலை
சுவைத்தொறு அழூஉம்தன் மகத்துமுகம் நோக்கி
நீரொடு நிறைந்த ஈர்இதழ் மழைக்கண்என்
மனையோள்"

என்றும் புறநானூற்றில் பெருஞ்சித்திரனார் பாடி உணர்த்துதல் காண்க. இந்த நிலையினை உட்கொண்டே நம் வள்ளலார், "பெற்ற தாய்க்கு முலைப்பால் மாறினும் பிள்ளை பால்மாறுமோ அதில் பல்இடவே" என்றனர். (93)

**அன்பரி தாம்மனத் தேழையான் யான்துய ரால்மெலிந்தே
இன்பரி தாம்இச் சிறுநடை வாழ்க்கையில் ஏங்குகின்றேன்
என்பரி தாப நிலைநீ அறிந்தும் இரங்கிலையேல்
வன்பரி தாம்தன் அருள்கட லேஎன்னை வாழ்வெனக்கே.**

(பொ - ரை.) "கொடுமை என்பது சிறிதும் இல்லாமல் நல்ல அருளை அன்பர்கட்குக் கொடுக்கும் கடலே! அன்பு என்பதைச் சிறிதும் இல்லாத மனத்தையுடைய அறிவு குறைந்த ஏழையாகிய நான் துன்பத்தால் பெரிதும் வாடி இன்பம் என்பது சிறிதும் இல்லாத இந்த அற்பமான ஒழுக்கங்கள் நிறைந்த இவ்வுலக வாழ்க்கையில் வாடுகின்றேன். யாவரும் இரக்கங்காட்டக் கூடிய என் நிலையினை நீ அறிந்திருந்தும் என்மீது இரக்கம் காட்டவில்லையானால், எனக்கு இவ்வுலக வாழ்வு என்ன பயனைத் தரும்?" (எ - து.)

(அ - சொ.) வன்பு - கொடுமை. நடை - நடத்தை ஒழுக்கம்.

(வி - ரை.) அரிது எனும் சொல் இன்மை என்னும் பொருள் தந்து நிற்கிறது. நம் ஐயா நிறைந்த இறை அன்பைப் பெற்றிருந்தும் அன்பு அரிதாம் மனத்து ஏழையேன் யான் என்று கூறிக் கொள்வது, தமக்குமுன் இருந்த ஞானிகளின் போக்கைப் பின்பற்றியே ஆகும். மாணிக்க வாசகரும் தம்மைப் பற்றிக் கூறுகையில்,

யானே பொய்என் நெஞ்சும் பொய்என் அன்பும்பொய்
ஆனால் வினையேன் அழுதால் உன்னைப் பெறலாமே
தேனே அமுதே கரும்பின் தெளிவே தித்திக்கும்
மானே அருளாய் அடியேன் உனைவந் துறுமாறே

என்று கூறுதல் காண்க. (94)

மைகண்ட கண்டமும் மான்கண்ட வாமமும் வைத்தருளில்
கைகண்ட நீஎங்கும் கண்கண்ட தெய்வம் கருதில் ஒன்றே
மெய்கண்ட நான்மற்றைப் பொய்கண்ட தெய்வங்கள் மேவுவனோ
நெய்கண்ட ஊண்விட்டு நீர்கண்ட கூழுக்கென் நேடுவதே.

(பொ - ரை.) "மைபோலும் கருநிறம் கொண்ட கழுத்தும், மான்போலும் கண்களையுடைய உமாதேவி இடப்

முக்கம் பொருந்தியுள்ள பாகத்தையும் கொண்டு அருள் செய்வதனால் நீதான் கண்கண்ட தெய்வம் என்பதை நன்கு சிந்தித்து ஒரு முடிவுக்கு வந்த பிறகு பொய்யான தெய்வங்களைச் சென்று அடைவனோ? நெய்யோடு கூடிய உணவைக் கை விட்டு எவரேனும் நீர் மிகுதியும் கொண்ட கேழ்வரகு கூழைத் தேடிப் போவாரோ?" (எ - து.)

(அ - சொ.) வாமம் - இடப் பாகம். மேவுவனே - சென்றடைவேனோ. ஊண் - உணவு. நேடுவது - தேடுவது.

(இ - கு.) மை, பண்பாகு பெயர். மான் உவமை ஆகுபெயர்.

(வி - ரை.) திருப்பாற் கடலில் தோன்றிய விடம் கருமையாக இருந்தமையின், அதனைக் கண் மைக்கு ஒப்பாகச் சொல்வது புலவர் மரபு. அவ்வாறே மான்போன்ற கண்களைப் பெற்ற பெண்களை மான் எனவே கூறுதலும் புலவர் மரபு. சிவபெருமான் விடத்தை உண்டதும், உமாதேவிக்குத் தன் இடப்பாகத்தைத் தந்ததும், அருளுக்கு அறிகுறி ஆதலின் "அருளில் கைகண்ட நீ" என்பபட்டது. இறைவன் கண் கண்ட தெய்வம் என்பதை அப்பர், "ஆர்ஒருவர் உள்குவார் உள்ளத்துள்ளே அவ்வுருவாய் நிற்கின்ற அருளும் தோன்றும்" என்று அறிவுறுத்தல் காண்க. திருநாவுக்கரசர், "சென்று நாம் சிறுதெய்வம் சேர்வோம் அல்லோம் சிவபெருமான் திருவடியே சேரப் பெற்றோம்" என்று உணர்த்திய உண்மையினைக் கொண்டே நம் ஐயா, "பொய்கண்ட தெய்வங்கள் மேவுவனே?" என்றார். "நெய்கண்ட ஊண் விட்டு நீர்கண்ட கூழுக்கு என் நாடுவதே?" என்னும் நம் ஐயாவின் திருவாக்கைப் படிக்கும்போது, "கனியிருக்கக் காய்கவர்ந்த கள்வனேனே" "முயல்விட்டுக் காக்கைப்பின் போனவாறே" "அறம் இருக்க மறம் விலைக்குக் கொண்டவாறே" "இருட்

உறையில் மலடு கறந்து எய்த்தவாறே" "விளக்கிருக்க மின்மினித்தீக் காய்ந்தவாறே" "பாழூரில் பயிக்கம்புக் கெய்த்தவாறே" "தவம் இருக்க அவம் செய்து தருக்கி னேனே" "கரும்பிருக்க இரும்புகடித் தெய்த்தவாறே" என்று வாகீசர் கூறியுள்ள அருள்வாக்குகள் நினைவுக்கு வருகின்றன.

**வேணிக்கு மேல்ஒரு வேணிவைத் தோய்முன் விரும்பிஒரு**
**மாணிக்கு வேதம் வகுத்தே கிழிஒன்று வாங்கித்தந்த**
**காணிக்குத் தான்அரைக் காணிமட் டாயினும் காட்டுகண்டாய்**
**பாணிக்கு மோதரும் பாணிவந் தேற்றவர் பான்மைகண்டே.**

(பொ - ரை.) "முன்பு உன்னை அடுத்து முறையிட்ட தருமி என்னும் பார்ப்பனச் சிறுவனுக்குத் தமிழ்ப்பாடல் எழுதித் தந்து பொன் முடிப்பை வாங்கிக் கொடுத்த சடைக்கு மேல் கங்கை ஆற்றை வைத்துள்ள கங்காதரனே ! எனக்கும் உன்னைக் கேட்கும் உரிமை, வழி வழி இருப்பதனால் அந்த வழி வழி உரிமையில் பாதி அளவேனும் கேட்கும் உரிமை யினை எனக்குத் தந்து உன் அருளைக் காட்டுவாயாக. தம்மை வந்து ஒரு பொருளைக் கேட்பவர்களின் இரக்கமான நிலை யினைக் கண்டு கொடுக்க இசைந்தவர்களின் கை கொடுப் பதற்குத் தாமதம் செய்யுமோ ? ஒரு போதும் தாமதம் செய்யாதன்றோ ? (எ - து.)

(அ - சொ.) மாணி - பார்ப்பனச் சிறுவன் (தருமி என்பவன்) வகுத்து - எழுதித்தந்து. கிழி - பொன் முடி. பான்மை - தன்மை, நிலைமை. பாணி - கை. பாணிக்குமோ - தாமதிக்குமோ. வேணி - சடை, நீர்.

(இ - கு.) கண்டாய், முன்னிலை அசைச்சொல்.

(வி - ரை.) இறைவன் திருவாயிலிருந்து வரும் மொழி கள் அனைத்தும் வேதமொழி ஆதலின், "கொங்குதேர்

வாழ்க்கை" என்று இறைவர் எழுதிக் கொடுத்த தமிழ்ப் பாட்டும் வேதம் ஆயிற்று. இதனால்தான் வேதம் வகுத்தே, எனப்பட்டது. மேலும் இதனால் அருளாளர்களின் தமிழ்ப் பாடல்களும் வேதம் என்று கூறுதற்கு எல்லாப்படியாலும் தகுதி உடையது என்பதை நம்மனோர் அறியவே நம் ஐயா, 'வேதம் வகுத்தே' என்று கூறினர். "விரும்பி ஒரு மாணிக்கு வேதம் வகுத்தே கிழி ஒன்று வாங்கித் தந்த" என்னும் வரியில் அமைந்த வரலாற்றை ஐம்பத்தைந்தாவது பாடலின் விசேட உரையில் காண்க. சடைக்கு மேலே கங்கை ஆறாகிய நீரை வைத்திருப்பதை "வேணிக்குமேல் ஒரு வேணி வைத்தோய்" என்னும் சொல் அழகு தோன்றப் பாடி இருப்பதை உற்று நோக்குக. வேணி என்பது சடையையும், நீரையும் குறிக்கும்.

கொடுக்க வேண்டும் என்று ஒருவர் உள்ளத்தில், எண்ணிவிட்டால், கொடுக்கத் தன் கை தடுக்கப்பட்டாலும் கொடுத்தே விடுவர். கை தடுக்கப்படுதற்குக் காரணம் அருகில் இருப்பவர் கொடுப்பதைத் தடைசெய்வதாகும். இந்த உண்மை, மாவலி சக்கரவர்த்தி, வாமனனாக வந்த திருமால் தனக்கு மூன்றடி மண் வேண்டுமென்று கேட்ட போது, கொடுக்க வேண்டா என்று சுக்ராசாரியார் தடுத்தும் மாவலி ஈந்தது கொண்டு தெரிய வருகிறது. இதனை.

"நினைக்கிலை என்கை நிமிர்ந்திட வந்து
தனக்கிய லாவகை தாழ்வது தாழ்வில்
கனக்கரி யான்அது கைத்தலம் என்னில்
எனக்கிதன் மேல்நலம் யாதுகொல் என்றான்."

"வெள்ளியை ஆதல் விளம்பினை மேலோர்
வள்ளியர் ஆக வழங்குவ தல்லால்
எள்ளுவ என்சில இன்உயி ரேனும்
கொள்ளுதல் தீது கொடுப்பது நன்றால்."

எனும் கம்ப ராமாயணப் பாடலால் தெளிக. இதனால்தான் "நம் வள்ளலார் பாணிக்குமோ தரும் பாணி வந்து ஏற்றவர் பான்மை கண்டே?" என்று உணர்த்தி அருளினர். (96)

**மறைக்கொளித் தாய்நெடு மாற்கொளித் தாய்திசை மாமுகங்கொள்**
**இறைக்கொளித் தாய்இங் கதிலோர் பழிஇலை என்தன்மனக்**
**குறைக்கொளித் தாலும் குறைதீர்த் தருள்எனக் கூவிடும்என்**
**முறைக்கொளித் தாலும் அரசேநின் பால்பழி மூடிடுமே.**

(போ - ரை.) "அம்பலத்தரசே! நீ வேதங்கள் தேடிக் காணமுடியாதபடி ஒளித்துள்ளாய்! திருமால் பிரமன் ஆகிய இருவர்களாலும் காண முடியாதபடி ஒளித்துள்ளாய். இதனால் உனக்குப் பழி கிடையாது. என் மனக்குறைகளுக்கு ஒளித்தாலும் என் குறைகளை நீ மறைந்திருந்தேனும் தீர்த்தருளுக என ஓலமிடுகின்ற என் முறையீட்டுக்கு ஒளித்தால் உனக்குப் பழிவந்து சேரும்" (எ - து.)

(அ - சொ.) மறை - வேதம். திசைமாமுகம்கொள் இறை - பிரமதேவன். மா - சிறந்த.

(இ - கு.) மா-உரிச்சொல்.

(வி - ரை.) நான்கு வேதங்களும் முரண்பட்டுக் கூறுகின்றமையின் அவற்றால் இறைவனைக் காண முடியவில்லை. இதனைச் சைவ எல்லப்ப நாவலர் தம் அருணைக் கலம்பகத்தில்

"இருக்காதி சதுர்வேதம் இசைப்பதுநின் பலபேதம்
ஒருக்காலும் ஒன்றுரைத்த தொன்றுரைக்க அறியாதே"

என்று அறிவித்துள்ளனர்.

திருமாலும் பிரமனும் ஞானக்கண் அதுகொண்டு இறைவனைத் தேடாமையினால்தான் சிவபெருமானைக் காணாது வருந்தினர். இந்த உண்மையினையும் அருணைக் கலம்பகம்,

மணிகொண்ட நெடுங்கடலில் விழிவளரும் மாதவனும்
அணிகொண்ட புண்டரிகம் அகலாத சதுமுகனும்
ஞானக்கண் அதுகொண்டு நாடுமா றுணராதே
ஏனத்தின் வடிவாகி எகினத்தின் வடிவாகி
அடிதேடி வருவல்என அவனியெலாம் முழுதிடந்தும்
முடிதேடி வருவல்என மூதண்டம் மிசைபறந்தும்
காணரிய ஒருபொருளாய்க் களங்கம்அற விளங்குபெரும்
சோணகிரி ஏனநிறைந்த சுடரொளியாய் நின்றருள்வோய்"

என்று கூறுகிறது.

ஆகவே, மறையும், திருமாலும், பிரமனும் பதிஞான மின்றிப் பாசஞான முடையவர் ஆதலின், இறைவனைக் கண்டிலர். இதனால்தான், "மறைக்கொளித்தாய், நெடுமாற் கொளித்தாய் திசைமுகம்கொள் இறைக்கொளித்தாய்" என்று கூறப்பட்டது.

இறைப்பண்பு பிரம்மனுக்கு இல்லை என்றாயினும் உபசார வழக்குப்பற்றி அவனை இறை என்று கூறப்பட்டது. அரசனையும் இறை என்று கூறுவது போலக் கொள்க. ஒரு சமயம் இந்திரன் சபையில் தேவமாது நடனம் புரிந்தனள். அதுபோது அவள் நடனத்தை உற்று உற்றுப் பிரமன் பார்த்துக்கொண்டிருந்தனன். இதனால் வெட்கமுற்ற நடன மாது அவன் நேர் பார்வையில் படாமல் ஆடினள். பிரமன் தன் கழுத்தைத் திருப்பி அவள் நடனத்தைப் பார்ப்பது தன் பெருமைக்குக் குறைவு என்று கருதித் தான் படைக்கும் தெய்வம் ஆதலின், அவள் ஆடிய பக்கமாக மற்றும் ஒரு தலையை உண்டாக்கிக் கொண்டான். அவள் பக்கவாட்டில் ஆடுவதைத் தவிர்த்துப் பிரமனுக்குப் பின் புறமாக ஆடினாள். அப்புறத்திலும், மற்றொரு தலையைப் படைத்துக் கொண்டனன். அதன் பின்பும் அடுத்த பக்கவாட்டத்தில் சென்று ஆடினாள். அந்தப் பக்கமும் ஒரு தலையை உண்டாக்கி அவள் நடனத்தைக் கண்டு களித்தான். இவ்வாறு நான்கு திசைகளிலும் தன் தலையைப் படைத்துக் கொண்டமையின் அவன் திசைமுகன் எனப்பட்டான். (97)

**முன்மழை வேண்டும் பருவப் பயிர்வெயின் முடிக்கெட்ட**
**பின்மழை பெய்ந்தென்னை பேறுகண் டாய்அந்தப் பெற்றியைப்போல்**
**நின்மழை போல்கொடை இன்றன்றி மூப்பு நெருங்கியக்கால்**
**பொன்மழை பெய்ந்தென்னை கல்மழை பெய்ந்தென்னை பூரணனே.**

(பொ - ரை.) "நிறைவுள்ள பரிபூரணனானந்தமே! நன்கு கதிர்விட்டு வளர்தற்கு முன்கூட்டியே பருவ மழையை வேண்டிநிற்கும் பயிர் வெயிலால் நன்கு வாடி வதங்கிய பின் மழை பெய்வதால் என்ன பலன்? என்ன புண்ணியம்? அந்தத் தன்மையைப் போலவே உனது மழையாகிய அருள் கொடையை இன்று நீ வழங்காமல் முதுமைப் பருவத்தில் பொன் மழையைப் பெய்தால் என்ன பயன்? ஒருபயனும் ஏற்படாது" (எ - து.)

(அ - சொ.) பூரணன் - எல்லாம் நிறைந்தவன். பேறு - புண்ணியம். பெற்றி - தன்மை. கொடை - வள்ளன்மை. நெருங்கியக்கால் - நெருங்கியபொழுது.

(இ - கு.) கண்டாய், முன்னிலை அசைச்சொல். என்னை என்பதன் ஐ சாரியை.

(வி - ரை.) மழையை வேண்டிப் பயிர் இருப்பதைக் குலசேகராழ்வாரும் "எத்தனையும் வான்மறந்த காலத்தும் பைங்கூழ்கள் மைத்தெழுந்த மாமுகிலே பார்த்திருக்கும்" என்று கூறுதல் காண்க (98)

**நீளா தரவுகொண் டென்குறை யாவும் நீகழ்த்தவும்நீ**
**கேளா தவன்என வாளா இருக்கின்ற கேண்மைஎன்னே**
**சூளாத முக்கண் மணியே விடேல்உனைச் சூழ்ந்தஎன்னை**
**ஆளாகக் கொள்ளினும் மீளா நரகத் தழுத்தினுமே.**

(பொ - ரை.) "சபதம் செய்யாமலேயே செயல்களை முடிக்கவல்ல மூன்று கண்களைக் கொண்ட மணியே! மிக்க

அவரைக் கொண்டு என் குணங்கள் எல்லாவற்றையும் உன்னிடம் முறையிட்டுக் கூறினாலும் நீ சிறிதும் திருச்செவியில் ஏற்றுக் கேட்காதவன் போலச் சும்மா இருக்கின்ற அன்பு தான் என்னவோ? புரியவில்லையே. என்னை அடிமையாகக் கொண்டாலும் சரி; அல்லது மீண்டு வர முடியாத நரகத்தில் என்னை அழுத்தினாலும் சரி. உன்னைச் சரண்புகுந்த என்னைக் கைவிட வேண்டா'' (எ - து.)

(அ - சொ.) நீள் - மிக்க. ஆதரவு - அன்பு. நிகழ்த்த - சொல்ல. வாளா - சும்மா. கேண்மை - அன்பு. சூள் - சபதம்.

(வி - ரை.) ஏனையோர் தாம் ஏதேனும் முடிக்கவேண்டுமானால் அறைகூவி அதாவது சபதம் செய்து அக் காரியத்தை முடிக்கவேண்டும். இவ்வாறு பிறர் சபதம் செய்தல் தம் ஆற்றலைப் பிறர் உணரவேண்டும் என்பதற்காக ஆம். ஆனால் சிவபெருமான் அங்ஙனம் சபதம் செய்து தன் ஆற்றலைக் காட்டவேண்டிய நியதி இல்லை. அவனது அளவில் ஆற்றலை உலகம் அறிந்ததாகும். ஆகவேதான் ''சூளாத முக்கண் மணியே!'' எனப்பட்டான். ''கேளாதவன் போல் வாளா இருக்கின்ற கேண்மை என்னே'' என்னும் வரி, சுந்தரர் பாடியுள்ள

''மீளா அடிமை உமக்கே ஆளாய்ப் பிறரை வேண்டாதே
மூளாத் தீப்போல் உள்ளே கனன்று முகத்தால் மிகவாடி
ஆளாய் இருக்கும் அடியார் தங்கள் அல்லல் சொன்னக்கால்
வாளாங் கிருப்பீர் திருவாரூரீர் வாழ்ந்து போதீரே''

என்னும் திருப்பாட்டை நினைவுபடுத்துகிறது.

மெய் அடியவர்கள் சுவர்க்க நரகங்களை ஒன்றாகவே கருதுவர். இஃது உண்மை. இதனைத் திருவாதவூரர்,

"கொள்ளேன் புரந்தரன்மால் அயன்வாழ்வு குடிகெடினும்
நள்ளேன் நினதடி யாரொடல் லால்நர கம்புகினும்
எள்ளேன் திருவரு ளாலே இருக்கப் பெறின்இறைவா
உள்ளேன் பிறதெய்வம் உன்னைஅல் லாதெங்கள் உத்தமனே"

என்று கூறுவதால் உணரலாம். இவரது திருவடியை ஒட்டியே நம் ஐயா, "மீளா நரகத் தழுந்தினுமே" என்று அருளிச்செய்தனர் (99)

**வளங்கன்றும் மாவனத் தீன்றதன் தாய்இன்றி வாடுகின்ற
இளங்கன்று போல்சிறு வாழ்க்கையில் நின்அருள் இன்றிஅந்தோ
உளங்கன்றும் நான்செய்வ தென்னே கருணை உதவுகண்டாய்
களங்கன்று பேர்அருள் கார்என்று கூறும் களத்தவனே.**

(பொ - ரை.) "இறைவனது கழுத்தில் இருப்பது களங்கம் அன்று. அஃது இறைவனது பேரருளைக் காட்டுகின்ற கருணையான கரிய நிறம் என்று உண்மை ஞானம் தெளிந்தவர்கள் சிறப்பித்துக் கூறுகின்ற கழுத்தையுடையவனே! ஓர் இளமையான பசுங்கன்று தன்னை வளம் குறைந்த கரிய காட்டில் ஈன்ற தாயைக் காணுமல் வாடுவதுபோல் ஐயோ நான் இவ்வற்பமான உலக வாழ்க்கையில் உன் திருவருளைப் பெறுமல் மனம் வெதும்புகின்றேன்; நான் இன்னது செய்வது என்பது தெரியாமல் இருக்கின்றேன். ஆகவே எனக்கு உன் திருவருளைப் புரிவாயாக." (எ - து.)

(அ - சொ.) களங்கு - மாசு. களத்தவன் - கழுத்தையுடையவன். கன்றும் - குறையும். மா - கரிய.

(இ - கு.) மா - உரிச்சொல், கண்டாய், முன்னிலை அசைச்சொல். (100)

**காற்றுக்கு மேல்விட்ட பஞ்சாகி உள்ளம் கறங்கச்சென்றே**
**சோற்றுக்கு மேல்கதி இன்றென வேற்றகம் தோறும்உண்போர்**
**தூற்றுக்கு மேல்பெரும் தூறிலை ஆங்கென் துயரம்எனும்**
**சேற்றுக்கு மேல்பெரும் சேறிலை காண்அருள் செவ்வண்ணனே.**

(பொ - ரை.) "சிவன் எனும் நாமம் தனக்கே உரிய செம்மேனி அம்மானே! காற்றில் விட்ட பஞ்சுபோல அலேப்புண்டு மனம் சுழன்று சென்று சோற்றைத் தேடி உண்பதற்கு மேல் வேறு கதி இல்லை என்று துணிந்து வெவ்வேறு வீடுகள் தோறும் சென்று உண்பர். பழிச் சொல்லுக்கு மேலே வேறு என்ன பெரியபழி இருக்கிறது என்று திடம்கொண்டு திரிவர். அவர்களைப் போலவே நானும் துன்பச் சேற்றுக்கு மேலே சேறு இல்லை என்று திரிகின்றேன். ஆகவே என்னைக் கண்ணெடுத்துப் பார்த்து அவ்வாறு திரியாமல்படி திருவருள் புரிவாயாக." (எ - து.)

(அ - சொ.) கறங்க - சுழல. அகம் - வீடு. தூறு, தூற்று - பழிப்பு, பழிச் சொல். ஆங்கு - போல.

(இ - கு.) வேறு+அகம். தோறும், இடைச்சொல் ஆங்கு, உவம உருபு.

(வி - ரை.) பெருந்தீங்கு புரிபவர்கள் அத்தீங்கினின்று நீங்கி வழி வகை தேடாமல், அத்தீங்கைமேல் மேல் செய்து கொண்டே இருப்பர். அவர்கள் அத் தீங்கால் பழிப்பு வருமே என்று சிறிதும் சிந்தியார். அவர்கள் வேளைக்குச் சோறு அகப்பட்டால் அதுவே சுவர்க்கமாக இருப்பர். அதற்காக வீடு தோறும் பிச்சை எடுக்கவும் மனம் கூசார். இந்தக் கருத்தே முதல், இரண்டாம், மூன்றும் அடிகளில் பொருந்தியுளது. சோறு என்னும் சொல்லே பயன்படுத்தற்குரியது. சாதம் என்பதன்று. இதனை உணர்தல் நன்று. (101)

**அந்தோ துயரில் சுழன்றாடும் ஏழை அவலநெஞ்சம்**
**சிந்தோத நீரின் சுழியோ இளையவர் செங்கைதொட்ட**
**பந்தோ சிறுவர்தம் பம்பரமோ கொட்டும் பஞ்சுகொலோ**
**வந்தோ டுழலும் துரும்போஎன் சொல்வதெம் மாமணியே.**

(பொ - ரை.) "எங்களுடைய சீரிய இரத்தினமே! ஐயோ, துன்பத்தால் சுழன்று ஆடுகின்ற இந்த அறிவின னுடைய வருத்தமிக்க உள்ளமானது குளிர்ந்த ஆற்றுநீரில் உண்டாகும் நீர்ச்சுழியோ? சிறு பிள்ளைகள் தம் அழகிய கையால் தொட்டு விளையாடும் பந்தோ? பம்பரமோ? அடிக் கப்படும் பஞ்சோ? காற்றோடு சுழல்கின்ற துரும்போ? தான் என்னென்று கூறுவேன்?" (எ து.)

(அ - சொ.) மா - சிறந்த. அவலம் - வருத்தம். சிந்து - ஆறு. ஓதம் குளர்ச்சி வந்து - காற்று.

(இ - கு.) மா, உரிச்சொல். அந்தோ, இரக்கக் குறிப் பைக் காட்டும் ஓர் இடைச்சொல். கொல், அசைச்சொல். வந்தொடு + உழலும்.

(வி - ரை.) படுக்கைக்காக அமைத்துக்கொள்ளும் பஞ்சு நாளடைவில் தன் மென்மைத் தன்மை குறைந்து விடும். அதனை மீண்டும் மெத்தென்றமைக்க அதனைப் பஞ்சு தொழிலாளன் அதற்கென அமைந்த கருவியால் அடித்துப் பஞ்சின் வன்மைத் தன்மையினைப் போக்கி மென் மைத் தன்மையதாய்ச் செய்வான் அந்தச் சமயத்தில் அது படும்பாடு பெரும்பாடாதலின், அதனை உணர்ந்த நம் ஐயா "கொட்டும் பஞ்சுகொலோ" என்றனர். (102)

**பொன்வச மோபெண்க ளின்வச மோகடல் பூவசமோ**
**மின்வச மோஎனும் மெய்வச மோஎன் விதிவசமோ**
**தன்வச மோமலம் தன்வச மோஎன் சவலைநெஞ்சம்**
**என்வச மோஇல்லை நின்வசம் நான்எனை ஏன்றுகொள்ளே.**

(பொ - ரை.) "இறைவனே! வருத்தம் மிக்க என்மனம், என் வசத்தில் இருப்பதில்லை. அது பொன்னுக்கும் வசப் பட்டிருக்கிறதோ! பெண்களின் இன்பத்தில் வசப்பட்டிருக் கிறதோ! கடலால் சூழப்பட்ட உலக இச்சையின் வசப்பட் டிருக்கிறதோ! ஒளி வயப்பட்ட உடல் மீது வைத்த ஆசையின் வயப்பட்டிருக்கிறதோ! தனக்குத்தானே வயப்பட்டிருக் கிறதோ! ஆணவம், கன்மம், மாயை என்னும் மும்மலங் களின் வயப்பட்டிருக்கிறதோ எனக்கு ஒன்றும் புரியவில்லை. என்றாலும், நான்மட்டும் உன் வயப்பட்டிருக்கின்றேன். ஆகவே, என்னை ஏற்றருள வேண்டும்" (எ - து.)

(அ - சொ.) ஏன்றுகொள் - ஏற்றுக்கொள்வாயாக. பூ - பூமி. மின் - ஒளி. மெய் - உடல். மலம் - ஆன்மா வைப் பற்றி இருக்கும் ஆணவம், கன்மம், மாயை எனும் மும்மலங்கள். சவலை - வருத்தம், மெலிவு.

(இ - கு.) ஏற்று என்பது என்று என்றாயது மெலித்தல் விகாரம். ஓகாரம் அனைத்தும் ஐயப் பொருள் தந்து நிற்கின்றன.

(வி - ரை.) நம் ஐயர் ஈண்டு அலையும் மனத்தின் தன் மைகளை அழகாக இப்பாட்டில் எடுத்துக்காட்டி யுள்ளனர்.

நானடங் காதொரு நாள்செயும் குற்ற நடக்கைஎல்லாம்
வானடங் காதிந்த மண்அடங் காது மதிக்கும்அண்டம்
தானடங் காதெங்கும் தான்அடங் காதெனத் தான்அறிந்தும்
மானடம் காட்டும் மணிஎனை ஆண்டது மாவியப்பே.

(பொ - ரை.) "நான் சிறிதும் அடங்காமல் ஒரு நாளில் செய்யும் குற்றமாகிய நடத்தைகளை எல்லாம் சிந்தித்துப் பார்த்தால், அக்குற்றத்தின் பெருக்கம், ஆகாயம் அளவுக்கும் மேற்பட்டிருக்கும். இந்த உலகப் பரப்பிற்கும் மிகுதியாக

இருக்கும். எல்லாராலும் ஆராயப்படுகின்ற மேல் உலகங்களுக்கும் அப்பாலும் பெருகி மிக்கு இருக்கும். ஏன்? எந்த இடத்திலும் அக்குற்றத்தின் பெருக்கம் அளவுக்கு மிஞ்சியே இருக்கும். இந்த அளவுக்குப் பெருங் குற்றம் மிகுந்தவன் நான் என்பதை அறிந்திருந்தும், மகத்தான நடனத்தைப் புரிகின்ற மாணிக்கம் போன்ற கூத்தப் பெருமான் என்னை ஆட்கொண்டானே! அந்த அருட் செயல் வியப்புக்கு இடமாகும் அன்றோ?" (எ - து.)

(அ - சொ.) நடக்கை - நடத்தை. வான் - ஆகாயம். மதிக்கும் - ஆராயும். அண்டம் - மேல் உலகம். மணி - இரத்தினம் போன்ற சிவபெருமான். மா - மிக்க.

(இ - கு.) மா - உரிச்சொல். மா நடம் என்பது மானடம் என்றாயது எதுகை நோக்கி என்க.

(வி - ரை.) மால் + நடம் எனப் பிரித்துக்காண்போர்க்கு ஆனந்த மயக்கத்தை விளைவிக்கும் நடனம் என்று பொருள் காணினும் பொருத்தம் ஆகும். (104)

பம்பா யினும்உனைப் பால்கொடுப் பார்வளர்ப் பார்மனைப்பால்
வேம்பாயி னும்வெட்டல் செய்யார் வளர்த்த வெருட்சிகடாந்
தாம்பா யினுஒரு தாம்பாயி னும்கொடு தாம்பின்செல்வார்,
தேம்பாய் மலர்க்குழல் காம்பாக என்னையும் சேர்த்துக்கொள்ளே.

(பொ - ரை.) "இறைவனே! உலகில் உள்ளவர்கள், பாம்பு கொடியதாக இருந்தாலும் அதற்குப் பால் கொடுப்பர்; வீட்டில் உள்ள வேப்பமரத்தை வெட்டி விடாமல் அதனை வளர்ப்பார்கள்; தாம் வளர்த்த மருட்சி கொண்ட எருது தம் மீது பாயவரினும் அதன்பின் ஒரு தாம்பு கயிற்றைக் கொண்டு சென்று அதனைக் கட்டவே முற்படுவார்கள். அவ்வாறு இருக்க என்னையும் கூந்தலில் சூடும் தேன் ஒழுகும் மலரில் உள்ள காம்பைப் போல ஏற்று உன் திருவடியில் அணைத்துக் கொள்வாயாக." (எ - து.)

(அ - சொ.) மனைப்பால் - வீட்டில். வெருட்சி - மருட்சி. தாம்பு - கயிறு. தேம் - தேன். குழல் - கூந்தல்.

(இ - கு.) பாம்பாயினும், வெம்பாயினும் என்பனவற்றில் உள்ள உம்மைகள் இழிவு சிறப்பு உம்மைகள். மனப்பால் என்பதன் பால் ஏழன் உருபு, கடா + தாம் + பாயினும் எனப்பிரிக்க., கொடு - கொண்டு என்பதன் தொகுத்தல் விகாரம். என்னையும் என்பதில் உள்ள உம்மை இறந்தது தழுவியஎச்ச உம்மை.

(வி - ரை.) தாம் தள்ளத் தக்கவராயினும் இறைவர் தம்மை ஏற்றுக்கொள்ள வேண்டும் என்பது வள்ளலாரின் வேண்டுகோள். (105)

நெருப்புக்கு முட்டையும் கூழ்க்கிட உப்பையும் நேடிச்செல்வோர்
பருப்புக்கு நெய்யும்ஒண் பாலுக்கு வாழைப் பழமும்கொள்ளத்
தெருப்புக்கு வாரொடு சேர்கில்என் ஆம்இச் சிறுநடையாம்
இருப்புக்கு வேண்டிய நான்சிவ யோகர்பின் எய்தில்என்னே.

(பொ - ரை) "இறையவனே! நெருப்பில் வைக்க வரட்டியையும், கூழுக்கு உப்பையும் தேடிச் செல்பவர்கள், பருப்புச் சோற்றிற்கு நெய்யும், நல்ல பசும்பாலுடன் வாழைப் பழத்தையும் சேர்த்து உட்கொள்ளத் தெருவில் செல்வாருடனும் சேர்ந்து போனால் தான் என்ன? நல்லது தானே. அவர்களைப்போல் நானும் இந்த உலகில் சாவா நிலையில் வாழும் இருப்புக்காகச் சிவயோகியர் பின் சென்றால் என்ன? அது நல்லது தானே?" (எ - து.)

(அ - சொ.) முட்டை - எரிமுட்டை (வரட்டி). நேடி - தேடி. எய்தில் - அடைந்தால்.

(இ - கு.) புகுவார் என்பது புக்குவார் என்றாயது விரித்தல் விகாரம் பற்றி என்க.

(வி - ரை.) உலகில் ஏழைகளுக்கும் செல்வர்களுக்கும் துன்பம் இருந்தே தீரும். "ஏழைகள் கூழுக்கு உப்பில்லை என்பர். செல்வர் பாலுக்குச் சர்க்கரை இல்லை என்பர். இதனை ஒரு புலவர் அழகுறப் "பாலுக்குச் சர்க்கரை இல்லை என்பார்க்கும், கூழுக்கு உப்பு இல்லை என்பார்க்கும், பல்லக்கின் மீது நன்கு அமரப் பஞ்சால் ஆகிய அணை இல்லை என்பார்க்கும், காலுக்குச் செருப்பு இல்லை என்பார்க்கும் விசனம் ஒன்றே" என்று கூறியுள்ளார். இந்தக் குறிப்புத்தான் நம் ஐயா முதல் இரு வரிகளில் குறிக்கவந்த கருத்து. சிவயோகியர் பால் சொல்வதனால் ஏற்படும் நன்மையைத் திருமந்திரம்,

"சிவயோக ஞானி செறிந்தஅத் தேசம்
அவயோகம் இன்றி அறிவோர் உண்டாகும்
நவயோகம் கைகூடும் நல்இயல் காணும்
பவயோகம் இன்றிப் பரலோகம் ஆமே"

என்று கூறுகிறது. ஆகவேதான் "நான் சிவயோகர் பின் எய்தில் என்னே" என்று வினவுகிறார் நம் ஐயா. உள்ளுவ எல்லாம் உயர்வு உள்ளுக என்பது நம் ஐயாவின் எண்ணம் என்பதை நன்கு உணரவும். நம் ஐயா சாகா நிலையினை எய்த நோக்கம் கொண்டவர் ஆதலின் "இருப்புக்கு வேண்டிய நான் சிவயோகர் பின் எய்தின் என்னே" என்று கூறுவார் ஆயினர். (106)

எம்மத மாட்டும் அரியோய்என் பாவி இடும்பைநெஞ்சை
மும்மத யானையின் காலிட் டிடறினும் மொய்அனல்கண்
விம்மத மாக்கினும் வெட்டினும் நன்றன்னை விட்டஅதன்
வெம்மதம் நீங்கல்என் சம்மதம் காண்எவ் விதத்தினுமே.

(பொ - ரை.) "எந்தச் சமயங்களாயினும், அச் சமயங்களின் பாச ஞானங்களால் அறியப்படாத அவ்வளவு அருமை வாய்ந்த இறைவனே! எனது துன்பம் மிக்க இந்தப் பாவி

நெஞ்சை மூன்று மதங்களைப் பொழிகின்ற யானையின் காலில் வைத்து மிதிக்கச் செய்வதும், மிக்க தீயில் வைத்துப் பெருந் துன்பத்திற்கு உள்ளாக்குவதும், வெட்டிப் போடுவதும் நன்றே. உன்னை விட்டு விலகிய அந்த நெஞ்சின் கொடிய செருக்கு எவ்வாறேனும் நீங்கினால் அதுவே எனக்குச் சம்மதம்" (எ - து.)

(அ - சொ.) மதம்மாட்டு - எந்த மதங்களினாலும் இடும்பை - துயரம். இடறினும் - மிதிப்பினும். மொய் - மிக்க. விம்மதம் - துன்பம்.

(இ - கு.) மாட்டு, ஏழன் உருபு. அனல்கண், இதில் உள்ள கண் ஏழன் உருபு. காண், முன்னிலை அசைச்சொல்.

(வி - ரை.) "எந்த மதத்தினராயினும் செருக்குடன் நான் இறைவனைக் காண்பேம் என்று கூறின், அவர்களால் இறைவன் காணப்படாதவன் ஆவான். இந்த உண்மையினைத் திருவாதவூரர்,

"முறைஉளி ஒற்றி முயன்றவர்க் கொளித்தும்
ஒற்றுமை கொண்டு நோக்கும் உள்ளத்
துற்றவர் வருந்த உறைப்பவர்க் கொளித்தும்
மறைத்திறம் நோக்கி வருந்தினர்க் கொளித்தும்
இத்தந் திரத்தில் காண்டுமென் றிருந்தோர்க்கு
அத்தந் திரத்தில் அவ்வயின் ஒளித்தும்"

என்று அறிவுறுத்தி யுள்ளனர். இந்தக் கருத்துகளையே நம் ஐயா மிகச் சுருங்கிய முறையில் "எம்மத மாட்டும் அரியோய் என்று உணர்த்திக் காட்டினார்.

மும்மதமாவன, கன்னத்திலிருந்து வரும் மதம், மண்டையிலிருந்து வரும் மதம், குறியினின்று வரும் மதம் ஆக மூன்றும்.

**கல்லாத புந்தியும் அந்தோநின் தாளில் கணப்பொழுதும்**
**நில்லாத நெஞ்சமும் பொல்லாத மாயையும் நீள்மதமும்**
**கொல்லாமல் கொன்றெனைத் தின்றுமல் தின்கின்ற கொள்கையைஇங்**
**கெல்லாம் அறிந்த உனக்கெளி யேன்இன் றிசைப்பதென்னே.**

(பொ - ரை.) "இறையவனே! ஐயோ, நின் திருப்புகழைக் கற்காத புத்தியும், உன் திருவடிகளில் சிறிது நேரமாகிலும் பொருந்தாத மனமும், கொடிய உலக மயக்கமும், மிக்க ஆணவமாகிய செருக்கும், என்னைக் கொல்லாமல் கொன்று, தின்னுமல் தின்கின்ற இந்த நிலைகளை எல்லாம் தெரிந்த உனக்கு எளியவனுகிய நான் இன்று சொல்லக் கூடியது என்ன இருக்கிறது?" (எ – து.)

(அ - சொ.) புந்தி - புத்தி. கணப்பொழுது - சிறிது நேரம். மதம் - செருக்கு. இசைப்பது - சொல்வது.

(இ - கு.) புந்தி, புத்தி என்பதன் மெலித்தல் விகாரம்.

(வி - ரை.) புத்தி, மனம், மாயை, மதம் ஆகிய இவை பெரிதும் துன்பப்படுத்தலின் மனம் நொந்து "கொல்லாமல் கொன்று தின்னுமல் தின்று" என்று கூறலானுர். (108)

**தெவ்வழி ஓடும் மனத்தேனுக் குன்தன் திருஉளம்தான்**
**இவ்வழி ஏகென் றிருவழிக் குள்விட்ட தெவ்வழியோ**
**அவ்வழி யேவழி செவ்வழி பாடநின் றாடுகின்றோய்**
**எவ்வழி நீர்ப்புணைக் கென்னே செயல்இவ் வியன்நிலத்தே.**

(பொ-ரை.) செவ்வழிப் பண்ணைப்பாட அப் பண்ணுக்கு ஏற்பத் திருநடம் புரிகின்ற நடராசப் பெருமானே! பகை வளர்தற்குக் காரணமான வழியே போகும் உள்ளம் படைத்த எனக்கு, உனது திருவுள்ளம் இந்த வழியே செல்க என்று கட்டளை இட்டது. எந்த வழியோ, அந்த வழிதானே நல்வழி ஆகும். இந்தப் பரந்த உலகில் நீர் வழியே செல்லும்

படகிற்கு இது கொடிய வழி என்று எண்ணிச் சும்மா இருக்க எப்படி முடியும்? நீர் போகிற வழியில்தானே அப் படகு போகவேண்டும்?" (எ - து.)

(அ - சொ.) தெவ் - பகை. புணை - படகு. வியன் - பரந்த.

(இ - கு) வியன் - உரிச்சொல்.

(வி - ரை.) செவ்வழி என்பது தமிழில் உள்ள இராகப் பெயர்களில் ஒன்று. இக்காலத்தில் கர்நாடக இசை என்னும் பெயரால் வழங்கப் பெறும். தோடி, பைரவி, பூபாளம் போன்றவை, அக்காலத்தில் இல்லை. பண்டைக் காலத்தில் தமிழ்ச் சுரங்கள் ஏழு. அவையே குரல், துத்தம், கைக்கிளை, உழை, இளி, விளரி, தாரம் என்பன, இவற்றிற்குப் பதிலாக இக்காலத்தில் ஷட்ஜமம், ரிஷபம், காந்தாரம், மத்திமம், பஞ்சமம், தைவதம், நிஷாதம் என்னும் வடமொழிப் பெயர்கள் வழங்கப் படுகின்றன. பண்டைக் காலத்தில் அராகம் எனப்படும் தமிழ்ச் சொல்லே இப்போது ராகம் எனப்படுகிறது. இக் காலத்தில் சுருதி எனபது அக்காலத்தில் கேள்வி எனப்பட்டது.

தமிழ் மொழியில் பதினோராயிரத்துத் தொள்ளாயிரத்துத் தொண்ணூற்றொன்று இசை வகைகள் இருந்தன என்பது சிலப் பதிகார உரையால் தெரிகிறது. இதுபோது நூற்றுமூன்று பண்களின் பெயர்கள் மட்டும் தெரியவருகின்றன. இவற்றுள் ஏறக் குறைய இருபத்துநான்கு பண்கள் மட்டும் இடம் பெற்றுள்ளன.

பண்களுக்குரிய பெயர்கள் குறிஞ்சி, கொல்லி, தக்கேசி, யாழ்முறி, நேரிசை, செந்துருத்தி, செவ்வழி, புற நீர்மை என்பனவாக உள்ளன. இத்தகைய தமிழ்ப் பெயர்கள் எல்லாம் மறைந்து வெவ்வேறு பெயர்கள் வழங்கி வருகின் றன. ஆலத்தியே இக்காலத்தில் ஆலாபனம் எனப்படுகிறது. சீர்த்திதான்,-கீர்த்தனை ஆயிற்று. திருப்புகழைக் கீர்த்தனை

என்னலாம். இக்காலத்து பிடில் (Fiddle) அக்காலத்தில் கின்னரி அல்லது கின்னரம் எனப்பட்டது. இன்னும் இவற்றைப் பெருக்கின் நீளும். தமிழ் இசையின் சிறப்பை உணர்த்தவேதான் நம் ஐயா சுருக்கமாகச் செவ்வழிபாட என்றனர்.

வண்டுகள் செவ்வழிப் பண் பாடுவதைத் திருஞானசம்பந்தர்,

"சேருடு செங்கழுநீர்த் தாதாடி மதுஉண்டு சிவந்த வண்டு
வேறுய உருவாகிச் செவ்வழிநல் பண்பாடும் மிழலையாமே"

என்று பாடுகிறார்.

இருவழிகள் ஆவன நவ்வழி, தீவழி என்பன. ஆன்மா விதிவழியே நடக்கும் என்பதை விளக்கப் புறநானூறு நீர் வழிப்படும் புணையையே உதாரணமாகக் கூறுகிறது.

"நீர்வழிப் படூஉம் புணைபோல் ஆர்உயிர்
முறைவழிப் படூஉம்"

என்னும் வரிகளைக் காண்க. இது குறித்தே நம் ஐயா, "வெவ்வழி நீர்ப்புணைக்கு என்னே செயல்" என்றார். (109)

**கண்ணார் நுதல்செங் கரும்பேநின் பொன்அருள் கால்மலரை
எண்ணாத பாவியேன் ஏன்பிறந் தேன்நினை ஏத்துகின்றோர்
உண்ணாத ஊணும் உடுக்கா உடையும் உணர்ச்சிசற்றும்
நண்ணாத நெஞ்சமுங் கொண்டுல கோருள்ளனர் நான்உறவே.**

(பொ-ரை.) "நெற்றியில் கண் படைத்த இனிய கரும்பே! உன்னுடைய அழகிய திருவருளுக்கு இலக்காகிய திருவடி மலரை எண்ணாத பாவி இவ்வுலகில் ஏன் பிறந்தேனோ தெரியவில்லையே. உன்னைப் போற்றிப் புகழ்கின்றவர்கள் உண்ணாத உணவையும் உண்டும் உடுக்காத உடையையும் உடுத்தும், இறை உணர்வில் சிறிதும் நெருங்காத உள்ளமும்

கொண்டு உலகத்தோர் முன்பு நாணம் கொண்டு வாழத் தான் போலும் நான் பிறந்தது!"

(அ - சொ.) ஆர் - பொருந்திய, நுதல் - நெற்றி. பொன்- அழகிய, ஏத்துகின்றோர் - போற்றி வணங்கும் மெய்ஞ்ஞானி கள். ஊண் - உணவு. நண்ணுத - சேராத.

(இ - கு.) உண்ணுத, எதிர்மறைப் பெயர் எச்சம் - உடுக்கா, ஈறுகெட்ட எதிர்மறைப் பெயர் எச்சம். கரும்பு, உவமை ஆகுபெயர்.

(வி - ரை.) இறைவன் திருவடி, மலர் என்னும் உண்மை யைத் திருவிளையாடல் புராணம். "அன்பர் இதயம் என்னும் செழுமலர் ஓடையில் மலர்ந்து சிவானந்தத் தேன் ததும்பும் தெய்வக் கஞ்சத் தொழுதகு சிற்றடி" என்று கூறுதல் கொண்டு தெளிக.

ஞானிகள் நம்மைப் போல நா சுவைக்க உண்ணுர். உடல் மினுக்கப் பட்டாடை முதலியன உடுக்கார். ஆனுல் அவர்கள் உண்ணும் உணவு காற்று, உதிர்சருகு, கிழங்கு, காய், கனி முதலியன. உடுக்கும் உடை கோவணம், கந்தை, தழை நார் முதலியன. அவர்களின் உணர்வு இறைவனை உன்னுதல். இந்த உண்மையினைப் பட்டினத் தடிகள், சேக்கிழார், தாயுமானவர் முறையே அறிவித் திருப்பதைக் காணலாம்.

"காடே திருந்தென்ன காற்றே புசித்தென்ன கந்தைசுற்றி
ஓடே எடுத்தென்ன "

"உடைகோ வணம்உண் டுறங்கப் புறந்திண்ணை [உண்டுணை இங்
கடைகாய் இலைஉண் டருந்தத்தண் ணீர்உண்டு;

என்று கூறியவை பட்டினத்தார் வாக்கு.

ஆரம் கண்டிகை ஆடையும் கந்தையே
பாரம் ஈசன் பணிஅல தொன்றிலார்
ஈர அன்பினர் யாதும் குறைவிலார்
வீரம் என்னுல் விளம்பும் தகையதோ.

என்பது அருள்மொழித் தேவரின் அருள்வாக்கு.

கனியேனும் வறியசெங் காயேனும் உதிர்சருகு
கந்தமூ லங்க ளேனும்
கனல்வாதை வந்தெய்தின் அள்ளிப் புசித்துநான்
கண்மூடி மௌனி யாகித்
தனியே இருப்பதற் கெண்ணினேன்.

என்று கூறியிருப்பது தாயுமானவர் வாக்கு.

இவ்வாறு நாம் இல்லையே என்னும் கருத்தில் ''ஏத்துகின்றோர், உண்ணாத ஊணும் உடுக்காத உடையும் உணர்ச்சி சற்று எண்ணாத நெஞ்சமும் கொண்டு'' என்று உலகோர் நிலையைத் தம் மீது ஏற்றிக் கூறிக் கொண்டனர். (110)

அம்மா வயிற்றெரிக் காற்றேன் எனநின் றழுதலறச்
சும்மாஅம் சேய்முகம் தாய்பார்த் திருக்கத் துணிவள்கொலோ
இம்மா நிலத்தமு தேற்றாயி னும்தந்திடுவள்முக்கண்
எம்மான்இங் கேழை அழுமுகம் பார்த்தும் இரங்கிலையே.

(பொ - ரை.) ''மூன்று கண்களையுடைய எம்பெருமானே! ஒரு குழந்தை தன் தாய் முகம் நோக்கி, 'அம்மா பசியால் என் வயிறு எரிகின்றது. இதனை என்னால் பொறுக்க இயலவில்லை' என்று தன்முன் நின்று அழுது வாய்விட்டுக் கதறும்போது, அந்தக் குழந்தையின் முகத்தைப் பார்த்துக் கொண்டு அத்தாய் சும்மா இருக்கத் துணிவாளோ? ஒருபோதும் சும்மா இருக்கத் துணியாள். அவள் இந்தப் பெரிய உலகில் பிச்சை எடுத்தாகிலும் உணவு கொண்டு

வந்து தன் குழந்தைக்குத் தருவாள். நானும் உனக்கு ஒரு குழந்தை. இந்த ஏழைக் குழந்தை அழுகின்ற முகத்தைப் பார்த்தும் நீ என்மீது இரக்கம் காட்ட வில்லையே!" (எ - து.)

(அ - சொ.) எம்மான் - எம்பெருமானே. ஆற்றேன் - பொறுக்க முடியாதவனாய் உள்ளேன். சேய் - குழந்தை. மா - பெரிய. அமுது - உணவு. ஏற்றாயினும் - பிச்சை எடுத்தாகிலும்.

(இ - கு.) வயிறு + எரிக்கு + ஆற்றேன். மா - உரிச் சொல். கொல், அசை. ஓ, வினா (111)

**ஓயாக் கருணை முகிலே நுதல்கண் ஒருவநின்பால்**
**தோயாக் கொடியவெம் நெஞ்சத்தை நான்சுடு சொல்லைச்சொல்லி**
**வாயால் சுடினும் தெரிந்தில தேஇனி வல்வடவைத்**
**தீயால் சுடினும்என் அந்தோ சிறிதும் தெரிவதன்றே.**

(பொ - ரை.) "இடை விடாமல் உயிர்களுக்குப் பெருங் கருணையைப் புரிந்து வரும் மேகமே! நெற்றியில் கண் படைத்த ஒப்பற்ற ஒருவனே! உன் அன்பில் படியாத மிக்க கொடிய இந்த மனத்தை நான் வெம்மையான மொழிகளைச் சொல்லி வாயால் சுட்டாலும் அதற்குக் கொஞ்சம் கூடத் தெரியவில்லையே. இப்படியான கொடிய மனத்தை இனி வன்மை மிக்க வடவாமுகாக்கினி என்னும் ஊழித் தீயால் சுட்டால்தான் என்ன? ஐயோ! அதற்குக் கொஞ்சம் கூடத் தெரியவில்லையே. (எ - து.)

(அ - சொ.) முகில் - மேகம், நுதல் - நெற்றி, ஒருவ - ஒப்பற்றவனே, நின்பால் - உன்னிடம், தோயா - மனம் பொருந்தாத அல்லது அன்பு பொருந்தாத.

(இ - கு.) முகில், உவமை ஆகு பெயர் - நின்பால். ஏழன் உருபு, கொடிய வெம், ஒரு பொருள் பன்மொழி.

(வி - ரை.) இறைவன் அன்பர்கட்கும் ஆன்மாக்களுக்கும் இடைவிடாமலும் கைம்மாறு கருதாமலும் திருவருள் புரிந்து வருதலின், "ஓயாக் கருணை முகிலே" எனப்பட்டான். மேகம் கைம்மாறு கருதாது என்பதை நம் திருவள்ளுவர் "கைம்மாறு வேண்டாக் கடப்பாடுமாரி" என்று கூறுதல் காண்க. சிவபெருமானுக்குமேல் வேறு ஒரு தெய்வமும் இல்லை என்பது நல்லறிஞர்கள் கண்ட முடிபு. திருமூலர் சிவபெருமானை "ஒன்றே குலமும் ஒருவனே தேவனும்" என்றும் 'சிவனொடொக்கும் தெய்வம் தேடினும் இல்லை' என்றும் கூறுதல் காண்க. இந்த உண்மையினை வைணவ ஆழ்வார்களில் தலை சிறந்த நம்மாழ்வாரும் சிவபெருமானைத்தான் ஒருவன் என்று நன்கு ஒளிமறைவு இன்றிக் கூறுகின்றார். அவர் திருவாக்கு. "ஒருவன் என்று ஏத்த நின்ற நளிர்மதிச் சடையன்" என்பது. இந்த உண்மையினை வற்புறுத்தவே "நுதல்கண் ஒருவ" என்றனர் நம் ஐயா. சுடு சொல்லாவது உள்ளம் தூய்மை யுடையவர்கள் வெகுண்டு கூறின் அவ்வாறே பயனை விளைவிக்கும் சொல்லாகும். இதனால்தான் திருவள்ளுவர், புலவர் வாய்வழி சுடுசொல்லைப் பெறுதல் கூடாது என்னும் கருத்தில், 'வில்லேர் உழவர் பகை கொளினும் கொள்ளற்க சொல்லேர் உழவர் பகை' என்று எச்சரிக்கை செய்துள்ளனர்.

வடவைக்கனல் என்பது குதிரை முக வடிவில் கடல் மீது இறைவனால் அமர்த்தப்பட்ட தீ. இது மிக்க வன்மையும் வெம்மையும் உடையது. இதன் வன்மை வெம்மையினால் தான் கடல் பொங்கி எழாமல் தணிந்து நிற்கிறது. வடவைக் கனல் ஊழிக் காலத்தில் சீறி எழுந்து உலகை அழித்து விடும். இன்னோரன்ன காரணங்களால்தாம், "வல் வடவைத் தீ" என்று கூறப்பட்டது. (112)

மாலறி யான்மல ரோன்அறி யான்மக வான்அறியான்
காலறி யான்மற்றை வானோர் கனவினும் கண்டறியார்
சேலறி யாவிழி மங்கைபங் காநின் திறத்தைமறை
நாலறி யாஎனில் நான்அறி வேன்எனல் நாண்உடைத்தே.

(பொ • ரை. "சேல்மீன் கூடத் தெரிந்து கொள்ள முடியாத பிறழ்ச்சி அழகும், மகிழ்ச்சியும் கொண்ட கண்களை யுடைய பார்வதிதேவியைப் பக்கத்தே கொண்டுள்ள சிவ பெருமானே ! உன்னைத் திருமால், பிரமன், இந்திரன் காற்று மற்றும் உள்ள தேவர்களும் தம் தம் கனவிலும் கூடப் பார்த் தறியார். உன் உண்மைத் தன்மையை நான்கு வேதங் களும் அறியமாட்டா. இந்த நிலையில் நான் உன்னை அறிவேன் என்று கூறுதல் எனக்கே வெட்கமாக இருக்கிறது". (எ-து.)

(அ - சொ.) சேல் - சேல் மீன். மலரோன் தாமரை மலரில் இருக்கும் பிரமன். மகவான் - இந்திரன், கால் - காற்று. மற்றைய - ஏனைய, வானோர் - தேவர், திறம் - உண் மைத் தன்மை. மறை - வேதம் நாண் வெட்கம்.

(வி - ரை.) மங்கை ஈண்டுப் பார்வதி தேவியார். அவள் விழி அழகிலும், பிறழ்ச்சியிலும் சேல் மீனினும் சிறப்புடைத் தாய் இருந்தமையின் சேல் அறியா விழி எனப்பட்டது. மற்றை வானோர் முப்பத்து முக்கோடி தேவர்கள் அவர்கள் பன்னிரு சூரியர்கள், பதினொரு உருத்திரர்கள், எட்டு வசுக் கள், சந்திர சூரியர்கள் இருவர். முப்பத்து முக்கோடி என்ப தற்கு முப்பத்து மூன்று கோடி என்பது பொருள் அன்று. கோடி என்பது ஈண்டு எல்லை என்னும் பொருளது ஆகவே முப்பத்து முக்கோடி என்பது முப்பத்து மூன்று என்னும் எல்லைக்குள் பட்டது என்னும் பொருளது. மற்றைவானோர்கள் என்பதற்கு எட்டுத்திசைப் பாலகர்களுள் இந்திரன் காற்று

எனும் இருவர் நீங்கலாக ஏனைய அறுவர் என்றும் பொருள் கூறலாம். அவர்கள் அக்கினி, யமன், நிருதி, வருணன் குபேரன், ஈசானன் என்பவர்கள்.

மறைநான்காவன இருக்கு யசுர், சாமம், அதர்வணம் என்பன. இவை வடமொழி வேதங்கள். இவற்றால்தாம் இறைவன் அறியப்படாதவன் ஆவான். தமிழ் மறையினால் இறைவன் அறியப்படுபவன் ஆவான். இந்த உண்மை யினைத் திருஞான சம்பந்தர் தம் முதல் திருப்பதிகத்தின் முதல் திருப்பாட்டிலேயே 'பீடுடைய பிரமாபுரம் மேவிய பெம்மான் இவன் அன்றே' என்று தமிழ் மறைவழித் தாம் கண்டதைக் கூறி விளக்குதல் காண்க. இது குறித்தே திருவிளையாடல் புராணம் "தமிழ் அறியும் பெருமானே" என்று இறைவனைக் குறிப்பிடுகிறது.

தமிழ் வேதங்கள் ஆவன அறம், பொருள், இன்பம், வீடு என்னும் நான்கைப் பற்றித் தனித்தனியே கூறும் நூல் களாம். அறம், பொருள், இன்பம், வீடு பற்றிய தமிழ் மறை களையே இறைவர் கல்லால விருட்சத்தின் கீழ் உரைத்தருளி ஞர் என்பதை மணி மொழியார்,

அருந்தவர்க் காலின்கீழ் அறம்முதலா நான்கனையும்
இருந்தவர்க் கருளுமது எனக்கறிய இயம்பேடீ
அருந்தவர்க் கறம்முதல்நான் கன்றருளிச் செய்திலனேல்
திருந்தவர்க் குலகியற்கை தெரியாகாண் சாழலோ

என்று உணர்த்துமாற்றால் உணர்க. (113)

**ஆறிட்ட வேணியும் ஆட்டிட்ட பாதமும் அம்மையொடு**
**கூறிட்ட பாகமும் கோத்திட்ட கொன்றையும் கோலம்மிக்க**
**நீறிட்ட மேனியும் நான்காணும் நாள்என் நிலைத்தலைமேல்**
**ஏறிட்ட கைகள்கண் டாணவப் பேய்கள் இறங்கிடுமே.**

(பொ - ரை.) "கங்கை ஆற்றைக் கொண்ட சடையும், நடனம் புரிகின்ற திருவடியும், இறைவிக்குத்தன் ஒரு பாகத்தைப் பகிர்ந்து கொடுத்துள்ள பாகமும், இணைத்தும் கட்டப்பட்டது போன்றுள்ள கொன்றைமலரும் அழகுமிக்க, திருநீறு பூசிய திருமேனியும் நான் காணும் நாள் எந்நாளோ, அந் நாளில் என் நிலையை நான் அறிந்து என் கைகள் என் தலைமேல் தாமே ஏற, அந்தக் காட்சியை ஆணவப் பேய்கள் கண்டதும் என்னைப் பிடித்திருந்த பிடிப்பில் இருந்து போய் விடும்." (எ - து)

(அ - சொ.) வேணி - சடை. ஆட்டு - நடனம். கூறு - பகுதி. கோலம் - அழகு. நீறு - திருநீறு. மேனி - உடம்பு.

(இ - கு.) ஆட்டு+இட்ட.

(வி - ரை.) கொன்றைமலர் மலர்ந்திருக்கும் காட்சி இயற்கையாகவே மலர்கள் ஒன்றோடு ஒன்று இணைக்கப்பட்ட மாலைபோல் காணப்படும். இது குறித்தே "கோத்திட்ட கொன்றை" எனப்பட்டது. நீறு இடுவதனால் அழகு மிகுதலின் "கோலம் மிக்க நீறு இட்டமேனி" எனப்பட்டது "சுந்தரம் ஆவது நீறு" என்பது சம்பந்தர் வாக்கு. இது குறித்தே "நீறு இல்லா நெற்றிபாழ்" என்றனர் ஔவையார். ஆணவத்தின் குணம் பலவாதலின், அதனை ஆணவப் பேய்கள் எனப் பன்மையில் கூறினர். இந்த ஆணவமலத்தின் குணபேதங்களை உமாபதி சிவம் விகற்பம், குரோதம், மோகம், கொலை, மதம் என்று கூறுவர். மேலும், இதனைச் சிவஞான சித்தியார்,

ஒன்றதாய் அநேக சக்தி உடையதாய் உடனாய் ஆதி
அன்றதாய் ஆன்மா வின்தன் அறிவொடு தொழிலை ஆர்த்து
நின்றுபோத் திருத்து வத்தை நிகழ்த்திச்செம் பினில்க
[ளிம்பேய்ந்
தென்றும்அஞ் ஞானம் காட்டும் ஆணவம் இயைந்து நின்றே.
என்று கூறுகிறது. (114)

அல்உண்ட கண்டத் தரசேநின் சீர்த்தி அமுதம்உண்டோர்
கொல்உண்ட தேவர்தம் கோள்உண்ட சீர்எனும் கூழ்உண்பரோ
சொல்உண்ட வாயினர் புல்உண்ப ரோஇன் சுவைக்கண்டேனும்
கல்உண்ட பேர்கருங் கல்உண்ப ரோஇக் கடல்இடத்தே.

(பொ - ரை.) "இருள் நிறமான விடத்தை உண்ட கழுத்துடைய நீலகண்டப் பெருமானே! இந்தக் கடல் சூழ்ந்த உலகில் உன் புகழாகிய அமுதத்தைப் பருகியவர்கள், இறப்புக்கு உரியவர்களாகிய தேவர்களின் பொய்யான சீர் ஆம் உணவை உண்பரோ? நெல் அரிசி உணவை உண்டவர்கள் புல் உணவை உண்பரோ? இனிய சுவையுடைய கற்கண்டை உண்டவர்கள் கருங்கல்லை உண்பரோ?" (எ - து.)

(அ - சொ.) அல் - இருள். கண்டம் - கழுத்து. சீர்த்தி - புகழ். கொல் - இறப்பு. கோள் - பொய். கூழ் - உணவு. சொல் - நெல் (நெல் அரிசி) கண்டு - கற்கண்டு.

(இ - கு.) அல் - ஆகுபெயர்.

(வி - ரை.) அல் ஈண்டு இருள் எனும் பொருளைத் தருத லின்றி விடத்தை உணர்த்தலின் பண்பாகு பெயர் ஆயிற்று. தேவர்களின் வாழ்வு பொய் வாழ்வு. இது குறித்தே இந்த வாழ்வை உண்மை அன்பர்கள் சிறிதும் விரும்பார். மணி

வாசகரும் "கொள்ளேன் புரந்தரன்மால் அயன் வாழ்வு" என்று கூறுவார் ஆயினர். வீரவாகு தேவர் முருகப்பெருமானை வேண்டிய வரம் இன்னது என்பதைக் கந்த புராணம்,

கோல நீடிய நிதிபதி வாழ்க்கையும் குறியேன்
மேலை இந்திரன் அரசினைக் கனவிலும் வெஃகேன்
மால யன்பெறு பதத்தையும் பொருள்என மதியேன்
சால நின்பதத் தன்மையே வேண்டுவன் தமியேன்.

என்று கூறுதல் காண்க. இவற்றை உட்கொண்டே நம் ஐயா, "கொல் உண்ட தேவர்தம் கோள் உண்ட சீர் எனும் கூழ் உண்பரோ" என்றனர். (115)

காரே எனுமணி கண்டத்தி னன்பொன் கழலைஅன்றி
யாரே துணைநமக் கேழைநெஞ் சேஇங் கிருந்துகழு
நீரே எனினும் தரற்கஞ்சு வாரோடு நீயுஞ்சென்று
சேரேல் இறுகச் சிவாய நமஎனச் சிந்தைசெய்யே.

(பொ - ரை.) "அறிவு இல்லாத மனமே! கார் மேகம் போல் கருத்துள்ள நீலமணி போன்றுள்ள கண்டத்தை யுடையவனுடைய அழகிய திருவடிகளே அல்லாமல் வேறு யார் நமக்குத் துணையாவார்? உலக மக்கள், கழுவி வெளியே ஊற்றும் நீரைக் கூடக் கொடுக்க மாட்டார்கள். ஆகவே, நீ உள்ள இடத்தை விட்டுச் நீங்கிச் சென்று உலோபிகளை அடையாதே உறுதியாக எப்போதும் சிவாயநம எனும் ஐந்தெழுத்து மந்திரத்தையே மனத்தில் எண்ணிக்கொண் டிருப்பாயாக" (எ - து.)

(அ - சொ.) கார் - கரிய மேகம். மணி - நீலமணி. கண்டத்தினன் - கழுத்துடைய சிவபெருமான். பொன் -

அழகிய. கழல் - வீரத்தண்டை அணிந்த பாதம். இறுக — உறுதியாக.

(இ — கு.) கழல் - தானி ஆகுபெயர். கார் - பண்பாகு பெயர்.

(வி - ரை.) இறைவன் கழுத்து, கரு நிறமான விடத்தைக் கொண்டிருத்தலின், காரே எனும் மணி கண்டத்தினன் எனப்பட்டான். கழல் எனும் சொல் வீரத்தண்டையைக் குறிக்கும். அவ்வீரத்தண்டை இங்குத் திருவடிகளை உணர்த்தி நிற்கிறது. சிவாயநம என்று சிந்திப்பார்க்கு அபாயம் ஒருநாளும் இல்லை ஆதலின், "இறுகச் சிவாயநம எனச் சிந்தை செய்யே" என்றனர். உலகில் மக்கள் பிறர்க்கு ஈய மனம்துணியார். இதனைத் திருவள்ளுவர் வெகு அழகாக, 'கையைக் கழுவியவர்கள் அக் கையைக் கூட உதரமாட்டார்கள். அதற்குக் காரணம் அக் கையில் உள்ள நீர் கூடப் பிறர் மீது பட்டு அவர்கள் உடல் குளிர்ந்து விடும் என்பதனால் ஆகும் என்பதாம். இந்தக் கருத்தில் "ஈர்ங்கை உதிரார் கயவர்" என்று மூன்று சொற்களால் கூறிச் சென்றார். மற்றொரு புலவர் "சுண்ணம்பு பட்ட இலையும் கொடார் கவிசொன்னவர்க்கே" என்று கூறியுள்ளனர். இன்னோரன்ன காரணங்களால்தாம் "கழுநீரே எனினும் தரற்கு அஞ்சுவர்" என்றனர். (116)

வலைப்பட்ட மான்என வாள்பட்ட கண்ணியர் மையல்என்னும்
புலைப்பட்ட பேய்க்கு விலைப்பட்ட நான்மதி போய்ப்புலம்ப
இலைப்பட்ட இம்மனம் அந்தோஇவ் ஏழைக்கென் றெங்கிருந்து
தலைப்பட்ட தோஇதற் கென்செய்கு வேன்முக்கண் சங்கரனே.

(பொ - ரை.) "மூன்று கண்களையுடைய சிவசங்கரனே! வலையில் அகப்பட்ட மானைப்போல, வாள் போன்ற கூரிய கண்களையுடைய பெண்களின் போகம் என்னும் இழி செய லாகிய பேய்க்கு அடிமைப்பட்ட நான், என் அறிவு கெட்டு வருந்தக் காற்றால் அலைப்பண்ணும் இலைபோல் அலையும் இந்த மனம் ஐயோ, இந்த அறிவீனனுக்கு எப்போது எங்கிருந்து வந்து என்னுடன் இணைந்ததோ தெரிவில்லையே! இதற்கு நான் என்ன செய்வேன்? இன்னது செய்வது என்பது தெரிய வில்லையே" (எ - து.)

(அ - சொ.) புலை - கீழ்மை. இழிவு. மதி - அறிவு, தலைப்பட்டது - சேர்ந்தது.

(வி-ரை.) மாதர்களின் பார்வை கூர்மையானது; துன்பம் தருவது. ஆதலின் வாள்பட்ட கண் எனப்பட்டது. பெண் மையல் அறிவை மயங்கச் செய்தலின் "மையல் என்னும் புலைப்பட்ட பேய்" என்று கூறப்பட்டது. ஏழை ஈண்டுப் பொருள் இன்மை காரணமாக அமைந்த சொல் அன்று. அறிவு இன்மை காரணமாக அமைந்த சொல். (117)

குருந்தாஎன் சோக மனம்ஆன பிள்ளைக் குரங்குக்கிங்கே
வருந்தா ணவம்என்னும் மானிடப் பேய்ஒன்று மாத்திரமோ
பெருந்தா மதம்என் றிராக்கதப் பேயும் பிடித்ததெந்தாய்
திருந்தா அதன்குதிப் பென்ஒரு வாய்கொண்டு செப்பரிதே.

(பொ - ரை.) "என் தந்தையே! குழந்தை போன்ற எனது வாட்டம் மிக்க மனம் எனும் சிறு குரங்கு, ஆணவம் என்னும் மானிடப் பேயால் வருந்துகின்றது. இந்த வாட்டம் மட்டுமா? பெரிய சோம்பல் என்னும் இராட்சசப் பேயும் அம்மனக் குரங்கைப் பிடித்துக்கொண்டது. இந்த இரண்டும்

அந்த மனம் எனும் குரங்கை ஆட்டுவதனால் அது சிறிதும் நல்வழிப்படாமல் ஆணவப் பேயும் தாமதமாம் இராக்கதப் பேயும் ஆட்ட அவற்றின் சொல்படி ஆடிக்கொண்டிருக்கிறது. இந்த மனக் குரங்கின் குதிப்பை என் ஒரு வாயால் சொல்ல இயலாமல் இருக்கிறது ''. (எ - து.)

(அ - சொ.) குருந்து - குழந்தை. ஒன்று மாத்திரமோ - ஒன்று மட்டுமா? தாமதம் - சோம்பல்.

(இ - கு.) குதிப்பு, தொழிற்பெயர். செப்ப + அரிது செப்ப திரிசச்சொல்.

(வி - ரை.) குரங்கு இயற்கையிலேயே அமைதி அற்றது. ஓர் இடத்திலிருந்து மற்றோர் இடத்திற்குத் தாவிக்கொண்டே இருக்கும். அத்தகைய குரங்கைப் பேயும் பிடித்துக் கொண்டால், அதன் குதிப்பைச் சொல்லவும் வேண்டுமோ? அது போல மனம் எனும் குரங்கு ஆணவம், தாமதகுண மாகிய பேயினால் பிடிக்கப்பட்டு அடங்காமல் கண்டவாறு செல்கிறது என்பதை நம் ஐயா இப்பாடலில் கூறுகிறார். (118)

பெண்மணி பாகப் பெருமணி யேஅருள் பெற்றிகொண்ட
விண்மணி யான விழிமணி யேஎன் விருப்புறுநல்
கண்மணி நேர்கட வுள்மணி யேஒரு கால்மணியைத்
திண்மணிக் கூடலில் வீற்றோங்கு தெய்வ சிகாமணியே.

(பொ - ரை.) " பெண்மணிகளில் சிறந்து விளங்கும் உமா தேவியாரை இடப்பக்கத்தே கொண்ட பெருமணியே! அருள் தன்மையினை இயற்கையாகவே கொண்டு ஆகாயத்தே விளங்கும் சந்திர சூரியர்களைக் கண்களாகக் கொண்ட இறைவனே! என் ஆசைக்குரிய நல்ல கண்

மணிக்கு ஒப்பான கடவுள் மணியே! ஒரு முறை வன்மை மிக்க அழகிய மதுரைமா நகரில் மாணிக்கத்தை விற்றுச் சிறப்புடன் விளங்கும் தெய்வங்களின் நாயகனே" (எ - து.)

(அ - சொ.) பெண்மணி - உமாதேவி. பெற்றி - தன்மை. விண்மணி - ஆகாயத்தில் விளங்கும் சந்திர சூரியர். ஒருகால் - ஒருமுறை. மணி - மாணிக்கம். கூடல் - மதுரை.

(வி - ரை.) இறைவனுடைய கண்கள் மூன்றனுள் வலக் கண் சூரியனுக்கு ஒளியையும், இடக்கண் சந்திரனுக்கு ஒளியையும், நெற்றிக்கண் அக்கினிக்கு ஒளியையும் தருவன. இந்த உண்மையினைப் பரம வைணவரான பாரதம் பாடிய வில்லிபுத்தூராரும், "கல்வணக்கி முப்புரம் எரித்த முக் கண்ணினன் வலக்கண் அளித்துளான்" என்று கூறி யுள்ளனர், இதன் பொருள் மேருமலையை வில்லாக வளைத்து முப்புரங்களை அழித்த மூன்று கண்களுடைய சிவபெருமானின் வலக் கண்ணாகிய சூரியன் பெற்ற பிள்ளை கர்ணன் என்பது' இந்தக் குறிப்பைச் சிவப்பிரகாச சுவாமிகளும் "கண்களோ ஒன்று காலையில் காணும். மாலையில் ஒன்று வயங்கித் தோன்றும் பழிப்பின் ஒன்று விழிப்பின் எரியும்" என்று கூறினர். இந்தக் கருத்துகளே ஈண்டு "விண்மணியான விழி" எனப்பட்டது.

மதுரையில் வீரபாண்டியன் ஆட்சி புரிந்து வந்தான். அவனுக்குப் பட்டத்தரசியே அன்றிப் பல காதல் கிழத்தி யரும் இருந்தனர். அவர்களுள் பட்டத்தரசிக்கு ஒரு பிள்ளை பிறந்தது. காமக் கிழத்தியர்களுக்கும் பிள்ளைகள் பிறந்தனர். அரசன் வேட்டைக்குச் சென்றபோது அவனை ஒரு புலி கொன்று விட்டது. அடுத்துப் பட்டத்துக்கு உரியவன் பட்டத்

தரசியின் மகனே ஆவான். அதன் பொருட்டு அரச முடியைத் தேடுகையில், அஃது இருக்கவேண்டிய இடத்தில் இல்லாமல் போயிற்று. இதனைக் காமக் கிழத்தியர்களின் மைந்தர்கள் களவாடிக்கொண்டு சென்றனர். ஆகவே, வேறு மணிமுடி செய்ய மந்திரிமார்கள் முனைந்தனர். அம் முடிக்கு ஏற்ற நவரத்தினங்களை எங்குத் தேடுவதென்று வருந்திப் பட்டத்துக்குரிய இளவரசனுடன் மதுரைச் சொக்க லிங்கப் பெருமான் ஆலயத்திற்குப் புறப்பட்டனர். இள வரசனுக்கு இறைவர் திருவருள் புரிய நவரத்தன வணிகர் போல் வேடங்கொண்டு மணிப் பொதியுடன் எதிரில் வந்தனர். வந்தவர் தம்மிடம் அரசமுடிக்கேற்ற ஒன்பது வகை மணிகள் உண்டெனக் கூறி அந் நவரத்தினங்களின் சிறப்பையும் குணங்களையும் எடுத்து மொழிந்தனர். மந்திரி மார்களும் மைந்தனும் மகிழ்ந்து மணிவணிகனிடம் மணி களைப் பெற்றனர்.

இம்மணிகளைக் கொண்டு முடிசெய்து இளவரசனுக்கு மணிவணிகர் கட்டளை இட்டபடி அபிடேக பாண்டியன் எனப் பெயர் சூட்டி முடி புனைந்து மகிழ்ந்தனர். இதனைத் திருவிளையாடல் புராணத்துள் மாணிக்கம் விற்ற படலத்துள் விரிவாகக் காண்க. இந்த வரலாறே "ஒருகால் மணியைத் திண் மணிக் கூடலில் விற்றோர்க்கு தெய்வசிகாமணியே" என்னும் வரியில் அமைந்துளது.

சிவபெருமானின் திருவடிகளில் திருமால் முதலியோர் தம் முடியால் வணங்குகையில், இறைவன் திருவடிகள் அவர்களின் முடிகளுக்கு மணிபோல் அமைதலின், தெய்வ சிகாமணியே என இறைவன் குறிக்கப்பட்டான். (119)